நன்றி - நூலகத்திட்டம்


සරිනිහර්
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

**ஒட்டகத் தமிழர்! !**

ஒண்ட இடங்கேட்ட ஒட்டகமாய் இன்று
அண்டவந்த தமிழர் ஆகிவிட்டார் — பண்டைமுதல்
நாமிருந் தாண்ட நம் நாட்டில் கேட்கின்றார்
தாமிருந் தாளவொரு தளம் !

— ஈழமோகம்

இதழ் 159 நவம்பர் 12 — நவம்பர் 25, 1998 விலை ரூபா 10.00




## நுரைச்சோலையில் வடக்கு முஸ்லிம்களின் எழுச்சிப் பேரணி !

## கூட்டணியின் 'டூ'

## சோமாலியாவாகும் வன்னி !



வன்னி அகதி முகாமில்...

## தொடரும் தணிக்கை 161வது நாள்

நன்றி - நூலகத்திட்டம்



## படையினரை மீட்கும் மக்கள்!

நம்ப முடியவில்லைத் தான். ஆனால், உண்மை அதுவாக இருக்கிறது. ஒரு நாட்டின் தேசிய இராணுவத்தை, வெளிநாடுகளில் எல்லாம் பயிற்சியைப் பெற்றுக் கொண்ட ஒரு அரசாங்கப் படையை அப்பாவிப் பொதுமக்கள் அதுவும் எந்தப் படையினரால் ஆக்கிரமிப்பிற்கும், அடக்குமுறைக்கும், அழிப்பிற்கும் உள்ளாக்கப்படுகின்றனரோ அந்த அப்பாவிப் பொதுமக்கள், பாரிய இடப்பெயர்விற்கும், உயிர்பலிக்கும் உள்ளாக்கப்பட்ட அம்மக்களே மீட்கின்றனர் என்பதை நம்பமுடியவில்லை தான்!

தமிழ் மக்களை புலிகள் பணயம் வைப்பதாக எப்போதும் அரசும், மனித உரிமையாளர்களும் குற்றம்சாட்டி வந்திருக்கிறார்கள். ஆனால், தன் படைமுகாம்களை மக்கள் குடியிருப்பிற்கு மத்தியில் இராணுவம் அமைத்தது. (கிழக்கில் அதன் முகாம்கள் பல, இதற்கு நல்ல உதாரணங்கள்) அம்மக்களையே தன் முகாமிற்கு வரவழைத்து வேலை வாங்கியது. இப்போது உச்சக் கட்டமாக அவர்களின் உயிரையே பணயம் வைத்து தான் தப்பித்துக் கொள்ள முயல்கிறது.

தம்மை புலிகளிடம் இருந்து பாதுகாப்பதற்காக கப்பலில் மக்களை ஏற்றி வருவதும் இந்த ரீதியில் தான். அதைவிட அதனை ஊன்றிப் பார்ப்பவர்களுக்கு இன்னும் ஒன்று புரியும். ஒருவேளை தாம் தாக்கப்பட்டாலும், அதனையே சாக்காக வைத்து தமிழ் மக்களை புலிகளே கொல்கின்றனர் என ஊர் உலகத்திற்குப் பிரச்சாரம் செய்யலாம். அதுவும் தமிழ் மக்கள் மீதான கரிசனையில் அன்று. தமிழ் மக்களுடைய போராட்டம் அம்மக்களை அழிக்கிறது என்று கூக்குரலிடலாமல்லவா? அதற்காக ஒரு கல்லில் பல நூறு மாங்காய்களை அடிக்க முயல்கிறது அரசு. ஆனால், அதில் அடிபடும் மாங்காய்களாக போவது தமிழ் மக்களின் உயிரே என்பதையிட்டு அது கவலைப்படுவது இல்லை.

இவர்கள் தமிழ் மக்களை எந்தளவிற்கு முட்டாள்களாக்கப் பார்க்கின்றார்கள் என்பதற்கு ஈ.பி.டி.பியினரே நல்ல உதாரணம். யாழ். நகரில் மக்களுடன் படையினரையும் கப்பலில் ஏற்றி வருவதைக் கண்டிக்காமல், அதனைக் கண்டிக்கும் துணிவும் இல்லாமல் (அப்படிச்செய்தால் அவர்களின் கச்சையை யார் காப்பாற்றுவது?) யாழ்ப்பாணத்திற்கான போக்குவரத்து நின்றதற்கு புலிகள் மட்டுமே காரணம் என்பதைப் போல் கோஷம் போட்டார்கள். அதைவிட பகிடி என்னவென்றால், அச்செயலையும் செய்து விட்டு தம்முடைய தினமுரசு பத்திரிகையில் ஈ.பி.டி.பியினர் செய்யும் செயலை கண்டிப்பதுபோல் நக்கீரன் என்ற பெயரில் எழுதுகிறார் ஈ.பி.டி.பி. பா.உறுப்பினர். (நக்கீரனின் இயற்பெயர், இயக்கப்பெயர் என்னவென எழுதினால், பாவம் தம் முன்னூறாவது இதழ் வீரம் செறியும் என்று புலம்புவார் - அவரை விட்டுவிடுவோம்.)

ஆக, மொத்தத்தில் தமிழ் மக்களின் பயண விடயத்தில் அவர்களின் சமாதான வாழ்விற்காக யுத்தம் செய்து அழிக்கும் அரசும், அவர்களின் விடுதலைக்காகப் போராடும் புலிகளும், அவர்களின் பெயரைச் சொல்லி பிழைத்துக் கொண்டிருக்கும் தமிழ் இயக்கங்களும் எதுவுமே செய்யவில்லை என்பதுதான் துயரம்!

## விடுதலை என்பது...

வழக்கம்போல் தமிழ்க் கட்சி பயில்வான்கள் அம்மையாரை சந்திக்கிறார்கள். அம்மையார் புன்னகை பூத்து வரவேற்கிறார். இருக்காதா பின்னே? தாம் எது சொன்னாலும் தலையாட்டும் அற்ப பொம்மைகளைப் பார்த்தால் புன்னகை வராதா என்ன? வருகிறது. தமிழ்க்கூட்சி பயில்வான்கள் (தம் பயில்வான் பலத்தை தமிழ் மக்களிடம் மட்டுமே இவர்கள் காட்டுவார்கள் என்பது வேறு விடயம்) தமக்குள் யோசிக்கிறார்கள், என்னத்தைக் கூறியும் ஒன்றும் எடுபடப்போவதில்லை. எனவே ஏதாவது கூறி தமிழ் சனத்தை ஏமாற்றுவோம் என்று. ஆச்சுதா, யோசிச்சு, முடிஞ்சுதா. தமிழ் மக்களின் குறைகளை எடுத்தியம்பத் தொடங்குகிறார்கள். (அதில் தம்மால் ஏற்படுத்தப்பட்ட குறைகளை மறந்தும் சொல்லமாட்டார்கள். அந்தளவிற்கு இயக்க டிரெயினிங்) யாழ். மக்களின் போக்குவரத்து பற்றி கூறுகிறார்கள். அடிச்சு சொல்கிறார் அம்மையார். தம்மால் விமானத்திற்கு பாதுகாப்புக் கொடுக்க முடியாதாம். அப்ப வான்பரப்பு முழுதும் புலிகளின் கட்டுப்பாடு தானே என கேட்கவில்லை நம்முடைய பிரதிநிதிகள். தலையாட்டுகிறார்கள்...!

இப்படிப் போகிறது உரையாடல். இவர்கள் கேட்க அம்மையார் மறுக்க இவர்கள் அதற்குத் தலையாட்ட. இடையில் அற்புத உண்மையொன்றைச் சொன்னார் பாருங்கள் அம்மையார். வன்னிக்கு உணவு அனுப்பக் கேட்கும் போது அரச அதிபர்கள் தரும் விபரங்களை தான் நம்பாமல் படை அதிகாரிகள் தரும் விபரங்களைத் தான் நம்புவாராம். அப்ப எதற்கு அரச அதிபர் என்ற ஒருவரும், சிவில் நிர்வாகம் என்ற ஒன்றும். அதுவும் வன்னியில் படையினரின் கட்டுப்பாடு மிகக் குறைவாகவே இருக்கையிலேயே சிவில் நிர்வாக விடயங்களை முழுதாக அதனைத் தீர்மானிக்க அரசு அனுமதிக்கிறதில்லை எனும் போது அதன் இராணுவ வாதத்தின் அளவும், தமிழ் பிரதேசங்களை இராணுவ மயமாக்கி தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்து இராணுவ நிர்வாகத்தை நடாத்த முனையும் அதன் முயற்சியும் தெட்டத் தெளிவாகின்றது. ஆனால், இது பற்றியெல்லாம் நம் வெகுஜனப் பிரதிநிதிகள் கவலைப்படவில்லை. அதற்கும் தலையாட்டுகிறார்கள். அவர்களின் முழுக் கவனமும் எப்படி நாளைக்குப் பத்திரிகையில் அறிக்கை விடுவது என்பது பற்றியே.

சரி, சந்திப்பு முடிகிறது. ஜனாதிபதியார் தம்மை எல்லாம் சந்தித்து கௌரவப்படுத்தி விட்டார் எனும் பூரிப்பில் முகம் பெருத்து, கடவாய் தெரியும் வரை இளித்துக் கொண்டு வெளியே வருகிறார்கள். அரசின் இராணுவ மயப்படுத்தப்பட்ட இனவாத நலனிற்கு தம் முதுகை முண்டாகக் கொடுத்த திருப்தியில் வெளியே வருகிறார்கள். இன அழிப்புப் போரில் துப்பாக்கிகளிற்கு விசைகொடுத்த சந்தோஷத்தில் வெளியே வருகினம். அந்த நாள் முடிவடைகிறது.

வெளியே துயர்நிறைந்த வாழ்வோடு, அரைப்பட்டினி வயிரோடு போராட்ட வாழ்வை தொடர்கிறார்கள் மக்கள். நம்பிக்கை என்ற ஒன்றை மட்டுமே துடுப்பாக கொண்டு...

## இறுதித் தெரிவு...

எந்த ஒரு மக்கள் குழுவும் உலகில் அடிமைப்படுத்தப்பட்டுக் கிடந்ததில்லை. எந்த ஒரு தேசிய இனமும் தன் மீதான அடக்குமுறையை சகித்ததில்லை. போராடும், கிளர்ந்தெடும், அடிமைத் தளைகளை உடைத்தெறியும். அடக்கு முறையை பிரயோகிக்கும் அதிகார வர்க்கம் அவர்களைப் பட்டினிபோடும், வளப்பங்கீட்டை நிறுத்தும், அடிப்படை வசதிகளையும், கொடுக்காது நிறுத்தும். ஆனால், போர் மட்டும் நீளும். அதனால், மக்கள் நிலை மேலும் மோசமாகும். அதிலும் போர்க்கால சிறுவர் பற்றி சொல்லில் உரைக்க முடியா சோகங்களை சுமப்பார்கள் அவர்கள். எதற்காக தாம் பழிவாங்கப்படுகின்றோம் என்பது கூடத் தெரியாமல் அவர்கள் தவிப்பர்.

வன்னியிலும் அதுதான் நடக்கிறது. கிழக்கிலும் அதுதான் நடக்கிறது. தமிழ் சிறார்களின் உரிமைகளையும், அடிப்படையையும் இலங்கை அரசு மறுக்கிறது. பாடசாலைகளில் குண்டு போடுகிறது. முகாம் அமைக்கிறது. அவர்களிற்கான உணவு விநியோகத்தை நிறுத்துகிறது. பால் மா, போஷாக்கு உணவு என்பனவற்றை மறுக்கிறது. இன்னொரு எத்தியோப்பா அங்கு உருவாகாதா என இனவாதம் தவிப்புடன் காத்திருக்கிறது. அங்குள்ள சிறார்களின் நல்ல அமைதியான வாழிவிற்கான சகல தெரிவுகளையும் நிராகரிக்கிறது. அச்சிறார் என்ன செய்வர்?

அவர்களின் இந்த துயர் பற்றி எல்லாம் அக்கறைபடாத அரசு, அவர்களின் வயிறு ஒட்டி உலர்ந்து பட்டினிச் சாவிற்கு போவதை கண்டும் காணாது இருக்கும் அரசு, அவர்கள் புலிகளில் இணைந்தால் மட்டும் "ஐயோ எனதருமை தமிழ் சிறுவர் போரில் ஈடுபடுகிறார்களே..." எனக் கூக்குரலிடுகிறது. லக்ஷ்மன் கதிர்காமர் கதறுகிறார்.

ஆனால், அவரின் கதறல் ஒலியின் சுட்டுவிரல் எதனைச் சுட்டிநிற்கிறது எனப் புரிகிறது. தமிழ்ச் சிறார்கள் பட்டினியால் இறப்பதை சகிக்கும் இவர்கள் - வேறு வழியின்றி சிறுவயதிலேயே போராட முனையும் இவர்களினால் புலிகளின் ஆட்பலம் அதிகரிக்கப் போகின்றதே என்பதையிட்டே கவலைப்படுவது புரிகிறது. இந்த ஆட்பலம் தம் இனவாத வேரைத் தகர்த்துவிடுமோ என்னும் பயத்தின் குரலாக எமக்குப் புரிகிறது. நாகர்கோயிலில் பாடசாலை மீது குண்டு போடும் போது எமக்கு இந்தக் குரல் கேட்கவில்லை. 15, 16 வயது சிறார்கள் கைதாகி காணாமல்போகையிலும் இந்தக் கதறல் குரல் கேட்கவில்லை. ஆனால், இப்போது கேட்கிறது. ஏன் - மக்களுக்கே தெரியும் அதன் காரணம்.

இவர்கள் என்ன கத்தினாலும், ஐ.நா. மன்றம் போன்ற ஏகாதிபத்திய அதிகார பீடங்கள் எத்தனை கண்டனங்கள் கொண்டு வந்தாலும், உரிமை மறுக்கப்படும் வரை வாய்ப்புகள் நிராகரிக்கப்படும் வரை சிறார்கள் யுத்தத்தில் ஈடுபடுவதைத் தவிர்க்க முடியாது. அது முற்றிலும் பிழையான தெரிவாக இருப்பினும், ஏன் யுத்தத்தில் ஈடுபடுகின்றோம் என புரியாமல் போராட இணைந்தாலும் கூட அத் தெரிவு மட்டுமே அவர்கள் முன் இருக்கும் கடைசி தெரிவாக இருக்கும் வரை இதனை யாரும் தடுத்துவிட முடியாது.

கா.சூ.தீரன்

## வெலிக்கடையிலிருந்து காணாமல் போன மர்மம்!

வெலிக்கடைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பத்மநாதன் என்று அழைக்கப்பட்ட சிவநாதன் என்ற நபர் அங்கிருந்து காணாமல் போயிருப்பதாக வெலிக்கடைச் சிறைச்சாலை வட்டாரங்கள் நவ.07ம் திகதி அறிவித்துள்ளன. ஹோட்டல் கலதாரிக் குண்டு வெடிப்பின் முக்கிய நபரான விடுதலைப் புலி உறுப்பினரான காந்தன் என்பவர் பற்றித் தகவல் தெரிந்திருந்தும் பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கத் தவறியதன் காரணமாகவே இவர் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். ஏற்கெனவே பாணந்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர் அண்மையிலேயே வெலிக்கடைச் சிறைக்கு மாற்றப்பட்டிருந்தார். யாழ்ப்பாணத்து முகாம்களில் இளைஞர்கள் தூக்குப் போட்டுக் கொள்கிறார்கள். வெலிக்கடைச் சிறையிலிருந்து காணாமல் போகிறார்கள். எப்படியிருக்கிறது மனிதரின் உயிர்வாழும் உரிமை?

## புலிக் கோயபல்ஸ்!

நாட்டை பிரிப்பதற்கு எதிராக யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினரின் உளவியல் பலத்தை குலைக்கு முகமாக புலிகள் சில நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். பாதுகாப்பு படைகளதும் மற்றும் சாதாரண மக்களதும் உளவியலைப் பாதிப்புக்குள்ளாக்க 'கோயபல்ஸ்' நடைமுறைப்படி ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த நடவடிக்கைகட்கு தெற்கில் ஒரு சில நபர்கள் முழு ஆதரவு வழங்கியுள்ளனர்.

கோயபல்ஸ் நடைமுறை என்பது நாசி ஜேர்மன் படைப்பிரிவு ஆணையாளர், ஹிட்லரின் பிரச்சாரப்பிரிவு அமைச்சர் பதவியை வகித்த கோயபல்ஸ் இரண்டாம் உலகப் போரில் கடைப்பிடித்த நடைமுறையாகும் என நவ.2ம் திகதிய தினமின பத்திரிகை தனது ஆசிரிய தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

புலிகள் இயக்கம் ஆரம்பித்துள்ள இந் நடைமுறையின் பிரதான ஆயுதம பொய்யாகும். இது மிகவும் சூட்சுமமான முறையில் புலிகளால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதன்படி யுத்தத்தில் இராணுவத்திற்கு ஏற்பட்ட அழிவுகளை பெரிதாகக் காட்டுகின்றனர். அவற்றை வீடியோவில் படம் பிடிக்கின்றனர். தெற்கில் ஏஜென்டுகள் மூலம் அவற்றை காட்டுகின்றனர். புலிகளின் இந்நடவடிக்கைகளுக்கு முழு ஆதரவையும் பெற்றுக் கொள்ளும் தொடர்பூடகங்களும் உள்ளன. இவர்கள் அனைவரதும பிரபாகரனதும் நோக்கம் ஒன்றாகும். இராணுவத்தினரின் உளவியல் பலத்தைக் குறைப்பதே அது. யாழ்ப்பாணம் மீண்டும் புலிகளிடம் என்றவாறான பிரச்சார நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. அதே போல் புலிகள் விமானங்கள் வைத்திருக்கின்றார்கள் என்றவாறான செய்திகளும் பிரச்சாரப்படுத்தப்படுகின்றன. இத் தேசத் துரோகிகள் புலிகளுடன் இணைந்து மேற்கொள்ளும் கோயபல்ஸ் நடைமுறை நிச்சயம் தோல்வியுறும். யாழ் குடாநாடு மீண்டும் புலிகள் வசம் சேராது என அனுருத்த நிச்சயப்படுத்தியுள்ளார் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## பிரதம குருவும் கைது!

தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய பிரதம குரு க.உலககுருநாதனும் (42) அவரது சகோதரர் க.சடாட்சரநாதனும்(36) செப். 16ம் திகதி இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 16ம்திகதி இரவு இவர்களது வீட்டிற்குச் சென்ற பொலிகண்டி இராணுவ முகாமைச் சேர்ந்த படையினரே இவர்களைக் கைது செய்துள்ளனர். இதன் பின்னர் நடைபெற்ற விசாரணைகளைத் தொடர்ந்து சடாட்சரநாதன் இரு நாட்களின் பின் விடுதலை செய்யப்பட்டார்.

தற்போது பிரதம குரு உலககுருநாதன் காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இவர் ஏழு பிள்ளைகளின் தந்தையாவார்.

இது தொடர்பாக இவரது மனைவி உ.புஷ்பராணி யாழ்ப்பாணத்திலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு முறைப்பாடு செய்ததையடுத்து அவர்கள் மேற் கொண்ட நடவடிக்கையின் பேரில் பிரதம குரு காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக படையினர் ஒப்புக் கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



மூத்த பத்திரிகையாளரும் மறுமலர்ச்சி காலப் படைப்பாளியுமான அ.செ.முருகானந்தம் அவர்கள் ஒக்.26ம்திகதி திருமலையில் காலமானார்.

அண்மையில் திருமலையில் நடைபெற்ற வடக்கு கிழக்கு மாகாணசபையின் இலக்கிய விழாவில் வைத்து கௌரவிக்கப்பட்ட அ.செ.மு.சொற்பகால சுகயீனத்தின் பின் காலமானார்.

1995 யாழ்ப்பாண இடப்பெயர்வின் போது இடம் பெயர்ந்து திருமலை உவர்மலையில் வந்து தங்கியிருந்த இவர் அப்போது காலமாகிவிட்டார் என்ற செய்தி வெளிவந்து தமிழ் இலக்கிய உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கியிருந்தது தெரிந்ததே. 'நான் இறந்தால் எப்படி என்னைப் பற்றி எழுதுவார்கள் என்பதைப் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது எனக்கு மகிழ்ச்சியே' என்று அவர் சரிநிகருக்குத் தெரிவித்திருந்தார். அண்மையில் சரிநிகருக்கு அவர் அளித்த செவ்வி ஒன்று வெளியாகியிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். தமிழ் இலக்கிய உலகு ஒரு மூத்த கலைஞனை இழந்து நிற்கிறது!

நன்றி - நூலகத்திட்டம்



## சந்திரிகாவின் தென்னாபிரிக்கத் தொலைக்காட்சிப் பேட்டி:

# சங்கரியின் வாலும் குமாரின் சவாலும்!



தென்னாபிரிக்கா தொலைக்காட்சி சேவை ஒன்றிற்கு ஜனாதிபதி சந்திரிகா வழங்கியுள்ள பேட்டி ஒன்று தமிழ் அரசியல் வட்டாரத்தில் பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. தமிழ் மக்களை இந்த நாட்டில் பூர்வீகக் குடிகளல்ல என்று அவர் அந்தப் பேட்டியில் தெரிவித்திருந்தார். அவரது இந்தப் பேச்சு இலங்கை ரூபவாஹினியிலும் அப்படியே ஒளிபரப்பாகியிருந்தது தெரிந்ததே.


ஆனால், இந்தப் பேட்டியில் ஜனாதிபதி இப்படிக் கூறினாரா என்ற கேள்விக்கு வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ''இல்லை அவர் அப்படி ஒரு போதும் கூறவில்லை. அப்படி தவறுதலாக தன்னும் கூறக்கூடியவர் இல்லை என்று தெரிவித்திருந்தார்.

தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் அவர்களால் முதல் முதலாக அம்பலத்துக் கொண்டு வரப்பட்ட இந்த விடயம் தொடர்பாக கருத்துக் கேட்ட போது, தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி, ''நான் அறிந்த வரை அது உண்மையல்ல. அது பொன்னம்பலத்தின் ஒரு கட்டுக்கதை'' என்று தெரிவித்திருந்தார்.

ஆனால், பொன்னம்பலம் விட வில்லை. தமிழர் விடுதலைக்கூட்டணி தலைவர்கள் மற்றும் ஈ.பி.டி.பி. டக்ளஸ் தேவானந்தா ஆகியோரை தனது வீட்டிற்கு அழைத்து ஜனாதிபதியின் பேட்டியின் ஒளிப்பேழையை போட்டுக்காண்பித்தார்.

அப்பேழையில் சந்திரிகா அம்மாயார் சொன்ன வாசகங்கள் இவைதான்; இலங்கையில் பூர்வீகக்குடிகளல்லாத ஒரு சிறுபான்மை சமூகத்தவர் தனி நாடு கோருகிறார்கள். (They are wanting a seperate state - a Minority Community which is not the Origianl People of the Country) கதிர்காமர் வால் பிடிப்பது சரி, ஆனால், ஆனந்த சங்கரி அவர்களுக்கு என்ன வந்தது?

## விக்கிரமபாகு கருணாரத்ன எழுதுகிறார்...




அரசியல் வங்குரோட்டுத்தனம் கொடிதிலும் கொடிது. அதிலும், சமூக ஜனநாயகவாதிகள் மத்தியில் காணப்படும் வங்குரோட்டு நிலைமை தான் அதைவிட மோசமானது. எல்லாவிதமாக கடினங்கள், தடைகள் மத்தியிலும் தமிழ் விடுதலைப் போராளிகள் வீர தீரத்துடன் யுத்தத்தை எதிர்நோக்கி சலிக்காமல் போராடுகிறார்கள் என்பது யாருக்கும் மிகத் தெளிவாகத் தெரிந்த விடயம். அவ்வாறான நிலையில். லங்கா சம சமாஜக் கட்சியின் பொதுச் செயலாளரும், விஞ்ஞான, தொழிநுட்ப அமைச்சருமாகிய பற்றிவீரக்கோன் விடுத்துள்ளதொரு அறிக்கையைப் பார்க்கும்போது அது எவ்வளவு துரோகத்தனமானது என்பது வரலாற்றுக்குரியதாகவுள்ளது. தமிழ் மக்கள் ல.ச.ச.கவுக்கு ஏதும் குறிப்பிடத்தக்களவுக்கு ஆதரவு வழங்குகின்றனர் என்பதல்ல. ஆனால், அவர்களில் ஒரு சிலராவது ஆதரித்தாலும், அவர்கள் வயிற்றிலும் புளியைக் கரைத்த கதைதான் பற்றி வீரக்கோன் விடுத்த அறிக்கை.

பொதுஜன முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சியின் ஆலோசனைகளை ஏற்று ஒரு உடன்பாட்டுக்குவர வேண்டும் என்பது தான் பற்றி வீரக்கோன் விடுத்த அறிக்கை தெரிவிக்கும் நிலைப்பாடாகும். முன்னாள் பிரித்தானிய வெளிநாட்டு இணை அமைச்சர் ஸியாம் பொக்ஸ் இவ்விடயம் தொடர்பாக கூறியிருந்ததற்கு அப்பால் சென்று விட்டார் பற்றி வீரக்கோன். உடன்படிக்கை எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை பொக்ஸ் கூறவில்லை. ஆனால், இப்போது ஐ.தே.க. கூறுவது இறுதியானது எனும் பாணியிலேயே பற்றி வீரக்கோனின் அறிக்கை அமைந்திருக்கிறது. 13வது திருத்தத்தின் கீழான ஏற்பாடுகளின் அளவுக்குத் தானும் தீர்வை நோக்கிச் செல்வதற்கு தயாராயில்லை என்ற வகையிலேயே ஐ.தே.கட்சியின் அறிக்கைகள் வெளியாகியுள்ளன.

அதாவது வடக்கு கிழக்கு இணைப்பு போன்ற விடயங்களை ஐ.தே.க. ஏற்றுக்கொள்ளவில்லை. எனவேதான், பற்றியின் நிலைப்பாட்டை நாம் பார்த்தால், 13வது திருத்த ஏற்பாடுகளிலிருந்தே அது பின் நோக்கி நகர்வது புலப்படும். அதாவது, முதலாளித்துவவாதிகள் ஒன்று சேர்ந்து ஒரு போலித்தீர்வை தமிழ் மக்கள் தொண்டைக்குள் திணித்து ஏகாதிபத்திய சக்திகளின் உதவி ஒத்தாசையுடன், தமிழர் விடுதலைப் போராட்டத்தை நகர்த்த வேண்டும் என்பதே அவர் முன்வைத்துள்ள ஆலோசனையின் அர்த்தமாகும்.

எனவே, நாம் அதே ஏமாற்று வித்தையை நோக்கியே நகர்ந்து கொண்டிருக்கிறோம். அரசாங்கம் முன்வைத்துள்ள 'பொதி' சாதாரணமான ஜனநாயக சீர்திருத்தத்தினை ஏற்படுத்துவதற்கு ஏதுவாகவே அமையவில்லை. உண்மையில் அது அன்னிய இராணுவ உதவிகளைப்பெற்று தமிழர் விடுதலைப் போராட்டத்தினை தவிடுபொடியாக்குவதற்காக கையாளப்படும் முகமூடி என்றே இனங்காணப்பட வேண்டியுள்ளது. இதனிடையில் தமிழ் மக்களில் அக்கறை செலுத்தும் பாங்கில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உணர்வுகளை மையமாக வைத்து பற்றி வீரக்கோன் கருத்துத் தெரிவித்துள்ளார். ஒரு வகையில், அவர் கூறியுள்ளது சரிதான் எனலாம். ஏனென்றால், பற்றி வீரக்கோனின் துரோகத்தனத்திற்கும், தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் நிலைப்பாட்டிற்கும் உடன்பாடு உண்டு என்பதையே அது எடுத்துக் காட்டுகிறது.

ஆனால், பற்றி வீரக்கோனுக்காக யாரும் பரிதாபப்படுவதைத்தவிர வேறு ஏதுவும் செய்வதற்கில்லை. ஏனென்றால், தமிழ் மக்கள் இன்னும் தோற்கடிக்கப்படவில்லை என்பது அவருக்குத் தெரியவில்லை. மாங்குளத்தில் அரசாங்கம் கொடியேற்றியதில் எதுவித அர்த்தமுமில்லை. கிளிநொச்சி - பரந்தனில் பலத்த அடியைக் கொடுப்பதற்காக அவகாசம் எடுக்கும் வகையில் தந்திரோபாயமாக விடுதலைப் புலிகள் பின்வாங்கியதாலேயே மாங்குளம் கைவிடப்பட்டது.

இவ்வாறான நிலையிலேயே அனுருத்தவும், அவருடைய ஆலோசகர்களும் மாங்குளத்தைக் 'கைப்பற்றிய' கொண்டாட்டத்தில மூழ்கியிருந்தனர். அதேநேரத்தில் மாங்குளத்திற்குப் பதிலாக கிளிநொச்சியில் முதுகுமுறியத் தாக்குலை நடத்துவதற்கு திட்டமிட்டுக் கொண்டிருந்தனர். வைத்த குறி தவறாமல், கிளிநொச்சிப் பகுதியை சிங்களப் படைகளிடமிருந்து கைப்பற்றியது மட்டுமல்லாமல் தமக்கு அதிகம் தேவைப்படக்கூடிய பெருவாரியான ஆயுதங்களையும் தமதாக்கிக் கொண்டனர். கிளிநொச்சியில் கிடைத்த அடி எவ்வளவு மோசமானதென்றால், அதன்பின்னர் தான் எல்லோரும் சமாதானத்தைப் பற்றிப் பேசுகின்றனர். சம்பிக்க ரணவக்க கூறும் ஒரு விடயத்தை மட்டும் நான் ஏற்றுக் கொள்கிறேன். அதாவது இத்தைகய அமோக வெற்றியையீட்டிய பின் நிபந்தனையற்ற. பேச்சுவார்த்தைகளுக்கு புலி இணங்க மாட்டாது என்பதாகும். ரணவக்க கூறுவது யாதெனில், தமிழீழ விடுதலைப் புலிகள் எனும் சக்திவாய்ந்த யுத்த எந்திரமானது எந்த விதமான குறிகோளோ, கொள்கையோ அற்ற அப்பாவி சிங்கள படையினருக்கு நிகரானவர்கள் அல்ல என்பதாகும்.

இந்த நிலையில் பார்க்கும் போது, சிங்களப் படை என்று ஒன்றில்லை என்று கூறலாம். அதாவது த்ற்போதைய படையானது சுரண்டல் பிசாசுகளின் படையாக அதாவது, கூலிப்படையாகவே, ஏகாதிபத்தியத்தின் படையாகவே அது விளங்குகிறது.

தமிழர் தாயகத்தில் இருந்து வாபஸ் பெறுவதைத் தவிர, தமிழ் மக்களின் சமத்துவத்தையும், சுயாட்சி அதிகாரத்தையும், சுயநிர்ணய உரிமையையும் ஏற்றுக்கொள்வதைத்தவிர, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு வேறு ஏதும் இருப்பதாக எனக்கு தெரியவில்லை. இந்த நிலையில் 'பற்றி வீரக்கோன்'னின் கூற்றுக்கள் உப்புச்சப்பு அற்றவையாகும். பிரபாகரனின் அடக்கு முறையை எதிர்நோக்குவதற்காக, சிங்கள மக்களை முழு அளவில் அணிதிரட்ட வேண்டும் என்றே சம்பிக்க ரணவக்க ஆலோசனை முன்வைக்கிறார். இவரைப்போல கடந்த தசாப்தங்களில் பல இனவெறியர்கள் சிங்கள மக்களை அணிதிரட்டும் படலத்தில் ஈடுபடுத்த முற்பட்டு, சிங்கள மக்களுக்கே துரோகமிழைத்துள்ளனர்.

இன்றைய பிரச்சினைக்கு இரண்டு பக்கங்கள் உள்ளன. கிளிநொச்சியில் ஏற்பட்ட வீழ்ச்சியானது. ஒன்றில், வெற்றி அல்லது தோல்வி எனக்கொள்ளப்பட வேண்டும். அதுதான் ஒருவர் புரட்சியில் இணைவதா அல்லது எதிர்ப்புரட்சியில் இணைவதா என்பதைத் தீர்மானிக்கும்.

நன்றி - நூலகத்திட்டம்



# நுரைச்சோலையில் இடம் பெயர்க்கப்பட்ட முஸ்லிம்கள் எழுச்சிப் பேரணி !

- பெயஸி -



உடமாகாணத்தில கி.பி. 7ம் நூற்றாண்டிலிருந்து பாரம்பரிய வரலாற்றைக் கொண்டிருந்த, 1990ம் ஆண்டு ஒக்டோபர் வரை அமைதியாக வாழ்ந்து கொண்டிருந்த முஸ்லிம் மக்கள் எவ்வித காரணமுமின்றி குறுகிய காலக்கெடுவிற்குள் புலிகளால் பலவந்தமாக வெளியேற்றப்பட்டதானது இன்று கறை படிந்த வரலாறாகி எட்டு வருடங்களாகி விட்டது.

இவ் எட்டு வருடங்கள் உருண்டோடி விட்ட பொழுதிலும் இம் முஸ்லிம் அகதிகளின் வாழ்வில் குறிப்பிட்டுச் சொல்லுவதற்கு எவ்வித முன்னேற்றங்களும் இடம் பெறவில்லை. நாளாந்தம் உலர் உணவு நிவாரணம், நோய்நொம்பளம், பிள்ளைகளின் கல்வி, குடிசைகள் வேய்தல் எனப் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து களைத்து மெலிந்து கூனிககுறுகி சலிப்படைந்தவர்களாக இத்துயரங்களிலிருந்து எமது வாழ்க்கை மீளுமா? என்ற ஏக்கத்துடன் இம்மக்களின் வாழ்க்கை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

ஆனால் எப்பொழுது மீள்குடியேற்றம் சாத்தியமாகும்? நாட்டில் சமாதானமும் ஏற்பட வேண்டும் சமாதானம் அமைதி ஏற்படும் வரை பாதுகாப்பான உரிமைகளுடனான மீள்குடியேற்றம் கேள்விக்கிடமாகவே இருக்கும்.

எனவே யுத்தம் நடந்து கொண்டிருக்கும் வரையில் சமாதானம் ஏற்படாது. சமாதானம் ஏற்படும் வரையில் வடக்கு முஸ்லிம்களுக்கும் இந்நாட்டில் அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் சகல இன மக்களுக்கும் பாதுகாப்பு மீள் குடியேற்றம் நடைபெறப் போவதில்லை.

எனவே யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்குரிய கடப்பாடு இனப்பிரச்சினையாலும் யுத்தத்தினாலும் பாதிக்கப்பட்டவர்கள் என்பதினால் வடக்கு முஸ்லிம்களுக்கு இருக்கின்றது.

இதன் காரணமாகவே, வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு (NMRO) வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு எட்டு வருடங்கள் முடிவடைந்திருக்கும் இந்நாட்களை நினைவுபடுத்துவதற்காக ''சமாதானத்திற்கான வேண்டுகோள்'' எனும் தலைப்பில் விழிப்புணர்ச்சி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. என்று அவ் அமைப்பின் செயலாளர் பி.எ.எஸ். சுப்யான் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளுக்கெல்லாம் மகுடமாக, வெளியேற்றப்பட்டு எட்டு ஆண்டுகள் பூர்த்தியடைந்ததை முன்னிட்டும், நாட்டில் விரைவாக சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு, அரசாங்கத்திற்கும், எதிர்கட்சிக்கும் புலிகளுக்கும் ஏனைய சகல அரசியல் கட்சிகளுக்கும் வேண்டுகோள் விடுப்பதற்காகவும், நாட்டில் சமாதானம் ஏற்பட்டு வடக்கு முஸ்லிம்கள் தாயக மண்ணுக்கு மீளச் சென்று குடியேறும் வரையில் சகல அடிப்படைத் தேவைகளையும் நிறைவேற்றித் தருமாறு வேண்டியும் கடந்த ஒக்டோபர் 31ம் திகதி பி.ப. 3 மணிக்கு கற்பிட்டி வீதியில் அமைந்துள்ள ஆலம்குடாச் சந்தியிலிருந்து சமாதானத்தை வலியுறுத்தும் பேரணி ஒன்றை நடித்தியது. இப்பேரணியில் வடக்கு முஸ்லிம் அகதிகள் ஆயிரக்கணக்கில் ஒன்று சேர்ந்தனர். யுத்தத்திற்கு எதிரானதும் அகதி வாழ்க்கையின் இடர்களை வெளிப்படுத்தக்கூடியதுமான பாதைகளை ஏந்தியவர்களாகவும், கோஷங்களை எழுப்பியவர்களாகவும் அணியணியாக நுரைச்சோலை முஸ்லிம் வித்தியாலய மைதானத்தை வந்தடைந்தனர்

இம்மைதானத்தில் NMRO அமைப்பின் தலைவர் ஏ எல் புர்ஹானுத்தின் தலைமையில் பொதுக்கூடம் இடம் பெற்றது. இப்பொதுக் கூட்டத்தில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்காகவும் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் வடக்கு முஸ்லிம்கள் சொந்த மண்ணுக்கு மீளச் செல்வதற்குமாக கலந்து கொண்ட பேச்சாளர்களினால் அறைகூவல் விடுக்கப்பட்டது.

மோர்ஜ் அமைப்பின் செயலாளரும் 'யுக்திய' பத்திரிகையின் ஆசிரியருமான சுனந்த தேசப்பிரிய தனது உரையில், ''அகதிகளாக வாழ்வது இந்த உலகத்தில் ஒரு மோசமான நிலை தான் சொந்த மண்ணிலிருந்து நீங்கள் விரட்டப்பட்டதானது இந்த உலகத்திற்கே மறக்க முடியாத செய்தியாக உள்ளது. இந்நாட்டில் நீண்ட காலத்திற்கு அகதிகளாக நீங்கள் வாழ முடியாது யுத்தத்தினால் அகதிகளாக்கப்பட்ட நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். இலங்கையில் சிங்களம், தமிழ், முஸ்லிம் மக்கள் இன பேதமின்றி சமாதானமாக வாழ வேண்டும். நீங்கள் தாயக மண்ணுக்குச் சென்று சுதந்திரமாக வாழ விரும்பும் செய்தியை அரசாங்கத்திற்கும் எதிர்க்கட்சிக்கும் புலிகளுக்கும் ஏற்றி வைக்க வேண்டும். அதற்கு இவ்வாறான நடவடிக்கைகள் பொருத்தமானதாக அமைகின்றது இன்று சி.சு.கட்சியும் - ஐ.தே.கட்சியும் உதைப்பந்தாட்டம் விளையாடிக் கொண்டிருக்கின்றன. நீங்கள் பந்து மாதிரி இரண்டு கட்சிகளுக்கிடையில் உதைபட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.

நீங்கள் சொல்லுங்கள் நாங்கள் உதைபந்தாட்டம் விளையாடக்கூடிய பந்துகளல்ல நாங்கள் எங்கள் சொந்த மண்ணுக்குப் போக வேண்டும் என்பதை அழுத்தம் திருத்தமாக ஆணித்தரமாகச் சொல்லுங்கள் சொந்த மண்ணுக்குச் செல்வதாக இருந்தால் சர்வதேச மத்தியஸ்தம் இல்லாமல் சொந்த மண்ணுக்கு சென்று நீங்கள் வாழ முடியாது என்பதனை பேச்சு வார்த்தைகளுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு சொல்லி வையுங்கள்''

''இந்நாட்டின் அரசாங்கம் யுத்தத்தை முடித்து விட்டதாகக் கூறுகிறது யுத்தத்தை முடிப்போம் என்றும் கூறுகிறது. இந்நாட்டின் அரசாங்கம் பதவி ஏற்பதற்கு முன்பு 4500 படையினர் வரையிலேயே இறந்து இருந்தார்கள். இந்த அரசாங்கம் பதவி ஏற்று ஒரு வருடத்தில் 12,000 படைவீரர்கள் இறந்துள்ளார்கள். இதனை இந்த அரசாங்கம் உணர வேண்டும். ஐ.தே.கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி என்ற பேதமின்றி மக்களின் பிரச்சினைகள் அணுகி ஆராயப்பட்டு தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.

இதனை தொடர்ந்து மதங்களுக்கு இடையிலான சமாதான அமைப்பின் செயலாளரும் ''தர்ம வேதி'' அமைப்பின் செயலாளருமான ராஜா தர்மபால உரையாற்றினார். அவரது உரையிலிருந்து

'நீங்கள் வடக்கு பிரதேசத்திலிருந்து அகதிகளாக வந்திருப்பவர்கள் எனும் போது வேதனை அடைகின்றோம். உண்மையில் உலகத்தில் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கக் கூடிய பல்வேறு யுத்தம் காரணமாக அந்நாடுகளில் வாழும் மக்கள் தங்களுடைய நாடுகளுக்குள்ளேயே அகதிகள் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் அப்படி வாழ்கின்ற மக்களின் ஒரு பகுதியினராக நீங்களும் ஆகிவிட்டிருக்கின்றீர்கள். உங்களது சொந்த நாட்டிலேயே ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் சென்று வாழ வேண்டிய ஒரு நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளீர்கள் என்பதை நினைக்கும் போது மனம் வருந்துகிறோம்.

→ 6

## மகாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள்

**தீர்மானம் 1**

சமாதானத்தையும் இனங்களுக்கிடையிலான நல்லுறவையும் வேண்டி நிற்கும் இம் மாபெரும் மக்கள் பேரணி 15 வருட காலத்திற்கு மேலாக நீண்டு கொண்டிருக்கும் கொடிய இவ்யுத்தம் ஒரு இலட்சம் முஸ்லிம் மக்களையும் இன்னும் பத்து இலட்சம் தமிழ், சிங்கள மக்களை உள் நாட்டிலும் வெளி நாட்டிலும் அகதிகளாக்கி துயர் மிகு சூழலில் துன்பமுடன் வாழ்கின்ற நிலைக்கு தள்ளியுள்ளது.

இந்த யுத்தம் 60,000 மேற்பட்ட மக்களின் உயிர்களை பறித்து 20,000க்கு மேலான மக்களை ஊனமுற்றவர்களாக்கி அன்றாடம் ஆயிரம் ஆயிரம் மக்களின் உயிர்களை பலிகொண்டு கோரத் தாண்டவம் ஆடிக் கொண்டிருக்கிறது.

இவ யுத்தம், நாட்டின் வளங்கள் அனைத்தையும் நாசமாக்கி பல கோடி ரூபாயகள் மக்களின் பணத்தை சூறையாடிக்கொண்டிருக்கிறது.

இவ்யுத்தம் எல்லா இன மக்களினதும் சமூக, கலாசார, பொருளாதார, அரசியல் சூழல்களை சிதறடித்து சமூக கட்டமைப்புக்களை முற்றாகவே சீரழிக்கின்றது.

இவ்யுத்தம் எத்தனையோ வழிகளில் நேரடியாகவும் மறைமுகமாகவும் சகல மக்களினதும் வாழ்க்கையில் பல்வேறு விதமான பாதகங்களை ஏற்படுத்தி எமது நாட்டை ஒட்டுமொத்தமாகவே மீண்டும் ஒருபோதும் எழுந்து வர முடியாதபடி பாதாளத்தை நோக்கி இட்டுச் செல்லுகிறது.

எனவே, இவ்யுத்தம் உடனடியாகவே முடிவுறுத்தப்பட்டு தேசிய இன பிரச்சினைக்கு, நியாயமானதும், ஜனநாயக ரீதியிலுமான தீர்வைக் கொண்டு வருவதற்கு நாட்டில் இரு பிரதானமான கட்சிகளும் எல்.ரீ.ரீ.ஈயும் உடனடியாக முன் வர வேண்டுமென வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

**தீர்மானம் 2**

சமாதானத்தையும் இனங்களுக்கிடையிலான நல்லுறவையும் வேண்டி நிற்கும் இம்மாபெரும் மக்கள் பேரணி 1990ம் ஆண்டு முதல் அகதிகளாக்கப்பட்டு தமது பாரம்பரிய வாழ்வு சமூக கட்டமைப்பு அடிப்படை வாழ்க்கை வசதிகள் அற்ற ஒரு சமூகம் என்னும் வகையில் அதன் சமூக கலாசார வளர்ச்சிகள் இடை நிறுத்தப்பட்டு அகதிகள் எனும் பெயரில் அனைத்து அந்தஸ்த்துகளையும் இழந்து வாழும் வடபகுதி முஸ்லிம் மக்களின் சகல உரிமைகளும் வழங்கப்பட்டு உத்தரவாதப்படுத்தப்படுவதுடன் அதற்குரிய சகல ஏற்பாடுகளையும் அரசாங்கம் செய்து தரவேண்டும் என வேண்டி நிற்கின்றது.

**தீர்மானம் 3**

சமாதானத்தையும் இனங்களுக்கிடையிலான நல்லுறவையும் வேண்டி நிற்கும் இம்மாபெரும் மக்கள் பேரணி, இம்மக்கள் மீண்டும் தமது சொந்த மண்ணுக்குத் திரும்பி தன்மானமுள்ள மக்களாக வாழ்வதற்குரிய உத்தரவாதத்தையும் உரிமையையும் தேசிய சர்வதேச சமூகம் உத்தரவாதப்படுத்த வேண்டும். அதில் அரசாங்கமும் எல்.ரீ.ரீ.ஈ யும் சர்வதேச சமூகமும் தனது கடமைப்பாட்டை செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகின்றது.

**தீர்மானம் 4**

சமாதானத்தையும் இனங்களுக்கிடையிலான நல்லுறவையும் வேண்டி நிற்கும் இம்மாபெரும் மக்கள் பேரணி யுத்தத்தின் கோரப் பிடியில் சிக்கித் தவிக்கும் இலங்கை மக்களின் சுபீட்சத்திற்காக எல்லா மதங்களும் அமைப்புகளும் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டும் என்பதுடன் சர்வதேச சமூகம் தனது நேசபூர்வமான ஒத்துழைப்பை இவ் விடயத்தில் வழங்க வேண்டும் என அழைப்பு விடுகின்றது.

**தீர்மானம் 5**

சமாதானத்தையும் இனங்களுக்கிடையிலான நல்லுறவையும் வேண்டி நிற்கும் இம்மாபெரும் மக்கள் பேரணி ''யுத்தத்தின் மூலம் சமாதானம்'' எனும் வாதம் எமது நாட்டிற்கு நிரந்தர சமாதானத்தை பெற்றுத்தராது என்பதை வற்புறுத்தி பேச்சு வார்த்தை மூலமாக பிரச்சினை தீர்க்கப்படுவதற்கான உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது.

**தீர்மானம் 6**

சமாதானத்தையும் இனங்களுக்கிடையிலான நல்லலுறவையும் வேண்டி நிற்கும் இம்மாபெரும் மக்கள் பேரணி, சமாதானத்திற்கான இயக்கத்திற்கு இந்நாட்டின் சகல இன மக்களும் கைகோர்த்துக் கொள்ள வேண்டும் என திறந்த மனதுடன் அழைப்பு விடுப்பதுடன் சகல இன மக்களினது நேச உறவுகளைக் கட்டியெழுப்புவதற்கும் ஒரே நாட்டு மக்கள் என்ற கோதாவில் பரஸ்பரம் ஒத்துழைத்து வாழ்கின்ற உணர்வுகளை உயிர்பெறச் செய்வதற்கும் சகல அமைப்புக்களினதும் மதங்களினதும் தனிநபர்களினதும் அர்ப்பணிப்பும் பங்களிப்பும் முன்எப்பொழுதும் இல்லாத அளவிற்கு பாரியளவில் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்றது.

நன்றி - நூலகத்திட்டம்



## கூட்டணியின் போர் முழக்கம்:

# கெட்டிக்காரன் புளுகு...?

நீங்கள் கொஞ்சம் கூட எதிர்பாராத சம்பவம், எதிர்பாராத கணத்தில் உங்கள் முன் நடக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது உங்களுக்கு உடனே தோன்றும் உணர்வு என்னவாக இருக்கும்? முதலில் உங்கள் கண்களையும், காதுகளையும் நம்ப மறுப்பீர்கள். பிறகு நீங்கள் கனவு காணவில்லையா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வீர்கள். இவையெல்லாவற்றையும் மீறி அது நிஜமாகவே நடக்கிறது தான் என்றால், இதற்கும் ஏதாவது உள்நோக்கம் இருக்கக் கூடும் என்று சந்தேகப்படுவீர்கள்.

இப்படியான ஒரு மனோநிலை உங்களுக்கு கடந்த வாரப் பத்திரிகைகளைப் பார்த்தபோது ஏற்பட்டிருக்கக்கூடும். தமிழர் விடுதலைக் கூட்டணியும், ரெலோவும் இந்த அரசாங்கத்தின் புதிய வரவு செலவுத்திட்டத்தை எதிர்த்து வாக்களிக்கப்போவதாக பத்திரிகைகளில் வெளிவந்த செய்தி இந்த உணர்வு நிலைக்கு உங்களைத் தள்ளியிருக்கக் கூடும். கூடவே ஈ.பி.டி.பி.யும் தனது அரசுக்கான ஆதரவைப் பற்றி மறு பரிசீலனை செய்யப்போவதாக அறிவித்திருப்பது, உங்களுக்கு இந்த அரசாங்கம் கவிழ்ந்து போகிற ஒரு காட்சியை மனதில் தோன்றவைத்திருக்கக் கூடும். ஆங்கில வாரப்பத்திரிகை ஒன்று, ஆட்சியை கோபங் கொண்டுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி கவிழ்க்கும் என்று எழுதியிருந்தது.

அரசாங்கத்தின் புதிய வரவு செலவுத் திட்டத்தை கடந்த 5ம்திகதி பாராளுமன்றத்தில் சமர்பித்த பிரதி நீதியமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், யுத்தத்தை தொடர்வதற்கேற்ற விதத்தில் இந்த வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்திருக்கிறார் என்பதுவும், இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியில் தீர்வுகாணும் முனைப்பே அதில் வெளித்தெரிகிறது என்பதுமே இவர்களது இந்த முடிவுக்குக் காரணம் என்று அது எழுதியது.

ஆக, இந்த முடிவை தமிழர் விடுதலைக் கூட்டணி எடுத்திருக்கிறது. ரெலோ எடுத்திருக்கிறது. கூடவே ஈ.பி.டி.பியும் எடுக்கலாம் என்று சொல்லப்படுகிறது.

உங்களுக்கு நம்பமுடியாமல் இருக்கலாம். ஆனால், இந்தச் செய்தி உண்மை என்பதை நீங்கள் நம்பித்தான் ஆக வேண்டும். ஏனென்றால், அப்படி ஒரு தீர்மானம் தமிழர் விடுதலைக் கூட்டணி மத்திய குழுக்கூட்டத்தில் எடுக்கப் பட்டுத் தான் இருக்கிறது.

ஆனால், இந்த ஆனாலுக்குப் பின் ஒரு பெரிய கேள்வி எழவே செய்கிறது. ஆம், ஏன் தமிழர் விடுதலைக் கூட்டணி இப்படி ஒரு முடிவை இப்போது எடுக்க வேண்டும்?

இந்த அரசாங்கம் யுத்தத்தை திரும்ப நடத்தத் தொடங்கியபின் அரசியல் தீர்வுக்கான முயற்சிகள் எல்லாம் உடைப்பில் போடப்பட்டுவிட்டன என்பது ஒன்றும் புதிய விடயம் அல்ல. இலங்கையின் வரலாற்றிலேயே மிக அதிகமான தொகையை இந்த ஆண்டு - 1998 (57 பில்லியன் ரூபா) 'பாதுகாப்பு' செலவீனமாக செலவு செய்துள்ளது இந்த அரசாங்கம். தவிரவும், யுத்த தளபாடங்கள் வாங்குதல், வன்னிப்பகுதி மக்கள் மீதான உணவுத் தடை அல்லது மானிய வெட்டு, பெருமளவுக்கு யுத்தத்திற்கான ஆட்சேர்ப்பு என்று அது இந்த ஆண்டு முழுவதுமாகச் செய்த செயல்களை அறியாதவர்கள் இருக்க முடியாது. ஆயினும், தமிழர் விடுதலைக் கூட்டணியோ பிற கட்சிகளோ இந்த அரசாங்கம் அரசியல் தீர்வல்ல, இராணுவத் தீர்வே இனப்பிரச்சினைக்கு தீர்வு எனக் கொண்டு செயற்பட்டுவருவதை ஒப்புக் கொண்டதாகத் தெரியவில்லை. அவை தொடர்ந்தும் தமது ஆதரவை அரசாங்கத்திற்கு தெரிவித்துக் கொண்டே வந்துள்ளன. எதிர்கட்சியில் இருந்தபடி, அரசாங்கத்தை ஆதரிக்கும் மாபெரும் ஜனநாயகப்பணியில் அவை ஈடுபட்டிருந்தன.

ஜீ.எல். பீரிஸுக்கு இந்த வரவுசெலவுத் திட்டத்தைச் சமர்பிக்கும்போது தெளிவாகத் தெரிந்த விடயங்கள் இரண்டு. ஒன்று அடுத்த ஆண்டில் தேர்தல் வருகிறது என்பது. மற்றையது யுத்தத்தை தொடர்ந்து நடத்தவேண்டும் என்பது. இந்த இரண்டையும் அடிப்படையாகக் கொண்டே அவரது வரவு செலவுத் திட்டத்தின் சாரத்தை அவர் வெளிப்படுத்தினார். விவசாயிகளுக்கு ஊக்குவிப்பு வசதி, சமுர்த்தி ஆதரவுப்பணம் பெறுவோர்க்கு வழங்கும் தொகையில் அதிகரிப்பு, அரச ஊழியர்கட்கு சலுகைகள் என்று அவை ஒரே மக்கள் மயத்தோற்றத்தை தருகின்றன. அவரது கூற்றுப்படி அடுத்த ஆண்டில் 1,15,000 பேருக்கு வேலை வாய்ப்பு வசதி வழங்கப்படும்.

ஆனால், இவை எல்லாம் நடைமுறைக்குச் சாத்தியமானவையா என்ற கேள்வி உங்களிடம் எழக் கூடும். நடைமுறைச் சாதியமானவற்றை மட்டும் தான் வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்க வேண்டும் என்றும், அப்படி இல்லாதவற்றை அறிவித்தால் அது தண்டனைக்குரிய குற்றம் என்று சொல்லும் எந்தச் சட்டமும் இங்கு இல்லை. உண்மையில், வரவு செலவுத் திட்டம் கவர்ச்சியாக இருப்பதற்கு எது எதெல்லாம் சொல்லப்பட முடியுமோ அவற்றை எல்லாம் சொல்வது தான் ஒரு நிதியமைச்சரின் கடமை. அதுவும் அடுத்த ஆண்டு தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் ஒரு சூழ்நிலையில், வரவு செலவுத் திட்டம் கவர்ச்சிகரமாகத் தயாரிக்கப்படாவிட்டால் எப்படி மக்களை ஏமாற்ற முடியும்?

மறுபுறத்தில் யுத்தத்திற்கு 47 பில்லியன் ரூபா நிதி மட்டுமே ஒதுக்கப்பட்டிருக்கிறது. நடப்பாண்டில் 57 பில்லியன் ரூபா செலவை எடுத்துக் கொணடுவிட்ட யுத்தச் செலவு அடுத்தவருடம் எப்படிக் குறையப்போகிறது என்று நீங்கள் ஆச்சரியப்படலாம். ஆச்சரியப்பட்டு அதற்கு விளக்கம் கேட்டால், உங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கும் ஒரு விளக்கத்தை பிரதி நிதியமைச்சர் தந்துவிடுவார் என்பது உங்களுக்கு ஞாபகமிருக்கட்டும். பாதுகாப்பு வரியை 1 வீதத்தால் கூட்டி விட்டுள்ள இந்த வரவு செலவுத் திட்டம், யுத்தத்துக்கான மொத்த செலவு 60 பில்லியனைத் தாண்டக் கூடும் என்று தெரிந்து கொண்டே தயாரிக்கப் பட்டிருக்கிறது என்றபோதும், 47 பில்லியனே திட்டமிடப்பட்ட செலவாக தெரிவிக்கிறது. அரையாண்டு காலத்தின் பின் அதை இவ்வான்டு 7 பில்லியனால் கூட்டியது போல கூ.ட்டிக் கொள்ளலாம் என்பது அவருக்குத் தெரியாததா என்ன?

சர்வவல்லமை பெற்ற ஜனாதிபதி ஆட்சியும், அவசரகாலச் சட்டமும் துணை நிறகும்வரை அதைச் செய்வதற்கு என்ன தடை வந்துவிடப்போகிறது?

ஆக, யுத்தத்தை தீவிரமாக நடத்துவது, அப்படி நடத்துவதன் மூலமும், கவர்ச்சிகரமான திட்டங்களை அறிவிப்பதன் மூலமும் சிங்கள மக்கள் மத்தியில் பலத்த அரசியல் ஆதரவை அடுத்த தேர்தல் ஆண்டில் பெற்றுக்கொள்வது என்பன ஜீ.எல். பீரிஸினதும் அரசாங்கத்தினதும் திட்டம்.

சரி, அப்படியானால், தமிழர் விடுதலைக் கூட்டணி இந்த வரவு செலவுத் திட்டத்தை எதிர்ப்பதற்கு காரணம் என்ன?

இதுவரை காலமும் இல்லாத தீவிரமும், போர்க்குணமும் இப்போது தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் பிறகட்சிகட்கும் ஏற்பட்டதற்குக் காரணம் என்ன?

காரணம் என்ன என்பதை தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்கள் சொல்வார்கள். ஜீ.எல்.பீரிஸ் சொல்லும் அதே அழகுடன் சொல்வார்கள்.

ஆனால், எமக்கு எழும் சந்தேகம் இதுதான்.

அவருக்கு இருந்த அதே தேர்தல் பற்றிய எதிர்பார்ப்புத் தான் இவர்களது போர்க்குணத்திற்கும் காரணமோ என்று தோன்றுகிறது.

'ஒரு வேளை உண்மையாகவே இந்தக் கட்சிகள், அரசாங்கத்தின் யுத்தமூலம் பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கத்தை இப்போது தான், அதுவும் ஜீ.எல்.பீரிஸ் வரவு செலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த பின் தான் தெரிந்து கொண்டார்களோ என்னவோ' என்றும் ஒரு கணம் நீங்கள் நினைக்கக் கூடும்.

ஆம், நீங்கள் அப்படி நினைப்பது சரிதான். ஏனென்றால், அவர்களுக்கு பல விடயங்கள் புரிவதில்லை. வடக்கு கிழக்கு வாழ் மக்களுக்கு, அப்பாவி மக்களுக்கு தெரிந்த பல விடயங்கள் கூட அவர்களுக்குத் தெரிவதில்லை.

அரசியல் தீர்விற்காக ஒரு தீர்வுப் பொதியை அரசாங்கம் தயாரித்த போது அதன் நோக்கம் அவர்களுக்குப் புரியவில்லை. அந்தத் தீர்வுப் பொதியில் பக்கம் பக்கமாக இருந்த கொஞ்ச நஞ்ச சரத்துகளும் பிடுங்கப்பட்டபோது அதன் நோக்கம் அவர்களுக்குப் புரியவில்லை. யாழ்ப்பாணத்தினைக் கைப்பற்றி அங்கு சிங்கக்கொடி ஏற்றியபோதும், அதன் நோக்கம் அவர்களுக்குப் புரியவில்லை. அங்கு உள்ளூராட்சித் தேர்தலை வைத்த போதும், அதன் பிறகு தீர்வுப்பொதியை உடைப்பில் போட்டுவிட்டு ஜயசிக்குறுவை தொடங்கியபோதும், அதன் நோக்கம் அவர்களுகக்குப் புரியவில்லை.

இறுதியில் டேர்பன் நகரில் ஜனாதிபதி தமிழர்கள் இலங்கையின் பூர்வீகக்குடிகள் அல்ல என்று பேசியபோதும், அதுபற்றி ஆட்சேபித்து தமிழ்ப் பத்திரிகைகளும், தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலமும் காட்டுக் கத்தலாக கத்தியபோதும் அவர்களுக்குப் புரியவில்லை - கிட்டத்தட்ட ஒரு மாத காலத்துக்கு.

அனுராதபுரத்திற்குச் சென்று யுத்தத்தினை நடாத்தும் இராணுவத்தினருக்கு ஆதரவு தெரிவித்த ஜனாதிபதி, லயன் எயார் விமானத்தில் கொல்லப்பட்டவர்கள் தொடர்பாக மௌனம் சாதித்த போதும் சரி, வன்னியில் மானிய வெட்டை நடாத்தியபோதும் சரி அவர்களுக்கு அது புரியவில்லை.

வவுனியாவில் தற்காலிக தங்குமிடம் என்ற பேரில், தடைமுகாம்களை அரசாங்கம் நடாத்திவருகின்றபோதும் அவர்களுக்கு அது புரியவில்லை.

ஆம், அவர்கள் வாய்க்குள் விரலை வைத்தால் சூப்பத்தெரியாத குழந்தைகள். தமிழ் மக்கள் தான் அந்தக் குழந்தைகளை நம்பி ஏமாந்து போனார்கள்.

அந்தக் குழந்தைகள் இப்போது அரசாங்கத்துடன் 'டூ' விட்டிருக்கின்றன. ஒரு பல்லி மிட்டாய்க்கோ, கன்டோஸ் சொக்கலேட்டுக்கோ சரியாகிப் போய்விடுகிற 'டூ' இது.

தமிழ் அரசியல் கட்சிகள் அரசாங்கத்துடன் சார்ந்து நிற்கும் நிலையை நம்புவதை விட ஆபத்து அவர்கள் அதை எதிர்ப்பதை நம்புவது என்பது அனுபவப் பாடம். மண் குதிரை நம்பி ஆற்றிலிறங்கிய நிலைக்கு இது இட்டுச் செல்லலாம்.

ஆனாலும், கூட, இந்த 'டூ'வைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. விட்டது 'டூ' என்றாலும், குறைந்த பட்சம் அதை விட்டதற்காக சொல்ல ஒரு உண்மையான காரணத்தை அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

அந்த அளவிற்கு அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

எதற்கும் இந்த 'டூ' எவ்வளவுக்கு உறுதியான ஒன்று என்பதை பாராளுமன்றத்தில் வரவு செலவுத்திட்டம் விவாதத்துக்கு வரும் வரை பார்த்திருப்போம்.

> **ஆம், அவர்கள் வாய்க்குள் விரலை வைத்தால் சூப்பத்தெரியாத குழந்தைகள். தமிழ் மக்கள் தான் அந்தக் குழந்தைகளை நம்பி ஏமாந்து போனார்கள்.**
>
> **அந்தக் குழந்தைகள் இப்போது அரசாங்கத்துடன் 'டூ' விட்டிருக்கின்றன. ஒரு பல்லி மிட்டாய்க்கோ, கன்டோஸ் சொக்கலேட்டுக்கோ சரியாகிப் போய்விடுகிற 'டூ' இது.**

## தப்பின புலிகள்...!

திருகோணமலை நகரில் பாதுகாப்புத் தரப்பாரின் கண்காணிப்பு தீவிரப் படுத்தப்பட்டுள்ளது. அண்மைக்காலமாக வழமைக்கு மாறாக, திடுதிப்பென்று வாகனத்தில் வந்து சந்திகளில் இறங்கும் பொலிசார் சந்தேகமான இளவட்டங்களை விசாரணைக்குட் படுத்துகிறார்கள். சில இளைஞர்கள் பொலிஸ் நிலையம் வரை கொண்டு செல்லப்பட்டு விசாரிக்கப்படுவதுமுண்டு.

சந்தேகமறத் தம்மை அடையாளம் காட்டக்கூடிய இளைஞர்கள் இலகு விசாரணைகளுடன் தபபி விடுகிறார்கள். ஏனைய இளைஞர்கள் சற்று சிரமப்பட்டுதான் மீள வேண்டியிருக்கிறது. மாவீரர் தினம் நெருங்குவதால் நகருக்குள் ஏதாவது அசம்பாவிதம் நடந்து விடக்கூடாது என்பதில் பாதுகாப்பு தரப்பார் கவனமாக இருப்பதாகத் தெரிகிறது.

எனினும், கடந்த வெள்ளிக்கிழமை மாலை மீன்பிடிக்கச் சென்றவர்களது வெளியினை இயந்திரங்கள் எட்டு கடலில் வைத்து புலிகளால் ஏற்றிச் செல்லப்படதாக அறியக் கிடைக்கிறது. இவ்வாறு வெளியினை இயந்திரங்களை பறிகொடுத்தவர்கள் அனைவரும் நகர்புற மீனவர்கள். சிங்கள மீனவர்களும் இதில் அடங்கும். கோணேச மலைக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த வேளையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றதாக மீனவர்கள் தெரிவிக்கிறார்கள்.

இதேவேளை 7ம்திகதி காலை சல்லி ஏழாம் வட்டாரத்தில் வைத்து பாதுகாப்புத் தரப்பால் விடுதலைப் புலி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். பெருந்தொகையான இராணுவத்தினர் சுற்றிவளைத்த போதும் இறந்தவருடன் கூட வந்த இருவர் தப்பிவிட்டனர். அவர்களைப்பிடிக்கமுடியவில்லை. இறந்தவர் ராஜன் என அழைக்கப் படுபவர் எனவும் அவரது இயற் பெயர் கார்த்திகேசு வில்லவராயர் எனவும் கூறப்படுகிறது.

வடபகுதிக்கான கப்பற்சேவையை நடாத்தக்கோரி வடபகுதி பயணிகள் பிரதேசசெயலாளருடாகவும், சம்பந்தப்பட்ட அதிகாரியூடாகவும் அரசுக்கு நெருக்கடி கொடுத்து வருகிறார்கள் எனவும் தற்போதைய நிலையில் கப்பற் போக்குவரத்துக்கான அறிகுறிகள் எதுவும் தெரியவில்லையெனவும் தொடர்புடைய அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள்.

## யார் கொடுத்த உரிமை?

திருகோணமலை உவர் மலையைச் சேர்ந்த மகாதேவன் இராஜேந்திரம் ஈ.பி.டி.பி. கட்சியின் நீண்ட கால உறுப்பினர். இவர் இரண்டு பெண்களைத் திருமணம் செய்த குற்றத்திற்காக ஈ.பி.டி.பியினரால் சிறைவைக்கப்பட்டார். கடந்த 5.11.98 அன்று இவர் சிறையிலிருந்து தப்பிவந்து மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் சரணடைந்தார். அங்கு கடமையில் இருந்த சிறி என்பர் ராஜேந்திரனை அழைத்துச் சென்று ஈ.பி.டி.பி. யாழ் மாவட்ட பொறுப்பாளர் கே.வி.கே. ஜெகனிடம் கையளித்துள்ளார். இதற்கு சிறி கூறும் காரணம் நான் அவரை வெளியே விட்டிருந்தால் ஈ.பி.டி.பியினர் அவரை அடித்தே கொன்றிருப்பார்கள். ஏனெனில், திருமணம் செய்தது நெடுந்தீவுப் பெண்ணை. நெடுந்தீவு ஈ.பி.டி.பியின் கட்டுப்பாட்டிலே உள்ளது என்றார். அது சரி, சிறீதரனுக்கு இந்த உரிமையைக் கொடுத்தது யார்?


நன்றி - நூலகத்திட்டம்

# ரணில்: இந்தப் பூனையும் பால் குடிக்குமா?

— ஸிராஜ் மஷ்ஹூர்

> தனது தலைமைத்துவத்தின் கீழ் ஐ.தே.க. வந்த போது அம்பாறை முஸ்லிம்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்க இரண்டரை மாதம் பொறுத்திருந்ததாகக் கதையளக்கிறார். ஆனால் கட்சியின் சிரேஸ்ட தலைவர் ஏ.சீ.எஸ். ஹமீத் கட்சித் தவிசாளர் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்த போது அதை மௌனமாக ஏற்றுக் கொண்டவர்தான் இவர். போதாதற்கு கட்சித் தவிசாளராக முஸ்லிம் அங்கத்தவர் ஒருவரே நியமிக்கப்பட்டு வந்த கட்சியின் மரபை மீறி கருஜெயசூரியவை நியமித்த பெருமையும் இவரையே சாரும்.

''கடந்த பொதுத்தேர்தலில் சிறுபான்மை இன வாக்குகளின் பூரண ஆதரவுடனேயே அம்பாறை மாவட்டத்தில் நாம் வெற்றி பெற்றோம். இதனை நாம் ஒருபோதும் மறந்து விடவில்லை. ஆனால் துரதிர்ஷ்டவசமாக முஸ்லிம் பிரதிநிதி ஒருவர் தெரிவாகும் நிலை இல்லாது போய் விட்டது வேதனையானதே.''



''30,000 வாக்குகளை அள்ளித் தந்த அம்பாறை முஸ்லிம்களுக்கு முன்னாள் ஜனாதிபதி விஜேதுங்க தேசியப் பட்டியலில் குறைந்தது ஒரு பிரதிநிதியையாவது வழங்கியிருக்க வேண்டும். ஆனால் அது நடக்கவில்லை. அம்பாறை முஸ்லிம் பிரமுகர்களுக்கிடையே காணப்பட்ட குத்து வெட்டுக்கள் இதற்குக் காரணமாக அமைந்து விட்டது.''

''ஐ.தே.க. எனது தலைமைத்துவத்தின் கீழ் கொணரப்பட்ட போது தேசியப் பட்டியலில் அம்பாறை முஸ்லிம்களுக்கென பிரதிநிதித்துவம் வழங்க சந்தர்ப்பம் கிட்டியது, அம் மாவட்டத்தில் ஒருவரை நியமிக்க தேசியப் பட்டியலில் காலியான இடத்தை நிரப்பாது இரண்டரை மாதம் பொறுத்திருந்தேன். ஆனால் அங்கேயுள்ள பிரமுகர்கள் மீண்டும் தமக்குள்ளே முட்டி மோதிக் கொண்டனர். எனக்கு வேறு வழி தெரியாத நிலையில் இளைஞர் ஒருவரைக் கொண்டு வெற்றிடத்தைப் பூர்த்தி செய்து விட்டேன்.''

''தற்போதைய நிலையில் தேசியப் பட்டியலில் எவரையும் விலகச் செய்து அந்த வெற்றிடத்தை அம்பாறை முஸ்லிம்களுக்கு வழங்க முடியாத சூழ்நிலை உள்ளது.''

''எமது கட்சியை நம்பியுள்ளோரை நாம் வாழ வைப்போம். அவர்களைப் பாதுகாப்போம். நீங்கள் எவரும் நம்பிக்கை இழக்க வேண்டியதில்லை

''அமைச்சர் அஷ்ரஃப் இன்னும் ஒன்றரை வருடங்களுக்குள் செய்து கொள்வதையெல்லாம் செய்யட்டும். நாம் ஆட்சிக்கு வந்ததும் உங்கள் பிரச்சினைகளுக்கு முடிவு கட்டுவோம். தமிழ், முஸ்லிம் வாக்காளர்கள் ஒன்றுபட்டு அடுத்த பொதுத் தேர்தலில் அம்பாறையில் சிறுபான்மை எம்.பி.க்களைத் தெரிவு செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

அவ்வாறான நிலை உருவாகினால் தேசியப் பட்டியலில் மேலும் ஓர் எம்.பி,யை வழங்கி கௌரவிக்க ஐ.தே.க. ஆயத்தமாக உள்ளது. அது மட்டுமல்ல பொறுப்பு வாய்ந்த ஓர் அமைச்சரையும் எதிர்கால ஐ.தே.க. அரசில் நியமிப்போம்.'' (தினகரன் 22.10.98).

மேற்கண்டவாறு கூறியிருப்பவர் வேறு யாருமல்ல. சாட்சாத் ரணில் விக்கிரமசிங்கவே தான். அண்மையில் ஐ.தே.க. விலிருந்து பெருமளவு முஸ்லிம்கள் வெளியேறி, மு.கா.வில் சேர்ந்ததனால் மேலெழுந்துள்ள அம்பாறை முஸ்லிம்களது பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் பற்றிய பிரச்சினை தொடர்பாகப் பேசும போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். இந்தப் பிரச்சினையில் தான் மிக நேர்மையாகவே நடந்து கொண்டதாகவும் அம்பாறை ஐ.தே.க. முஸ்லிம் தலைவர்கள் தான எல்லாவற்றையும் கெடுத்து விட்டனர் என்றும் கூறி பழியை அவர்களது தலையில் போட முற்படுகிறார். ரணில் விக்கிரமசிங்கவின் இந்தக கூற்றை அவதானிக்கும் எவருக்கும் ''இந்தப் பூனையும் பால் குடிக்குமா?'' என்பது தான் உடனடியாக ஞாபகத்திற்கு வரும்

இந்தப் பிரச்சினை மேலெழுவதற்கு முன்கை எடுத்துக் கொடுத்தவரே ரணில் விக்கிரமசிங்க தான். அம்பாறை மாவட்ட முஸ்லிம்களுக்கு நியாயமாகவே உரித்தான பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் கோரி அப்பிரதேச ஐ.தே.க. முக்கியஸ்தர்கள் குழுவொன்று ரணிலை அண்மையில் சந்தித்த போது கெட் அவுட்'' என்று அவர்களை அழாக் குறையாக விரட்டிய அதே ரணில் தான் இப்போது இவ்வாறு திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்.

தனது தலைமைத்துவத்தின் கீழ் ஐ.தே.க. வந்த போது அம்பாறை முஸ்லிம்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்க இரண்டரை மாதம் பொறுத்திருந்ததாகக் கதையளக்கிறார். ஆனால் இதே காரணத்திற்காக கட்சியின் சிரேஷ்ட தலைவர் ஏ.சி.எஸ். ஹமீட் கட்சித் தவிசாளர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்த போது அதை மௌனமாக ஏற்றுக் கொண்டவர் தான் இவர். போதாதற்கு கட்சித் தவிசாளராக முஸ்லிம் அங்கத்தவர் ஒருவரே நியமிக்கப்பட்டு வந்த மரபை மீறி கரு ஜயசூரியவைத் தவிசாளராக நியமித்த பெருமையும் இவரைச் சாரும்

இந்தப் பிரச்சினை இவ்வளவு வளர்வதற்குக் காரணம் ரணிலின் நடத்தை தான். அம்பாறை முஸ்லிம்களுக்கு பிரதிநிதித்துவம் கோரிக் கோரிச் சலிப்பூட்டுமளவுக்கு அவர்களை ஏமாற்றியவர் இவர். இப்போது கட்சியிலிருந்து பலர் பிரிந்து போன தன் பின்பு காலம் கடந்து ஞானம் பேசுகிறார்

அம்பாறை முஸ்லிம்களது 30,000 வாக்குகளையும் கிள்ளுக் கீரை என ரணில் நினைக்கலாம் ஆனால், விகிதாசரத் தேர்தல் முறையில் அவை தான் தீர்மானிக்கும் வாக்குகளாக உள்ளன. இது காலவரை தயாரத்ன மட்டுமே எம்.பி. யாகத் தெரிவு செய்யப்பட்டு வந்த நிலை மாறி முஸ்லிம்களது இந்த 30,000 வாக்குப் பலத்தால் பக்மீ வெல, கலப்பத்தி போன்றோரும் பாராளுமன்றம் நுழைய வழியேற்பட்டது.

ஐ.தே.க. விற்கு பாராளுமன்றத்தில் இரு ஆசனங்கள் மேலதிகமாகக் கிடைக்க வழி வகுத்த அந்த 30,000 வாக்குகளுக்குப் தேசியப் பட்டியலில் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவரை எம்.பி.யாக நியமிக்காததற்கு இப்போது ரணில் சிறு பிள்ளைத் தனமாக நியாயம் கூறுகிறார் அம்பாறை கட்சிப் பிரமுகர்களின் குத்து வெட்டுகள் தான் காரணமாம். ஒரு பொறுப்புள்ள கட்சித் தலைவராக இருந்து இதற்கு ஒரு தீர்க்கமான முடிவை எடுக்க முடியாத தனது கையாலாகாத் தனத்தை இதன் மூலம் பகிரங்கமாகவே அவர் ஒப்புக் கொள்கிறார். கட்டுப்பாடான ஒரு கட்சிக்குள் அதன் தலைவர் கலந்தாலோசனையின் மூலம எடுக்கப்படும். முடிவின் பிரகாரம் ஆணையிடும் போது அதை அங்கததவர்கள ஏற்றுக கொள்வது தான் பொது வழக்கு, ஆனால் நாங்கள் அப்படி அல்ல என்று கூறி தனது ஆளுமைக் குறைவை ரணில் ஏற்றுக் கொள்கிறாரா? தனது கட்சிக்குள்ளேயே பதவிக்காக குத்து வெட்டு நடக்கிறது என்று அந்தக் கட்சித் தலைவரே ஏற்றுக் கொள்கிறார் என்பது எவ்வளவு வேடிக்கையான விஷயம்.

முஸ்லிம்கள் பரம்பரை பரம்பரையாக ஐ.தே.க. ஆதரவாளர்களாக இருந்து வருபவர்கள். கிழக்கில் மு.கா.வின் வருகைக்குப் பின்னர் இதில் கணிசமான மாற்றம் நிகழ்ந்தது. ஆனால் தென்னிலங்கையில் இன்றும் பழைய கதைதான். 94ல் சந்திரிக்கா அலை வீசிய போது மட்டும் இதில் குறிப்பிடத்தக்க மாற்றம் தெரிந்தது. அப்போது கூட அங்கத்தவராக அமைச்சர் பௌசி மட்டும் தான் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டார். கடந்த காலங்களில் பெரும்பாலான மாவட்டங்களில் முஸ்லிம்களது வாக்குகள் தீர்மானிக்கும் வாக்குகளாக அமைந்து ஐ.தே.க. வெற்றியீட்டக் காரணமாய் அமைந்தது. இந்த உண்மைகளைக் கருத்திற் கொண்டாவது ரணில் முஸ்லிம்களுக்கு நியாயம் வழங்கியிருக்க வேண்டும்.

ரணில் அம்பாறை முஸ்லிம்களை மட்டும் ஏமாற்றவில்லை முழு இலங்கை முஸ்லிம்களையும் ஏமாற்றுகிறார் தனது குட்டு வெளிப்பட்டு விடுமோ எனப் பயந்து இப்போது தான் நிரபராதி எனச் சாதிக்க முனைகிறார். அம்பாறை முஸ்லிம்களுக்கு கண்ணுக்கு முன்னே அநியாயம் செய்யும் ஐ.தே.க. தலைமைத்துவம் மற்ற மாவட்ட முஸ்லிம்களுக்கும் அநியாயம் செய்ய மாட்டாது என்பதற்கு என்ன உத்தரவாதம்?

இந்தக் கருத்தை ஏனைய கட்சிகள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, ஐ.தே.க. முஸ்லிம் வாக்குகளைத் திருப்பி விடுமோ என்று பயந்ததாலேயே ரணில் இப்போது இப்படி இறங்கி வந்து பேசுகிறார்.

தேசியப் பட்டியலில் வெற்றிடம் ஏற்பட்டால் பாராளுமன்றத்தில் அம்பாறை முஸ்லிம்களுக்கு பிரதிநிதியொருவரை ஐ.தே.க. நியமிக்கும் என்று ரணில் கூறியுள்ளார் தற்போதைய பாராளுமன்றத்தின் ஆயுட் காலம் முடிவடைவதற்கு இன்னும் சொற்ப காலமே உள்ள போது இவ்வளவு காலமும் இல்லாத ஒரு பிரதிநிதித்துவம் இனியெதற்கு? அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்லிம்களுக்கென பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் இல்லாத குறையை நிவர்த்தி செய்ய எதிர் காலத்தில் முறையான திட்டமொன்றை வகுத்துச் செயற்படவுள்ளதாக வேறு ரணில் பூச்சாண்டி காட்டுகிறார். ஜே.ஆர். ஜயவர்த்தனவின் பாசறையில் வளர்ந்த அவரிடம் குருவின் பண்பு இருக்கத் தானே செய்யும்.

இவ்வாறு பேரினவாதக் கட்சிகளால் முஸ்லிம்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டே வந்திருக்கின்றனர். அதற்கு ரணில் தலைமையிலான ஐ.தே.க.வும் எந்த விதத்திலும் சளைத்ததல்ல என்பது மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஐ.தே.க. வை நம்பியுள்ளோரை ரணில் வாழ வைப்பாராம். யாரும் நம்பிக்கையிழக்க வேண்டியதில்லையாம். இதற்குப் பிறகும் ஐ.தே.க வை நம்புவதற்கு என்ன இருக்கிறது?

---

4→

## நுவரைச் சோலை...

''இச் சந்தர்ப்பத்தில் இந்நாடு முழுக்க பௌத்தர்களுக்கு சொந்தமானது என்ற ஒரு பகுதியினர் இந்நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். நானும் கூட சிங்கள பௌத்த சமய பிரிவை சேர்ந்தவர் என்றாலும் கூட நாங்கள் என்ன கூறுகிறோம் என்றால் இந்நாடு தனியான ஒரு குறிப்பிட்ட இனத்தை சேர்ந்தவர்களின் நாடு இல்லை. இந்நாட்டிலே தமிழ், முஸ்லிம் சிங்கள மற்றும் பல்வேறு மதத்தைச் சேர்ந்தவர்கள் இங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் இந்நாட்டு மக்களாகவே இருக்க வேண்டும் என்று ஆணித் தரமாக எடுத்துக் கூறுகின்றோம்

இங்கே ஒரு முககியமான விடயத்தை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன் இந்நாட்டிலேயே இருக்கக் கூடிய பிரதான அரசியல் கட்சியின் தலைவர்கள் ஒரு புறத்தில் மதிப்புக்குரிய சந்திரிக்கா பண்டாரநாயக்க அவர்கள், மறுபுறத்தில் ரணில் விக்கிரமசிங்க. இவர்கள் இருவரும் இந்நாட்டில் சமாதானத்தை கொண்டு வரும் விடயத்தில் இணைந்து கொள்ள வேண்டும். இருவரும் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டிக் கொண்டு இரு பக்கத்தில் இருந்து கொண்டு கயிறு இழுக்கும் நிலையிலிருந்து விலகி இந்நாட்டில் உண்மையான சமாதானத்தை ஏற்படுத்த அவர்கள் இருவரும் முன்வர வேண்டும். அப்படி அவர்கள் முன்வராவிட்டால் உண்மையான் சமாதான இயக்கததை முன்னெடுத்துச் செல்ல முடியாது.''

அடுத்துப் பேசிய எல்லைக் கிராமங்களில் யுத்தத்தினால் பாதுகாக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளை ஆராயும் ஆணைக்குழுவின் உறுப்பினரும், கருவலகஸ்ஸேவ சமாதான அமைப்பின் தலைவருமான புத்தியாகம சந்திர ரத்ண தேரோ அவர்களின் உரையிலிருந்து

''இங்கே நான் வந்த பொழுது காணப்பட்ட பதாதைகளைப் பார்த்தேன் யுத்தத்தின் மூலம் சமாதானம் கிடையாது அகதிகளும் மனிதர்கள் தான்'' எனபது எனது மனதை மிகவும் உறுத்துகின்றது''

''இன்று காலை எமது ஆணைக் குழுவின் விசாரணை ஒன்று கருவலகஸ்ஸேவ கிராமம் ஒன்றில் இடம் பெற்றது. அவர்கள் அங்கே குறிப்பிட்டார்கள் பள்ளிக்கூடங்களிலே கணிதத்திற்கு, சித்திரத்திற்கு ஆசிரியர்கள் இல்லை என்று நான் சிந்தித்துப் பார்க்கிறேன வடக்கிலிருந்து அகதிகளாக வந்திருக்கும் இந்த மக்களுக்கு எந்தளவு பிரச்சினைகள் இருக்குமென்று. யுத்தத்தினால் தான் இந் நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே நான் இங்கே ஒரு கோரிக்கையை முன்வைக்கினறேன். யுத்தத்தை உடனடியாக நிறுத்த வேண்டும். யுத்தத்தை நிறுத்தும்படி இந்த அரசாங்கத்தையும் L.T.T.E யையும் நாம் கேட்டுக் கொள்கின்றோம்.

''சந்திரிக்கா பண்டாரநாயக்க அவர்களை ஆட்சி பீடத்தில் நாம் ஏற்றியது யுத்தத்தை நடத்திச் செல்வதற்காக அல்ல. எனவே இந்நாட்டு ஜனாதிபதியிடம் நான் கேட்டுக் கொள்கின்றேன். யுத்தத்தை உடனடியாக நிறுத்தி சமாதானத்திற்கான பேச்சுவார்த்தையில் ஈடுபடும்படி. அதே நேரத்தில் யுத்தத்தில் மறுபிரிவினராக இருக்கும் பிரபாகரன் அவர்களிடத்திலும் அதனைக் கேட்டுக் கொள்கின்றேன்.

நன்றி - நூலகத்திட்டம்



# சட்ட மா அதிபரை துளைத்தெடுக்கும் 'ராவய'

தொகுப்பு: சி.செ.ராஜா



அமைச்சரவைக் கூட்ட முடிவுகளை அறிவிப்பதற்காகக் கடந்த 29ம் திகதி நடந்த தகவல் தொடர்பாளர் மாநாட்டுக்கு முன்னெப்போதும் இல்லாதவிதத்தில் சட்ட மா அதிபர் சரத் என். சில்வாவும் வருகை தந்திருந்தார். கடந்த சில மாதங்களாக ஒழுக்கக்கேடான நடவடிக்கைகள் தொடர்பான குற்றச்சாட்டொன்றின் பேரில், அவர் அதிகாரத் துஷ்பிரயோகம் செய்தார் என்று தொடர்ச்சியாக ராவய பத்திரிகை எழுதிவந்த விடயங்கள் தொடர்பான விளக்கத்தை அளிப்பதற்காகவே அவர் அங்கு சமூகமளித்திருந்தார். ராவய பத்திரிகை, நீதி அமைச்சர் ஜீ. எல். பீரிஸிடம் இவ்வாறான ஒரு சந்திப்பைச் சட்ட மா அதிபருடன் ஏற்படுத்தித் தருமாறு கோரியிருந்தது. நீதி அமைச்சரும் பல தடவைகள் அப்படி ஒரு சந்திப்பை ஏற்படுத்தித் தருவதாக உறுதி அளித்திருந்தார்.

இந்த மாநாட்டில் கலந்து கொண்ட சட்ட மா அதிபர், தாம் ராவய பத்திரிகைச் செய்திகளில் கூறப்படும் தன் சம்பந்தப்பட்ட ஒழுக்கக்கேடு தொடர்பான வழக்கை மூடிமறைக்க எந்த அதிகார துஷ்பிரயோகத்தையும் செய்யவில்லை என்று அறிவித்தார். இவ்வாறான ஒரு அறிவிப்பைச் செய்வதற்காக நீதியமைச்சரின் உத்தரவின் பேரிலேயே அவர் அங்கு வந்திருக்கிறார் என்று ஊகிக்கப்பட்ட போதும், அவர் தாம் அப்படி யாருடைய உத்தரவின் பேரிலும் வரவில்லையென்றும், தாமாகவே முன்வந்து இப்பிரச்சினைக்குப் பதிலளிக்க வேண்டும் என்பதற்காகவே அங்கு வந்ததாகவும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், சட்டமா அதிபரின் இந்த விளக்கத்தை மறுத்த ராவய ஆசிரியர் விக்ரர் ஐவன், நீதி அமைச்சர் தமது பத்திரிகைக்குப் பல தடவைகளில் இவ்வாறு ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தருவதாகக் கூறியதாகவும், அந்த அடிப்படையிலேயே சட்ட மா அதிபர் அங்கு வந்தார் என்றும் தெரிவிக்கின்றார். மிகவும் சூடான சூழ்நிலையில் நடைபெற்ற அன்றைய மாநாட்டில், சட்ட மா அதிபர் ஒரு மணி நேரம் மட்டுமே பிரசன்னமாக இருப்பார் என்று நேரம் வரையறுக்கப்பட்டிருந்ததால், அவரது ஒழுக்கக்கேடு நடவடிக்கைகள் தொடர்பான கேள்விகளுக்கு மட்டுமே அவகாசம் வழங்கப்பட்டது. அந்தக் கேள்விகளின் போது பதிலளித்த சட்ட மா அதிபர் தாம் ஒழுக்கக்கேடாக நடந்ததாக ஒப்புக்கொள்ள மறுத்த போதும், குற்றச்சாட்டுக்களை முற்றாக நிராகரிக்கவும் இல்லை. மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ஒருவர் ஒழுக்கக்கேடான வாழ்க்கையை வாழ்வது சாத்தியமா? என்ற கேள்விக்கும் அவர் பதிலளிப்பதைத் தவிர்த்து விட்டார்.

சட்ட மா அதிபர் தொடர்பாகக் கூறப்படும் ஒழுக்கக்கேடு விவகாரம் தான் என்ன? ராவய பத்திரிகை தரும் தகவல்கள் கூறும் கதை இதுதான்:

ஒரு காலத்தில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவராக இருந்தவரும், இன்றைய சட்ட மா அதிபருமான சரத் என். சில்வாவுக்கு எதிராக ஒழுக்கக் கேட்டுக் குற்றச்சாட்டொன்றின் அடிப்படையில் மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கொன்றை இயங்காமற் செய்வதில், இவர் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தியுள்ளார் என்பதே ராவய பத்திரிகையின் குற்றச்சாட்டு. இன்று நடைமுறையில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள ஆங்கில நீதிமன்றச் சம்பிரதாயங்களின்படி நீதிச் சேவையில் ஈடுபட்டுள்ள ஒருவருக்கு எதிராகச் செய்யப்படக்கூடிய மிகப் பயங்கரமான குற்றச்சாட்டு ஒழுக்கக்கேட்டுக் குற்றச்சாட்டாகும். சட்ட மா அதிபருக்கு எதிராக இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்து வழக்குத் தொடுத்தவர் அவரது நெருங்கிய நண்பராக இருந்தவரும், பிரபல இரசாயனப் பொறியியலாளருமான டபிள்யூ. பீ. ஏ. ஜயசேகர ஆவார். இவர் இலங்கை மகாபோதி நிறுவனத்தின் முக்கிய பிரமுகரும், இலங்கைத் தொழில் நிபுணர்கள் சங்கத்தின் முன்னைநாள் தலைவரும், பிரித்தானிய புத்திஜிவீகள் சங்கத்தின் தலைவரும் ஆவார். பொ.ஐ.மு. அரசாங்கம் பதவிக்கு வந்தபின் இவர் இலங்கை கனிப்பொருட் கூட்டுத்தாபனத் தலைவராகவும் நியமிக்கப்பட்டிருந்தார்.

இலங்கைத் தொழில் நிபுணர்கள் சங்கத்தின் தீவிர செயற்பட்டாளராக ஜயசேகர இருந்த காலத்தில் சரத் என். சில்வா அவரது வீட்டிற்கு வந்துபோகும் நண்பராக இருந்தார். இந்த நட்பு, இறுதியில் ஜயசேகரவின் வாழ்வில் பெரும் புயலை ஏற்படுத்தக் காரணமாக அமைந்தது. ஜயசேகரவின் மனைவிக்கும், சரத் என். சில்வாவுக்கும் இடையில் தொடங்கிய நட்பாக மாறி, அவர்கள் இருவரும் தனியாகப் புதுவாழ்க்கை தொடங்கப் போகும் நிலைக்கு இட்டுச் சென்றது. ஜயசேகரவையும் அவரது பிள்ளைகளையும் விட்டுவிட்டு, அவரது மனைவி சரத் என். சில்வாவுடன் போய் வாழத் தொடங்கினார். சரத் என். சில்வாவும் கூட திருமணமானவர் மட்டுமல்லாமல் ஒரு குழந்தைக்குத் தகப்பனுமாவார். ஆயினும் அவரது குடும்ப வாழ்க்கை அப்போது உடைவுக்குள்ளாகிப் பிரிந்தே வாழ்ந்து வந்தார். ஆயினும், தமது மனைவியுடன் அவர் சட்ட ரீதியான விவாகரத்தைச் செய்து கொண்டிருக்கவில்லை.

இந்தக் குடும்பச் சிக்கலைத் தீர்த்து ஜயசேகரவுக்கு உதவப் பலர் முயன்றபோதும் அம்முயற்சிகள் எதுவும் வெற்றி பெறவில்லை. இதனால், அப்போது மேன்முறையீட்டு நீதிபதியாகப் பதவி வகித்து வந்த சரத் என். சில்வாவுக்கும், தமது மனைவி தமயந்தி ஷிராணிக்கும் இடையில், நிலவும் உறவைக் காரணமாகக் காட்டித் தமக்கு விவாகரத்து வழங்குமாறு கோரும் வழக்கொன்றை ஜயசேகர மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். ஜயசேகர இந்த வழக்கில் தனது மனைவியை எதிராளியாகவும், சரத் என். சில்வாவை இணை எதிராளியாகவும் குற்றம் சாட்டியிருந்தார். இவ்வாறு ஒருவரை இணை எதிராளியாகக் குற்றம் சாட்டி வழக்குத் தொடர்வது மிகவும் பாரதூரமான விடயமாகும். இந்த வழக்கு நிருபிக்கப்படாத பட்சத்தில் இணை எதிராளியால், வழக்குத் தொடுத்தவருக்கு எதிராக மான நஷ்ட வழக்குத் தொடுக்கும் வாய்ப்பும் உண்டு. எனவே போதிய, திட்டவட்டமான ஆதாரங்கள் இருப்பின் மட்டுமே ஒருவரை இணை எதிராளியாகப் போட்டு வழக்குத் தொடர்வது உண்டு. ஜயசேகர, தகுந்த ஆதாரங்கள் இருந்தமையினாலேயே இவ்வாறு வழக்குத் தொடர - அதுவும் மேன்முறையீட்டு நீதிபதி ஒருவருக்கு எதிராக வழக்குத் தொடரத் துணிந்தார் என்பது ராவயவின் வாதம். இவ்வழக்கினைத் தொடுத்த ஜயசேகரவுக்கு எதிராக சரத் என். சில்வா எந்தச் சட்ட நடவடிக்கையும் எடுக்காததே இதற்குப் போதுமான ஆதாரம் என்பதும் ராவயவின் வாதம். இவ்வழக்கில் ஜயசேகர, இந்தத் திருமண முறிவுக்கு நஷ்ட ஈடாக ரூபா 5 மில்லியன் தொகையைத் தருமாறும் கோரியிருந்தார்.

ஆனால், இவ்வழக்கை விசாரித்த மேலதிக மாவட்ட நீதிபதி ஏ.எச்.எம்.யூ. அபேரத்ன, முறைப்பாட்டில் உள்ள எதுவித விடயங்களையும் கணக்கில் எடுக்காது, வழக்கைத் தள்ளுபடி செய்தார். இருந்த போதும் ஜயசேகர இரண்டாவது முறையாகவும் இன்னொரு வழக்கைத் தாக்கல் செய்தார். அதிலும், இவ்வாறே விசாரணைகள் ஏதுமின்றி வழக்கிலிருந்து சரத் என். சில்வாவை விடுவிக்கும் கட்டளையை நீதிபதி பிறப்பித்ததன் மூலம் ஜயசேகரவுக்கு நியாயம் கிடைக்காமல் போயிற்று. ஜயசேகரவுக்குச் சார்பாக முறைப்பாடு செய்த வழக்காளி ஜயசேகரவின் சட்டத்தரணிக்குக் கூட முன் அறிவித்தல் கொடுக்கப்படாமல் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது. தீர்ப்பு வழங்கப்பட்ட ஒருமாத காலத்தின் பின்னரே அச்சட்டத்தரணிக்கு இந்தத் தீர்ப்பின் பிரதியைப் பெறமுடிந்தது.

இந்தத் தீர்ப்புக்கு எதிராக, வழக்காளியின் சட்டத்தரணி முன்வைத்த எதிர்ப்பைக் கணக்கிலெடுக்காது, ஜயசேகரவுக்கும், எதிராளியான தமயந்தி ஷிராணிக்கும் இடையில் விவகாரத்துக்கு உடன்பாடு காணவைக்கும் முயற்சியில் நீதிபதி ஈடுபட்டார். அது பயனளிக்காமல் போகவே, சரத் என். சில்வாவுடன் அப்போது வாழ்ந்துவரும் எதிராளிக்கு மாதமொன்றுக்கு ரூபா 10,000/-. தாபரிப்புப் பணமாகச் செலுத்துமாறும், வழக்குச் செலவுத் தொகையாக ரூபா 50,000/- செலுத்துபடியும் தீர்ப்பு வழங்கினார். அத்துடன் நிறுத்தாது இப்போது சரத் என். சில்வாவுடன் வாழ்ந்து வரும் தமயந்தி ஷிராணிக்கு ஒரு மில்லியன் நஷ்ட ஈடு வழங்குமாறும் தீர்ப்பு வழங்கினார்.

நம்பமுடியாத இந்தத் தீர்ப்பினால், மிகுந்த பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்ட ஜயசேகர, சரத் என். சில்வாவின் ஒழுக்கக் கேடான நடவடிக்கை தொடர்பான இவ்வழக்கை விசாரித்த மாவட்ட நீதிபதியின் சட்டவிரோத செயல்களைச் சுட்டிக்காட்டி அதுபற்றி விசாரிக்குமாறு நீதிச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்தார்.

இந்த முறைப்பாட்டின் அடிப்படையில், செயற்படுவதற்காக அம்முறைப்பாடு சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டு விட்டதாக ஆணைக்குழு 1995 மே மாதம் ஜயசேகரவுக்கு அறிவித்தது. ஆனால், அதற்கிடையில் யார் சம்பந்தப்பட்ட விடயம் தொடர்பாகப் பிரச்சினை உருவாகியிருந்ததோ, அந்த நபரே - அதாவது சரத் என். சில்வாவே - அப்போது சட்ட மா அதிபராக நியமிக்கப்பட்டிருந்தார். இது ஜயசேகரவுக்கு மேலும் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தவே, அவர் இதை விளக்கி நீதிச்சேவைகள் ஆணைக்குழுவுக்கு எழுதினார். அனால், அவரது எழுத்துக்கு எந்தப் பதிலும் அதன் பின்னர் கிடைக்கவே இல்லை.

இது தொடர்பாக ராவய பத்திரிகையில் வெளிவந்த செய்திகளைச் சுட்டிக்காட்டி நீதி அமைச்சர் ஜி.எல். பீரிஸிடம் கேட்டகப்பட்ட கேள்வி ஒன்றிற்கு, கடந்த மாதம் 22ம் திகதி நடைபெற்ற தொடர்புசாதனவியலாளர்களுடனான மாநாட்டில் வைத்துப் பதிலளிக்கையில் தமக்கு இது பற்றி எதுவும் தெரியாது என்றும், ராவய பத்திரிகையைத் தாம் இன்னமும் படிக்கவில்லை என்றும், அவர் கூறினார். ராவய பத்திரிகையைப் படித்துவிட்டு, அது பற்றிச் சட்ட மா அதிபருடன் பேசிய பின்பே இக்கேள்விக்குப் பதிலளிக்க முடியும் என்று அவர் கூறினார்.

சட்ட மா அதிபருக்கு எதிராக ஒரு முறைப்பாட்டை வைப்பதானால், அதை யாரிடம் முன்வைப்பது என்று அங்கு கேட்டகப்பட்ட கேள்வி ஒன்றிற்கும் அவர் சரியான பதிலைத் தராமல் தவிர்த்து விட்டார்.

ஆனால், அமைச்சரின் இந்தக் கூற்றை நம்புவதற்கில்லை என்கிறது ராவய. சட்டமா அதிபருக்கு எதிராக ஒழுக்கக்கேடுக் குற்றச்சாட்டை எழுப்பியுள்ள ஜயசேகர தொழில் நிபுணர்கள் சங்கத்தின் தலைவராக இருந்தபோது நீதி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அவர்களும், அவ்வமைப்பின் ஒரு தீவிர செயற்பாட்டு உறுப்பினராக இருந்துள்ளார். ஜயசேகரவின் மனைவி விவாகரத்து பெறாமலே அப்போதைய மேன்முறையீட்டு நீதிபதி சரத் என். சில்வாவின் வீட்டில் ஒன்றாக வாழ்ந்தார் என்பது தொழில் நிபுணர்கள் சங்கத்தின் முன்னணி அங்கத்தவர்கள் மத்தியில் பரபரப்பாக பேசப்பட்ட ஒரு விடயமாகும். அதைவிடவும், ஜயசேகர, சரத் என். சில்வாவின் ஒழுக்கக்கேடு வாழ்க்கை தொடர்பாகவும், அது தொடர்பில் தான் முகங்கொடுக்க வேண்டியிருந்த உத்தியோகபூர்வ பிரச்சினைகள் தொடர்பாகவும், நீதி அமைச்சருக்கு நீண்ட மகஜரொன்றினூடாக 23.09.1994 அன்று தெரிவித்திருந்தார். தவிரவும், ஜயசேகர 06.05.1996 அன்று ஜனாதிபதிக்கு இது தொடர்பாக அனுப்பிய மகஜரும், ஜனாதிபதியால், நீதி அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது என்பதுவும், நீதி அமைச்சரின் செயலாளர், அவ்விடயம் தமது செயற்பரப்புக்குள் உள்ளடக்கப்படாத ஒன்று என அறிவித்து ஜனாதிபதியிடம் 13.06.1996 அன்று திருப்பி அனுப்பி வைத்துள்ளார் என்பதுவும் நீதி அமைச்சருக்குத் தெரியாதிருக்க நியாயமில்லை.

நீதிச் சேவை ஆணைக்குழு, சட்ட மா அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்ட ஜயசேகரவின் முறைப்பாடு அடங்கிய கோவைக்கு என்ன நடந்துள்ளது எனக் கண்டுபிடிப்பதற்காக 1995 மே மாதம் ஒரு விசாரணையை நடாத்தியது. அவ் விசாரணையின்போது, நீதிச்சேவை ஆணைக்குழு அவ்வாறான கடிதக்கோவையொன்றைத் தமது கவனத்துக்குக் கொண்டு வந்தது உண்மையே என்றும், ஆனால், அது சட்ட மா அதிபர் திணைக்களத்துடன் சம்பந்தப்பட்ட நபரான சரத் என். சில்வா தொடர்பான சம்பவம் என்ற காரணத்தினால் தாம் அக் கடிதக் கோவையை அப்போதைய சொலிசிற்றர் ஜெனரராக இருந்த டக்ளஸ் பிரேமரத்னவின் கவனத்துக்குக் கொண்டு வந்ததாகவும் இப்போதைய சொலிசிட்டர் ஜெனரல் உபவங்ச யாபா தெரிவித்திருந்தார்.

இப்போது சட்ட மா அதிபர் திணைக்களத்திலிருந்து ஓய்வுபெற்றுள்ள ஜனாதிபதி சட்டத்தரணி டக்ளஸ் பிரேமரத்னவை இது பற்றி விசாரித்து அறியும் நோக்கத்துடன், அவரைத் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள முயன்ற போதும் கதைப்பது "ராவய" எனத் தெரிவித்ததும் தொடர்பைத் துண்டித்து விட்டார். இதனால் அவர், அது பற்றி என்ன கூறுகிறார் என்று அறிய முடியாது உள்ளது என்கிறது ராவய.

ஜயசேகர 23.09.1994 திகதியன்று நீதிச் சேவை ஆணைக் குழுவின் கவனத்துக் கொண்டு வந்த முறைப்பாடு தொடர்பாக நீதிச் சேவைகள் ஆணைக் குழுவின் அப்போதைய உறுப்பினராகச் செயற்பட்ட, ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதியும், இப்போதைய இந்தோனேஷிய தூதுவராகப் பணிபுரிபவருமான திஸ்ஸ டயஸ் பண்டாரநாயக்கவிடம் கேட்டபோது, நீதிச் சேவைகள் ஆணைக் குழுவுக்கு ஜயசேகரவின் அவ்வாறான முறைப்பாடொன்று கிடைத்தது என்றும், பார்த்தவுடனேயே மாவட்ட நீதிபதி ஏ.எச்.எம்.யூ. அபேரத்னவினால் தவறு இழைக்கப்பட்டுள்ளதெனத் தமக்குத் தெரிந்ததாகவும் ஏற்றுக் கொண்டார். நீதிச் சேவைகள் ஆணைக் குழுவின் தலைவராகச் செயற்பட்ட பிரதம நீதியரசர் முறைப்பாட்டாளரைத் தாம் நன்கு தெரிந்தவரென்பதால், விடயங்களைக் கண்டு பிடிக்க ஆணைக் குழுவின் ஏனைய உறுப்பினர்களான தம்மிடமும், மேல் நீதிமன்ற நீதிபதி மார்க் பர்னாந்துவிடமும் கையளித்ததாகவும், சம்பவத்துடன் தொடர்பான வழக்கு அறிக்கைகள், நீதிமன்றப் பணிக்குறிப்புகளை வரவழைத்துச் சோதிப்பதற்குப் புறம்பாக மாவட்ட நீதிபதி அபேரத்னவை, ஆணைக்குழு முன்னிலையில் அழைத்து விசாரித்ததாகவும் திஸ்ஸ டயஸ் பண்டாரநாயக்க தெரிவித்தார். பொ.ஐ.மு. அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்பு ஜனாதிபதி ஆணைக் குழு ஒன்றில் பணிபுரிய வேண்டி ஏற்பட்டதால் நீதிச் சேவைகள் ஆணைக் குழுவின் வேலைகளிலிருந்து அகல வேண்டி ஏற்பட்டதாகவும், அதன் பின்பு அதற்கு என்ன நடந்தது எனத் தமக்குத் தெரியாதெனவும் அவர் தெரிவித்தார்.

டி.பீ.விஜேதுங்க ஜனாதிபதியானதன் பின்பு ஜயசேகர அவரிடமும் இது பற்றி முறைப்பாடு செய்திருந்தார் என்பதைத் தான் அறிவேன் எனவும், மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் பதவி வெற்றிடம் ஏற்பட்டபோது அவ் வெற்றிடம் சில காலமாக நிரப்பப்படாது இருந்ததற்கு இச் சம்பவத்தின் தாக்கம் ஒரு காரணம் என்றும், சரத் என். சில்வாவுக்குப் பதிலாக சி. ஆனந்த கிறேறோவை அப் பதவிக்குக் கொண்டு வரும் கருத்துக்கூட டி.பி. விஜேதுங்கவுக்கு இருந்ததாகவும் திஸ்ஸ டயஸ் பண்டாரநாயக்க தெரிவித்தார். சரத் என். சில்வாவை முதலில் அப்பதவிக்கு நியமிக்க விரும்பாத ஜனாதிபதி விஜேதுங்க பின்பு, ஏன் அவரை அப்பதவிக்கு நியமித்தார் என்ற கேள்விக்கு, தனக்கு அதற்கான காரணம் தெரியாது என்றார் திஸ்ஸ டயஸ் பண்டாரநாயக்க. ஆயினும், பிறகு இப்பதவிக்குச் சரத் என். சில்வாவை நியமிக்குமாறு விஜேதுங்கவுக்குப் பலமான சிபாரிசைச் செய்தவர், அன்று சட்ட மா அதிபராக இருந்த திலக் மாரப்பன என்று தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாக எழுதுகிறது ராவய.

சட்ட மா அதிபர் சமீப காலமாகப் பல சர்ச்சைகளுக்குள்ளாகி வரும் ஒரு நபராக மாறியுள்ளார். மேல் நீதிமன்ற நீதியரசர் ஒருவரைக் கைது செய்யும் நடவடிக்கையிலும் அவருக்குச் சம்பந்தம் இருப்பதாகக் குற்றச்சாட்டுகள் இருக்கின்றன.

ஊழல், அதிகார துஷ்பிரயோகம் என்பவற்றிற்கு எல்லாவிதத்திலும், வழிகளைத் திறந்துவிட அரசாங்கம் தயாராக இருக்கும் போது யார் தான் கெட்டுப் போக மாட்டார்கள்.

சட்ட மா அதிபர் மட்டும் விதிவிலக்கா என்ன?

நன்றி - நூலகத்திட்டம்



வடக்கில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு எட்டுவருடம் பூர்த்தியாகியும் கூட, இன்னும் ஏன் முஸ்லிம்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் வெளியேற்றப்பட்டார்கள்? அவ்வாறு வெளியேற்றப்பட்டதுடன் அவர்களுக்கும், அவர்களது பூர்வீகக் குடியிருப்பான வடபகுதிக்கும் இடையிலான உரிமைகள் முற்றுப் பெற்றுவிட்டதா? அல்லது தற்காலிகமாக உரிமைகள் நிறுத்தப்பட்டுள்ளதா? என்பது விடயமாக இதுவரைக்கும் நியாயபூர்வமானதும், உத்தியோகபூர்வமானதுமான எவ்வித காரணங்களையும் புலிகள் தெரிவிக்கவில்லை. இந்நிலையில் எட்டு வருடங்கள் சென்றபின்னாவது நியாயபூர்வமான முடிவினை புலிகளும், அரசினரும் தருவார்களா என வடபகுதி முஸ்லிம்கள் முகாம்களில் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளால் முஸ்லிம்கள் ஏன் வெளியேற்றப் பட்டார்கள் என்பதற்கு புலிகள் முன்வைத்துள்ள கருத்துக்களை நோக்கும்போது முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமைக்கு சரியான, நியாயமான காரணங்கள் எதனையும் அவர்கள்

விடுதலைப்புலிகள் போராடத் தொடங்கிய பின்னர்தான் சிறுபான்மை இனத்தைப் பற்றிச் சிந்திப்பதைப்போல தனது நடவடிக்கைகளை மாற்றிக் கொண்டது. அதிலும் தமிழ் மக்களைப்பற்றி சிந்திப்பதைப்போல வெகுஜனத் தொடர்புகளில் காட்டிக் கொண்டார்கள். இந்நிலையில் அவர்கள் முஸ்லிம்களை தங்களுடன் சேர்த்துக்கொண்டு அதன் மூலம் மேலும் தமிழ் மக்களைப் புறக்கணிக்க முயன்றிருக்க வாய்ப்பில்லை.

மறுபுறத்தில் வடக்கில் தமிழ் மக்கள் செறிந்துள்ளதால்தான் தனிநாடு கோருகின்றார்கள். ஏதாவது ஒரு பிரதேசத்தினை முஸ்லிம்கள் செறிந்த இடமாக மாற்றுவதன் மூலம் அவர்களும் இவ்வாறான ஒரு நிலையினை ஏற்படுத்துவார்கள் என்பதனை அப்போதைய பாதுகாப்பு அமைச்சர் சிந்திக்காமல் இருந்திருக்கமாட்டார்.

முஸ்லிம்களின் கிராமங்களைப் பாதுகாப்பதற்காக முஸ்லிம் படைகளை சுஹைர் தயாராக்கி இருக்கிறார் என்ற கருத்தினை நோக்கும்போது, ஏற்கெனவே தமிழ் மக்களின் ஆயுதக் குழுக்களுக்கு முகம் கொடுக்க முடியாத அரசு



## வடக்கு முஸ்லிம்களின் வெளியேற்றம் :

# புலிகள் சொல்லும் காரணங்களும் அதிலுள்ள தவறுகளும்

ஏ. எம். அஸ்ஹர்

தெரிவிக்கவில்லையென்பது புலனாகிறது.

விடுதலைப் புலிகளின் "உலகத் தமிழர்" என்ற பத்திரிகை முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமைக்கான காரணங்களை பின்வருமாறு கூறியது. "சிறீலங்கா அரசின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் மன்னாரில் பெரும் பகுதியை இராணுவக் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்போவதாகவும், அதன் பின்னர் அங்கு முஸ்லிம்களை குடியமர்த்தப் போவதாகவும் கூறியுள்ளார்."

"சிறீலங்கா முஸ்லிம் இளைஞர் சபைகள் சம்மேளனத்தின் தலைவர் எம்.எம்.சுஹைர் முஸ்லிம் கிராமங்களைப் பாதுகாப்பதற்காக 15 ஆயிரம் முஸ்லிம் இளைஞர்களைக் கொண்ட படையொன்றைத் திரட்ட முஸ்லிம்கள் தயாராக இருப்பதாகவும் அறிவித்துள்ளார்."

"இன்றைய சிறீலங்கா முஸ்லிம் அடிப்படைவாத அமைப்புகள் சிறீலங்கா அரசுடன் இணைந்து தமிழ் மக்களைக் கொன்றொழிக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன."

"ஏற்கெனவே கிழக்கு மாகாணத்தில் இத்தகைய சக்திகளால் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டு வருகிறார்கள்."

"வடகிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களின் சம்மதமின்றி இன்றைய முஸ்லிம் தலைமைகளால் எடுக்கப்படும் தவறான முடிவுகளை சிறீலங்கா அரசு தனக்குச் சாதகமாகப் பயன்படுத்துகிறது."

"தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தமிழ் மக்களுடன் இணைந்து போராட வேண்டிய முஸ்லிம் மக்களை முஸ்லிம் காங்கிரசும், அஷ்ரஃபும் தமிழர்களுக்கு எதிரான ஒரு சக்தியாக உருவாக்கி வருகிறார்கள்."

"குறிப்பாக விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக அழிக்க முடியாத சிறீலங்கா அரசு முஸ்லிம் மக்களை தமிழ் மக்களின் எதிரிகளாக்க முனைகின்றனர்."

இவ்வாறான காரணங்களினால் வட பகுதி முஸ்லிம்கள் வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்டார்கள் என புலிகள் கூறுகின்றனர்.

மேற்குறிப்பிட்ட முதற்காரணம் சற்றும் பொருத்தமற்ற ஒரு காரணமாகும். ஏனெனில், இலங்கை அரசினைப் பொறுத்தவரையில் தமிழீழ

மேலும் இலங்கையில் இன்னுமொரு முஸ்லிம் ஆயுதக்குழு உருவாவதை அனுமதித்திருக்காது.

அத்துடன் 1990 காலப்பகுதியில் ஆட்சியில் இருந்த அரசு புலிகளுக்கு ஆயுதம் வழங்கியதாகவும் புலிகளுக்கு ஆதரவு வழங்கியதாகவும் பரவலாகக் கூறப்படுகிறது. இந்நிலையில் மேற்குறிப்பிட்ட ஒரு படை உருவானதென்பது சாத்தியமானதாக இருந்திருக்கமுடியாது.

மேலும் விடுதலைப் புலிகள் கூறியுள்ளதைப் போல் ஆரம்ப காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக போராடவேண்டிய எவ்வித தேவையும் முஸ்லிம்களுக்கு இருக்க வில்லை. அவ்வாறு தான் முஸ்லிம் ஆயுதக்குழு கிழக்கில் ஆரம்பிக்கப்பட்டிருப்பதால் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டிருந்தால் வட கிழக்கில் உள்ள சுமார் 3/4 பகுதி மக்கள் ஆரம்பத்தில் ஏனைய இயக்கங்களுடன் இணைந்தவர்களாகவும், அவர்கள் இன்றுவரை விடுதலைப் போராட்டத்திற்கு தடையானவர்களாகவும் அரசுடன் ஆதரவு உடையவர்களாகவும் காணப்படுகின்றனர். ஏன் புலிகள் அவர்களை தங்களது கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து வெளியேற்றவில்லை?

முஸ்லிம் காங்கிரசும், அஷ்ரஃப்பும் கிழக்கு மாகாண முஸ்லிம்களை இணைத்து தமிழ் மக்களை அழித்தொழிக்க நினைத்ததால் அப்பாவி வட பகுதி முஸ்லிம்களை கரிகாலன் குழு வெளியேற்றியது என புலிகள் குறிப்பிடுகின்றார்கள. அவ்வாறென்றால் வட மாகாணத்தில் புலிகள் இயக்கத்தில் அப்போது பல முஸ்லிம் இளைஞர்கள் இலங்கை இராணுவத்திற்கு எதிராக போராடுவதற்காக பல முக்கிய பொறுப்புக்களில் இருந்திருக்கிறார்கள். மற்றும் மாவீரர் தினம், ஹர்த்தால் போன்ற பல நடவடிக்கைகளிலும் முஸ்லிம்கள் பங்கு கொண்டதோடு பூநகரியில் நடைபெற்ற ஏனைய இயக்கத் தலைவர்கள், இந்திய அமைதிப்படை போன்றவர்களின் படை எதிர்ப்புக்களிலும், மற்றும் ஏனைய புலிகளின் செயற்பாட்டிலும் முஸ்லிம்கள் பங்கு கொண்டுள்ளார்கள். குறிப்பாக நிதி விடயத்தில் முஸ்லிம்கள் அதிகளவு பங்களிப்புச் செய்துள்ளார்கள். இவர்களுக்காக ஏன் வட பகுதி புலிகளின் குழுக்கள் கிழக்கு கரிகாலன் குழுவுக்கு வட பகுதி முஸ்லிம்களை வெளியேற்ற அனுமதியளித்தார்கள்?

எனவே வெளிப்படையாக நோக்கும்போது முஸ்லிம்கள் வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்டதற்கு புலிகள் எவ்வித நியாயபூர்வ காரணத்தையும் முன்வைக்கவில்லை. இதிலிருந்து அவர்கள் முஸ்லிம்களை வேண்டுமென்றே வெளியேற்றியிருக்கிறார்கள். பெரும்பான்மையினர் சிறுபான்மை தமிழ்மக்களை துன்புறுத்தியதால் புலிகள் அரசுக்கு எதிராகப் போராடுகிறார்கள். அவ்வாறாக இருந்தால் வடக்கில் உள்ள பெரும்பான்மை தமிழர்களை பிரதிபலிக்கக்கூடிய விடுதலைப் புலிகள் சிறுபான்மையினரான முஸ்லிம்களையும், அவர்களது உணர்வுகள், உரிமைகள், உடமைகள் என்பவற்றை பாதுகாக்க அல்லது வழங்க தவறிவிட்டார்கள். வேறுஒரு வகையில் சொல்வதானால் முஸ்லிம்களை வெளியேற்றியதால் அவர்கள் உரிமைக்காக போராடுகிறார்கள் என்பதில் இருந்து தவறிவிட்டார்கள்.

இது இவ்வாறிருக்க வடபகுதி முஸ்லிம்கள் மீள தங்களது பூர்வீக மண்ணில் குடியேறலாமா என்று ஆராயும்போது வடக்கில் இருந்து புலிகள் முஸ்லிம்களை வெளியேற்றியது வரலாற்றுத் தவறு என்றும், அதற்காக மன்னிக்க வேண்டுகிறோம். அது துரதிஷ்டவசமான சம்பவம் என 'அவுட் லுக்' (டில்லி) பத்திரிகை நிருபர் ஏ.எஸ்.பன்னீர் செல்வத்திற்கு 1995 நவம்பரில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆலோசகர் கலாநிதி. அன்டன் பாலசிங்கம் அளித்த பேட்டியில் கூறியிருக்கிறார். மேலும் அவர் செல்வத்தின் கேள்வியான "நீங்கள் பல்லின சமூகத்தை ஏற்றுக்கொள்ளத்தயாராக உள்ளதாக மிகச் சிலரே நம்புகின்றனர். உங்களது சகிப்பின்மைக்கு வட பகுதி முஸ்லிம்களை நீங்கள் பலாத்காரமாக வெளியேற்றியதை உதாரணமாகக் காட்டுகிறீர்கள் என்பதற்கு பாலசிங்கம் பதிலளிக்கையில், அது துரதிஷ்டவசமான விசயம். அதற்காக நாம் மன்னிப்புக் கேட்கிறோம். எனினும் அங்கு இனரீதியான முறுகலில் இருந்து நாம் அவர்களுக்கு ஒரு தொல்லையும் செய்யாமல் வெளியேறுமாறு கேட்டோம். அது ஒரு தவறு வட கிழக்கு மண்ணில் வாழ்வதற்கு மறுக்க முடியாத உரிமை கொண்டவர்கள் என அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம். சகஜ-நிலை ஏற்பட்டதும் அவர்கள் தங்களது வீடுகளுக்கு திரும்பலாம்." எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் ஐ.நா. பிரதிநிதி ஒலரா ஒட்டுன்னு அவர்களின் இலங்கை விஜயத்தின் போது விடுதலைப் புலிகளிடம் வடபகுதி முஸ்லிம்கள் மீளக் குடியமரலாமா எனக்கேட்டபோது புலிகள் கூறியதாவது... "தற்போது தமிழர்கள் தமது சொந்த இடத்தில் இருந்து வெளியேறி முஸ்லிம்களின் வீடுகளில் இருக்கிறார்கள். அவர்கள் சொந்த இடத்திற்கு திரும்பியதும் முஸ்லிம்கள் தங்களது வீடுகளுக்கு திரும்பலாம்" எனப் பதிலளித்துள்ளனர்.

மேற்கூறிய கருத்துக்களை நோக்கும்போது முதலாவது கருத்தில் "நாம் அவர்களுக்கு ஒரு கெடுதியும் செய்யாமல் வெளியேறுமாறு கேட்டோம்" எனக் கூறுகின்றனர். ஆனால், அவர்கள் இழைத்த கெடுதி உலகெங்கும் தெரியும். அதாவது உடைமைகள் அனைத்தும் பறிக்கப்பட்டு 24 மணித்தியாலங்களுள் துரத்தப்பட்டார்கள். இதைவிட வேறு கெடுதி வேண்டுமா?

தமிழர்கள் முஸ்லிம்களின் வீடுகளில் குடியிருக்கிறார்கள் அவர்கள் தங்களது சொந்த இடம் திரும்பியதும் முஸ்லிம்கள் வந்து குடியேரலாம் என்பது எவ்வளவு அநியாயமான கருத்து. முஸ்லிம்கள் தங்கள் சொந்த இடத்தில் குடியேறுவதற்கு இவ்வாறான ஒரு நிபந்தனையா? இது இல்லாமல் முஸ்லிம்களும் தமிழர்களும் ஒற்றுமையாக முன்னரைப்போல ஒரே இடத்தில் வாழவேண்டும் என்று நிபந்தனை விதித்திருந்தால் எல்லா முஸ்லிம்களும் ஏற்றுக்கொண்டிருப்பார்கள். ஆனால், புலிகள் கூறும் நியாயத்தை ஏற்றுக்கொள்ள முடியாது!

மொத்தத்தில், புலிகளால் சொல்லப்படும் எந்தக் காரணங்களும் நியாயமானவை அல்ல என்பது மட்டுமல்ல, இம் முஸ்லிம் மக்கள் அங்கு மீள-குடியேறுவதற்கு அவர்களுக்குள்ள உரிமையையும் மறுப்பதாகும்.

நன்றி - நூலகத்திட்டம்



# 'சீன அச்சுறுத்தல்' என்கிற பூச்சாண்டி !

சோவியத் ரஷ்யா சார்பு சோஷலிச நாடுகளது வீழ்ச்சிக்குப் பிறகு இன்னுமொரு வார்த்தையில் குளிர் யுத்த முடிவுக்குப் பிறகு, உலக சமநிலையில் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. பிரான்சிஸ் புக்யாமா(Francis Fukiyama) போன்ற அரசியல் ஆய்வாளர்கள் இது வரலாற்றின் முடிவு (End of History) என்று கூறுமளவுக்கு நிலைமைகள் மாறின. அதேவேளை பிரசித்தமிகு அமெரிக்க நாட்டு அரசியல் ஆய்வாளர் சாமுவேல் ஹன்டிங்டன் (Samuel P. Huntington) போன்றோர் முதலாளித்துவம் முழுமையான வெற்றியடையவில்லை என்றும், அது கீழைத்தேய கலாசார சவால்களை எதிர் கொண்டுள்ளது என்றும் விளங்கப்படுத்தினர். இவர் இங்கு "கலாசார சவால்" என்பதற்கு உதாரணமாக முன்வைத்தது இஸ்லாமிய விழுமியங்களையும் மகத்தான சீனத்தத்துவமான கன்பூசியஸ் (Confucious) தொகுப்பையுமே ஆகும். உண்மையிலேயே சீனநாட்டு அரசியலைக் கற்கும் மாணவர்கள் ஒன்றில் மட்டும் அதிகமாக உடன்படுவார்கள். அதாவது கன்பூசியஸ் மற்றும் மாவோ சேதுங் சிந்தனைகள் (Maozedung Thoughts) சீன நாட்டு வளர்ச்சியில் நிறைய பாதிப்புக்களை செலுத்தியுள்ளன என்பது. சீனப்புரட்சியாளர்கள் கன்பூசியஸ் சிந்தனைகளை அவ்வளவாக பொருட்படுத்தாவிடினும், சிலவேளைகளில் அது எவ்வகையான பாதிப்பினை ஏற்படுத்தவில்லை என்று மறுத்தாலும் யதார்த்தம் முரணாகவே உள்ளன. அதன் தொடர்ச்சி இன்றைய சீனாவின் பலமான நிலைமைக்கும் ஆதாரமாகவே உள்ளது.

சீனாவின் விரைவான பொருளாதார வளர்ச்சி இன்றைய பல்துருவ சமநிலையில் (Muiti polar Sytem) முக்கியமான கவனத்தை ஈர்த்துள்ளது. கன்பூசியஸ் - கம்யூனிச சிந்தனைகளின் தொகுப்பான சீனா அமெரிக்காவின் உலக ஆதிக்கத்திற்கு சவாலாக அமையும் என்றும், சீனாவின் தற்கால அரசியல் ஸ்தீரனம் (Political Stability) அதன் மேலதிக சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்றும், இது இன்னுமொரு குளிர் யுத்தத்தை உற்சாகப் படுத்தும் என்றும் சில அமெரிக்க அரசியலாளர்கள், அரசியல் ஆய்வாளர்கள் உறுதியாக கூறுகிறார்கள். இவ்வாறான கருத்துக்களின் தொகுப்பே ரிச்சர்ட் பர்னஸ்டின் (Richard Bernesten) சீனாவுடனான எதிர்நோக்கும் முரண்பாடுகள் (Coming Conflict With China) என்ற அண்மைய நூலாகும். இக்கருத்துக்களின் ஆசிய வெளிப்பாடுகளாகவே இன்றைய இந்தியப் பாதுகாப்பு அமைச்சரின் சீன அச்சுறுத்தல் (China Threat) வெளிப்பாடுகள் அமைந்துள்ளன.

மிகத்திடீரென்று வளர்ச்சி அடைந்து, உலக அரசியலில் நிறைய பாதிப்பினை செலுத்திவரும் ஒரு நாட்டின் மீதான அரசியல் சந்தேகங்கள் இயல்பானதே. எவ்வாறாயினும் ஒரு நாட்டின் பாதுகாப்பில் (Securits) அதன் தேசிய பாதுகாப்புக் கொள்கை (National Defense Policy) மிகவும் முக்கியமாகும். ஒரு அரசின் பாதுகாப்பில் அதன் தேசிய பாதுகாப்பு கொள்கையின் அணுகுமுறையினை அடிப்படையாகக் கொண்டே அதன் தாக்கங்களை அடையாளம் காணக் கூடியதாகவிருக்கும். பொருளாதார ரீதியில் பலமான எல்லா நாடுகளும் பிராந்திய மற்றும் சர்வதேசிய பாதுகாப்புக்கு சவாலாக "எப்போதும் அமையும்" என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. இக்கட்டுரையின் மூல நோக்கம், சீனாவின் தேசிய பாதுகாப்புக் கொள்கையினை விளங்குவதும், அதன் மூலமாக அது எவ்வாறு பிராந்திய மற்றும் சர்வதேச ஸ்தீரத்தன்மைக்கு சாதகமாகவுள்ளது என்பதனை ஆராய்வதாகும்.

### சர்வதேச பாதுகாப்பு நிலைமை

சர்வதேச பாதுகாப்பு என்பது நாடுகளுக்கிடையிலான உறவில் பலமான நிலையினை அவாவி நிற்கிறது. அதிகார அரசியல் (Power Politics) மற்றும் மேலாதிக்கவாதம் (Hege monism) உலக சமாதானத்துக்கும், ஸ்தீரனத்தன்மைக்கும் இன்னும் சவாலாகவே உள்ளது. குளிர் யுத்தமனப்பான்மை (Coldwar Mentality) மற்றும் அதன் தாக்கம் சில மேற்கு நாடுகளில் பரவலாகவே காணப்படுகின்றன.

இவ்வாறான அணுகுமுறை சர்வதேச பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளது. அண்மைய இந்திய மற்றும் அதற்கு எதிரான பாகிஸ்தானிய அணுகுண்டு முயற்சிகள் சர்வதேச அணு ஆயுதபரிகரண முயற்சிக்கு பெரும் தடையாகக் காணப்படுகின்றன. ஒரு நாட்டின் தேசிய பாதுகாப்பு எப்போதும் நாட்டின் ஆயுத வளங்களை ஊக்குவிப்பதன் மூலமோ, இராணுவ அணிகளை ஏற்படுத்துவதன் மூலமோ ஏற்படுவதில்லை. மாறாக, நாடுகளுக்கு இடையிலான பாதுகாப்பு தொடர்பாக நேர்மையான நம்பிக்கையும், பொதுவான புரிந்துணர்விலும் இது அநேகமான வேளைகளில் தங்கி உள்ளது. மேற்படி கருத்து சீனாவின் சர்வதேச பாதுகாப்பு நிலைமையின் அடித்தளமாகும். இக்கருத்து பின்வரும் மூன்று பரிமாணங்களைப் பெற்றுள்ளது.

- நாடுகளுக்கிடையிலான உறவு சமாதானத்துக்கான ஐந்து கொள்கையின்படி அமைய வேண்டும்.

அ. நாடுகளின் இறைமை தொடர்பான பரஸ்பர புரிந்துணர்வு.

ஆ. பரஸ்பர ஆக்கிரமிப்பின்மை. (Mutual non - aggression)

இ. பிற நாடுகளது உள்ளக விவகாரங்களில் தலையிடாமை.

ஈ. பரஸ்பர மற்றும் சமத்துவமான நன்மைகள்.

உ. சமாதான அணுகுமுறைகள்.

- பொருளாதார ரீதியில் நாடுகள் சமத்துவமான, புரிந்துணர்வுடனான அணுகுமுறைகளைக் கடைப்பிடித்தல்.
- பேச்சுவார்த்தை மூலமாக கூட்டுறவினை, பரஸ்பர புரிந்துணர்வினை ஏற்படுத்த வேண்டும்.

சீனாவின் மாகாணமான தாய்வான் விவகாரத்தில் சீனா சமாதான அணுகுமுறையினையே விரும்புகிறது. இவ்விவகாரத்தை இலகுபடுத்த "ஒரு நாடு இரண்டு முறைகள்" (One Country two Systems) சீனா கையாள்கிறது. இத்தீர்வு ஏற்கெனவே ஹொங்கொங்கில் பிரயோகிக்கப்பட்டு வெற்றிகரமாக அமுலாகிறது. இதன்படி தாய்வான் தனது முதலாளித்துவ முறையினை தொடர்ந்தும் பேணலாம். ஆயின், அவர்கள் சீன இறைமையினை ஏற்கவேண்டும். எவ்வாறாயினும் தாய்வான் பலாத்காரமான முறையினைப் பிரயோகித்து சுதந்திர அரசை ஸ்தாபிக்க நாடினால், எவ்வாறு ஒரு இறைமையுள்ள அரசுக்கு தனது இறைமையினை பாதுகாக்க "எந்த வழியை"யும் பேண உரிமை உள்ளதோ சீனாவும் அதன் உரிமையினைப் பாவிக்க பின்வாங்காது என்று கூறலாம். இந்நிலையை விளங்கிக் கொள்ள சிக்கலற்றது. மேற்கூறப்பட்ட சீனாவின் நிலைப்பாடுகள் பிராந்திய பாதுகாப்பினை சவாலுக்கு உட்படுத்தாத வகையில் அமைந்துள்ளது தெளிவானது.

### தேசிய பாதுகாப்புக் கொள்கை

சீனாவின் பாதுகாப்புக் கொள்கை அதன் மகத்தான புரட்சி தொடக்கம் சுய பாதுகாப்பு நோக்கிலேயே அமைந்துள்ளது. சீனா செல்வாக்கான 5000 ஆண்டு வரலாற்று, கலாசாரத்தைக் கொண்டுள்ளது. இப்பிரமாண்டமான காலப்பகுதியில் பிரசித்தமிகு தத்துவங்கள் தோன்றி உள்ளன. இத்தத்துவங்களின் அடிப்படையிலேயே நாடுகளுக்கு இடையிலான சுமூகமான உறவினை உறுதிப்படுத்த ஆட்சியாளர்களைக் கோருகின்றன. புரட்சிக்குப் பிந்திய கம்யூனிச ஆட்சியாளர்களும் இதே தத்துவத்தினையே பின்பற்றினர். சீனா எப்போதும் அதிகார அரசியலை, மேலாதிக்க வாதத்தைக் கண்டித்தே வருகின்றன. இதன் அடிப்படையில் சீனாவின் பாதுகாப்புக் கொள்கை கீழ்வரும் பரிமாணங்களைக் கொண்டுள்ளன.

- தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதும், ஆக்கிரமிப்பைத் தடுப்பதும், ஆயுத எதிர்ப்பினை (உள்நாட்டில்) முறியடிப்பதும், தேசிய இறைமை, ஐக்கியத்தை பாதுகாப்பதும் சீனாவின் பாதுகாப்புக் கொள்கையின் முதுகெலும்பாகும்.
- தேசிய பாதுகாப்புக் கொள்கையானது நடைமுறையில் உள்ள தீவிர பொருளாதார சீர்த்திருத்தக் கொள்கைகளுக்கு ஆதரவாக அமைதல் வேண்டும். "சீனா சோஷலிச வளர்ச்சிக் கட்டதின் அடிப்படையில் இருப்பதனால்" பொருளாதார விருத்தி முதன்மையாகும். இவ் இலக்கை அடைவதற்காக சகலதுறைகளும் மூல நோக்கமான பொருளாதார விருத்திக்கு ஒத்திசைவாக அமைதல் வேண்டும்.
- சீனா தனது தேசிய பாதுகாப்புக்கொள்கையில் கராறான விடயமாகக் கருதும் நிலையானது. "எதிரிதாக்கும் வரை தாக்குதலில் ஈடுபடக்கூடாது" என்பதாகும். இவ் அணுகுமுறை சீனா எவ்வளவுதூரம் சர்வதேச பாதுகாப்பில் அக்கறையாக உள்ளது என்பதனை விளக்க போதுமானதாகும்.
- சீனாவின் பாதுகாப்புச் செலவானது ஒப்பீட்டளவில் முக்கியமான நாடுகளாக நம்பப்படும் நாடுகளுடன் சிறியளவானது.

சீனாவின் பாதுகாப்புச் செலவானது, நபர்களுக்கான செலவு பராமரிப்புச் செலவு, உபகரணங்களுக்கான சீனாவின் செலவாகக் உள்ளங்குகிறது. 1997ம் ஆண்டுக்கான பாதுகாப்புச் செலவானது 9.8 பில்லியன் அமெரிக்க டொலராகும். இதே ஆண்டுக்கான அமெரிக்கா, ரஷ்யா, பிரித்தானியா, பிரான்சு, ஜப்பான், தென்கொரியா நாடுகளின் பாதுகாப்புச் செலவானது முறையே 267.18, 16.0, 35.6, 36.7, 43.0, 17.2 பில்லியன் அமெரிக்க டொலராகும்.

அதேவேளை, 1997 செப்டம்பரில் சீனா அரசாங்கம் அதன் படை குறைப்பு நிலைப்பாட்டை வெளிப்படுத்தியது. இதன் படி இன்னும் மூன்று வருடங்களுக்குள் சீனா அதன் படைகளில் 500,000 படையினரை குறைக்கவுள்ளது. இவ் அறிவித்தலானது சீனாவின் சமாதானத்துக்கான நேர்மையான, அக்கறையினை வெளிப்படுத்துகிறது. சீனாவின் படைக்குறைப்பு முழுமையாகும்போது மக்கள் விடுதலைப்படையின் (People Liberation Army) எண்ணிக்கை 2.5 மில்லியனாக மட்டுமே பதிவாகும்.

மேற்கூறப்பட்ட விடயங்கள், புள்ளிவிபரங்கள் சீனா எவ்வளவுதூரம் பிராந்திய மற்றும் சர்வதேச பாதுகாப்புக்கு நேர்மையான பங்களிப்பினை ஆற்றி வருகிறது என்பதையும், அதன் சமாதானத்துக்கான அக்கறையினையும் வெளிப்படுத்துகிறது.

### சர்வதேச பாதுகாப்புக் கூட்டுறவு

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையில் ஒரு நிரந்தர நாடு என்ற வகையிலும் ஆசிய - பசுபிக் பிராந்தியத்தில் பெரும் நாடு என்ற வகையிலும் சீனா சர்வதேச பாதுகாப்புக் கூட்டுறவில் கவனத்தை காட்டிவருகிறது. சீனா அதன் வெளிநாட்டு இராணுவ தொடர்பில் சமாதானத்துக்கான ஐந்துக்கொள்கையினையே முன்னிறுத்தி வருகிறது.

சீனா ஏறத்தாள 100 நாடுகளுடன் இராணுவத் தொடர்பை ஏற்படுத்தி உள்ளது. 90 சீனத்தூதுவராலயங்களில் அதன் இராணுவ இணைப்பு காரியாலயங்கள் (Military attach Doffices) அமைந்துள்ளன. அதேவேளை 60நாடுகள் அதன் இராணுவ இணைப்புக் காரியாலயங்கள் சீனாவில் அமைத்துள்ளன.



கடந்த 20 வருடங்களில் 1300 சீன இராணுவத் தூதுக்குழுக்கள் 80 நாடுகளுக்கு சென்றுள்ளன. அதேவேளை 2,100 வெளிநாட்டு இராணுவத் தூதுக்குழுக்கள் பல்வேறு நாடுகளில் இருந்தும் சீனாவுக்கு வருகைத் தந்துள்ளன.

1973 தொடக்கம் சீனா 10,000க்கு மேற்பட்ட வளர்முக நாடுகளுக்கான இராணுவ உத்தியோகத்தர்களை பயிற்றுவித்துள்ளது. மற்றும் அதன் 8000 இராணுவ சிறப்புத்தேர்ச்சியாளர்களையும் வளர்முகநாடுகளுக்கு அனுப்பியுள்ளது.

சீனா அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடனும் இராணுவ ஒத்துழைப்பினை ஏற்படுத்தியுள்ளது.

சீனா அதன் பாதுகாப்புக்கொள்கையில் நம்பிக்கையை உருவாக்கும் செயல்களை (Confidence Builiding Measures) ஊக்குவித்து வருகிறது. அண்மைய காலப்பகுதியில் சீனா அயல்நாடுகளுடன் இச்செயல்பாடுகளை ஊக்குவித்தும், எல்லைப் பகுதியில் இராணுவ அணிகளை குறைத்தும் வருகின்றன.

ஏப்ரல் 1996ல் சீனா மற்றும் ரஷ்யா, கஸகிஸ்தான், கிருகிஸ்தான் மற்றும் தஜிகிஸ்தான் ஆகிய நாடுகள் நம்பிக்கையை உருவாக்கும் செயல்பாட்டு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டன. இதன்படி எல்லைப்பகுதிகளில் இராணுவ மோதல்களை தவிர்க்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இதே ஆண்டு நவம்பரில் சீனா இந்தியாவுடன் இதே மாதிரியான உடன்படிக்கை உடன்பட்டது.

இதனை ஆங்கிலத்தில் Agreement on Confidence - Building Measures in the military field Along the Line of Actual Control in the China - India Border Areas என்று அழைப்பர். இதன்படி எல்லைப்பகுதியில் சமாதானத்துக்கும், ஸ்திரனத்தன்மைக்கும் குந்தகமாக இருநாடுகளும் நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது என இணங்கப்பட்டது.

இவ்வாறான உடன்படிக்கைகளினை சீனா ரஷ்யாவுடனும் (1994), அமெரிக்காவுடனும் (1998) கைச்சாத்திட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதில் ஒரு முக்கியமான விடயம், ஜுன் 1998ம் ஆண்டு சீனா மற்றும் அமெரிக்க ஜனாதிபதிகள் முக்கியமான முடிவுக்கு உடன்பட்டார்கள். இதன்படி இரு நாடுகளும் தமக்கிடையிலான அணுஆயுத இலக்குகளை தவிர்ப்பதும், பிரச்சினைகளை சுமூகமாகத் தீர்ப்பதுமாகும்.

### சீனாவின் ஐக்கிய நாட்டு சமாதானப்பேணல் நடவடிக்கைகள் தொடர்பான அணுகுமுறைகள்

சீனா எப்போதும் சர்வதேச சமாதானத்தை ஊக்குவித்தே வருகிறது. இதன்படி ஐக்கிய நாடுகளது சமாதான ஊக்குவிப்பு செயல்பாடுகளை ஆதரிக்கிறது. ஆயினும், அது கீழ்வரும



அணுகுமுறைகளைக் கடைபிடித்தே வருகின்றன.

- ஐக்கிய நாடுகளது சாசனம் கடைபிடிக்கப்படல் வேண்டும். அத்துடன் நாடுகளது இறைமையினையும், உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாமையையும் பேணல்.
- பிரச்சினைகள் சமாதான வழிமுறைகள் மூலமாகத் தீர்க்கப்படல் வேண்டும்.
- இரட்டை நிலைப்பாடுகளில் (Double Standards) எதிர்க்கப்படல் அவசியம். தனிப்பட்ட நாடுகளது பாதுகாப்புக் கொள்கைகள் ஐக்கிய நாடுகளது பாதுகாப்புச் சபை கொள்கைகளாக கணிக்கப்படக் கூடாது.
- சமாதான நடவடிக்கைகள் நடைமுறைசார்பாகவும், யதார்த்தமாகவும் அமைதல் வேண்டும். தவிர்க்க முடியாத சூழலில் மட்டுமே இவ்வாறான நடவடிக்கைகள் அமைதல் வேண்டும்.

### ஆயுதக்கட்டுப்பாடும், ஆயுதப்பரிகரணமும்

குளிர்யுத்த முடிவுக்கு பிறகு ஆயுதக் கட்டுபாட்டு (Arms conrol) மற்றும் பரிகரணம் (Disar mament) முக்கியமான கவனத்தைப் பெற்றாலும் பெரும் வல்லரசுகள் இதில் காட்டும் "அக்கறை" சர்வதேச பாதுகாப்பினை கேள்விக்குள்ளாக்குகிறது.

-19

நன்றி - நூலகத்திட்டம்



# செம்மணியைத் தோண்டுவது எப்போது?

தமிழ் மக்களின் உயிர், சொத்து, கல்வி, பொருளாதாரம், இன அடையாளம், குடியிருக்கும் தொழில் புரியும் இடங்கள், மத வழிபாட்டிடங்கள் என்பவற்றை முற்றாக அழித்தொழிப்பதற்காக அரசு நடாத்திவருகின்ற யுத்தத்திற்கு அது என்ன காரணத்தைக் கூறினாலும் அக்காரணம் உண்மைக்குப் புறம்பானது என்பது சகலருமறிந்த விடயம்.

புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த இடங்களில் வாழ்ந்தவர்கள் அரச படைகளின் ஆகாயத் தரைத் தாக்குதல்களினாலும் உணவு, மருந்து, எரிபொருள் போன்றவற்றின் பற்றாக்குறையாலும் பெரும் இன்னல்களை அனுபவித்தனர்; அனுபவித்து வருகின்றனர் என்பது வரலாறு. பாஸ் வழங்குதல், நிதி உதவி போன்றவிடயங்களில் புலிகளுக்கும் தமிழ் மக்களுக்குமிடையில் கருத்து வேறுபாடுகள் இருந்தது உண்மை. புலிகளுடைய அரசியல் கருத்துக்களை ஏற்காதவர்களுக்கு அங்கு உரிமைகள் இருக்கவில்லை. அவர்கள் முஸ்லிம் மக்களை வெளியேற்றியது உண்மை தான். இவற்றைச் சரியென்று யாரும் கூறவோ ஏற்றுக் கொள்ளவோ முடியாது தான். ஆனால், புலிகளின் நிர்வாகத்தின் போது

- மக்கள் இரவிலும் வெளியில் அச்சமின்றி நடமாட முடிந்தது.
- மிதிவெடிகளின் அபாயம் இல்லை.
- சுற்றிவளைப்பும் அதனோடு கூடிய அடாவடித்தனங்களும் இல்லை.
- பெண்கள் பாலியல் வ்ல்லுறவுக்கு ஆளாகிக் காணாமற் போகவில்லை.
- ''இரட்சிக்க வந்தவர்களால்'' அறுநூறுக்கும் மேற்பட்டோர் காணாமற் போகவில்லை.
- திருட்டு குறைந்திருந்தது. மதுபாவனை மட்டுப்படுத்தப் பட்டிருந்தது. ஆபாசத் திரைப் படங்கள் தடை செய்யப்பட்டிருந்தன.
- மக்கள் புறாக்கூடுகள் போன்ற முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கவில்லை.
- சிங்களம் பேசும் இராணுவத்தின் ''சிவில்'' நிர்வாகம் நடைபெறவில்லை.

அரசாங்கம் தமிழ் மக்களுக்கு தந்துள்ள ''மீட்பு'' இது தான். இதனைத் தான் தனது பிரசார சாதனங்கள் மூலமாகவும் அடிவருடித் தமிழர்கள் மூலமாகவும் உலகெங்கும் தெரியப்படுத்த சந்திரிகாவின் ஆட்சிமுயற்சி செய்து வருகிறது. இப்போது அதன் யுத்தத்தின் முகமூடி கிழிந்துள்ளதாயினும், அதனை திருத்தி மீண்டும் அணிந்து கொள்ளவே அரசு முயல்கிறது. இதனால் தொடரும் யுத்தம் பல்வேறுவிளைவுகளைக் கொண்டுள்ளது. இதனை யுத்த வெறிபிடித்து அலையும் அரசு அறியாதிருக்கிறது. ஆனால், நாம் அவ்விதம் வாளாவிருக்க முடியாது. ஆகவே, அதனை வெளிப்படுத்துவது ஒரு குடிமகனின் தவிர்க்க முடியாத கடமையாகிறது.

விளைவுகள்

- தமிழ் மக்களின் உரிமைகள் வழங்கப்படக் கூடாதென்பதற்காக சிங்கள இளைஞர்கள் யுத்த முனையில் பலியிடப்படுகிறார்கள். இந்த இளைஞர்கள் பின் தங்கிய கிராமங்களில் வாழும் ஏழைச் சிங்கள மக்களின் பிள்ளைகள். வறுமையின் நிமித்தம் யுத்தத்தின் காரணத்தைச் சரிவரத் தெரிந்து கொள்ளாமலேயே விட்டிற்பூச்சிகளைப் போல் யுத்தகளத்தில் இறக்கிறார்கள். பௌத்த சிங்கள பேரினவாதிகள் தொகையிற் குறைந்தோராயினும் அரசியல் அதிகாரமும், பௌத்த மத பீடங்களின் ஆதரவும் இவர்கட்கு இருப்பதால் யுத்தத்தைத் தொடரும் அதே சமயம் தமது பிள்ளைகளை யுத்த முனைக்கு அனுப்பாமல் பேணிப் பாதுகாக்கவும் முடிகிறது. சிங்கள இளைஞர்களைப் பெருந் தொகையாக யுத்தமுனையில் காவுகொடுத்து அவர்களின் தொகையைக் குறைத்தால் 1971ல் நடைபெற்ற கிளர்ச்சி போன்றதொன்று ஏற்படாமல் தடுக்கவும் முடியும்.
- ஏகாதிபத்திய சுரண்டல்காரர்களால் பௌத்தமும், சிங்கள இனமும் பெருமளவில் பாதிக்கப்பட்டதென ஒரு புறத்தில் கூக்குரலிட்டுக் கொண்டு மறுபுறத்தில் அதே சுரண்டல்காரர்களை முதலீட்டார்கள் என்ற பெயரில் இங்கு அழைத்துள்ளார்கள். யுத்தச் செலவை ஈடுகட்டுவதற்கு இந்தச்சுரண்டல்காரர்களின் தயவு அவசியமாகிறது. இந்த மண்ணில் பிறந்த எமக்கு உரிமைகள் மறுக்கப்படும் அதேவேளை இந்தச் சுரண்டல்காரர்களுக்கு ஏக்கர் கணக்கில் நிலமும், சுரண்டலுக்கான ஏனைய வசதிகளும் வழங்கப்பட்டுள்ளது. வியாபாரத் தேவைக்காக ஒரு கோட்டைக் கட்டிக்கொள்ள போர்த்துக்கேயருக்கு அப்போதைய கோட்டை இராச்சியத்தின் அரசன் அனுமதி கொடுத்தான். ஆனால், வரலாறு இந்தக் கோட்டையுடன் நின்று விடவில்லை. தென் இலங்கை அரசர்கள் தமது அரசினையே அந்நியர்களிடம் கோட்டை விடுமளவுக்கு வரலாற்றில் சம்பவங்கள் நடந்து முடிந்தன. ''வரலாறு மீண்டும் நிகழ்கிறது'' என்றொரு ஆங்கில வாக்கியமுண்டு.
- படையில் உள்ள அதிகாரத் தரப்பினர் பலர் முறைகேடான வழிகளில் பணம் சம்பாதிக்க இந்த யுத்தம் வழியமைத்துள்ளது. ஆயுதக் கொள்வனவு, உணவு விநியோகம் என்பவற்றில் நடந்த ஊழல்கள் இன்னமும் முற்றுமுழுதாக வெளியாகவில்லை. இறந்த இராணுவத்தினரின் உடல்களைச் சுற்றப் பயன்படுத்தப்படும் பொலித்தீன் கடதாசிகள் கொள்வனவிலும் முறைகேடுகள் நடைபெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது. அதிகாரிகள் தங்கள் தரத்திற்கேற்ப இவ்விதம் சம்பாதிக்கையில் சாதாரண படையினன் வாளாவிருப்பானா? அவனும் தடை செய்யப்படாத பொருட்களையும், சோதனை முகாம்களில் பொது மக்களிடமிருந்து பறித்து விற்றுப் பொருள் சேர்த்துள்ளதை நாம் மறக்கவில்லை.
- யுத்தம் பொருளாதாரத்தின் மீது ஏற்படுத்தியுள்ள தாக்கம்பற்றி இன்னமும் பூரணமான விபரங்கள் வெளியாகவில்லை. ஆயினும், அவை பன்முகப் பட்ட தன்மையுடையவையாயுள்ளன.
  - உள்ளூர் உற்பத்தி வீழ்ச்சி, இதன்காரணமாக அப்பொருட்களை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யவேண்டிய நிலை.
  - யுத்தம் இடம்பெயரச் செய்யும் மக்களுக்கு உணவு, நிவாரணம் தற்காலிக இருப்பிடவசதிக்கான செலவு.
  - உத்தேசமான கணிப்பீட்டில் சுமார் 60,000 குடிமனைகள் முற்றாக அழிந்துள்ளன. 35,000க்குமதிகமான வீடுகள் சேதமடைந்துள்ளன. இவற்றை மீண்டும் கட்ட திருத்தியமைக்க ஏற்படவுள்ள செலவு.
  - நீர்ப்பாசனம், கைத்தொழில், போக்குவரத்து, மின்சாரம், தொலைத்தொடர்பு, மீன்பிடி, வீதிகள், பாலங்கள் ஆகியவற்றுக்கு ஏற்பட்ட சேதம் ஏறக்குறைய ரூ. 3500கோடி என மதிப்பிடப்பட்டிருக்கிறது.
  - சுற்றுலாத்துறையும் பெருமளவிலான வீழ்ச்சியைக் கண்டுள்ளது.
  - வெளிநாட்டு முதலீடு வீழ்ச்சி கண்டுள்ளது. 1996 வரையிலான காலகட்டத்தில் 195 கோடி அமெரிக்க டொலராக எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டு மூலதனம் 90 கோடி அமெரிக்க டொலருடன் நின்று விட்டது.
  - அடுத்து பங்குச்சந்தையில் பாரிய வீழ்ச்சியும் சேமிப்புக்கு வங்கிகள் வழங்குகின்ற வட்டி குறைக்கப்படுதலும், எதிர்பார்க்கப்படுகிறது. நாட்டின் உறுதியற்ற நிலைமையினால் வெளிநாட்டவர் தமது முதலீடுகளை மீளப் பெறும் போதும் உள்ளூர்வாசிகள் பங்குகளில் நம்பிக்கை இழக்கும் போது பங்குச்சந்தையில் வீழ்ச்சி ஏற்படுவது தவிர்க்க முடியாத தாகும்.
  - தொழிலொன்றை ஆரம்பிப்பதோ, அல்லது அதனைப் பெருப்பித்தலோ இன்றைய சூழ்நிலையில் விவேகமானதல்ல என்ற கருத்து ஏற்படின் முதலீட்டுக்காக வங்கிக் கடன் பெறுவது குறைவுபடும். இதனால் தம்மிடம் பணத்தை வைப்புச் செய்பவர்கட்கு வட்டிக்கு வழங்குவது வங்கிகட்குச் சிரமமாகிறது. ஆக, சேமிப்புகளுக்கான வட்டிக் குறைப்பென்பது பணத்தை வைப்புச் செய்யாதீர் என மறைமுகமாகக் கூறுவதற்கொப்பாகும்.
  - யுத்தத்தினால் பல குடும்பங்கள் தமது உழைப்பாளிகளை இழந்துள்ளன. - பல பெண்கள் விதவைகளாகிவிட்டனர். பல சிறார்கள் அநாதைகள் ஆகிவிட்டனர். இவர்களின் எதிர்காலம் பற்றிய அக்கறை யுத்தவெறிபிடித்துள்ள அரசுக்கு இல்லாதிருக்கலாம். ஆனால், மனிதாபிமானமுள்ளோர் இவர்களைப்பற்றிக் கவலையடைந்துள்ளனர்.
  - சிங்கள மொழிபேசும் ஒரு இராணுவத்தைப் பயன்படுத்தி தமிழ்மக்களுக்கெதிரான ஒரு யுத்தத்தை நடாத்திக் கொண்டு மறுபுறத்தில் இன ஒற்றுமை பற்றிப் பேசுபவர்கள் உண்மையில் இனங்களிடையே ஒற்றுமையை விரும்புகிறார்களா என்ற ஐயம் மக்கள் மத்தியில் எழுவது தவிர்க்க முடியாதது.

அரசாங்கப் படைகள் என்ன அட்டூழியத்தைச் செய்தாலும் அதனைப் பயங்கரவாதம் எனக்கூற முடியாது எனக் கருதுபர்கள் இருக்கிறார்கள். இவர்கள் தான் அடக்குமுறை அரசாங்கம் ஒன்றினை எதிர்த்து ஒரு இனம் தன்னைப் பாதுகாக்க அதே அரசாங்கம் பயன்படுத்தும் யுத்தக் கருவி ஒன்றைத் தானும் தனது போராட்டத்திற்குப் பயன்படுத்தும்போது அதனைப் பயங்கரவாதம் என்கின்றனர். வியட நாம், வளைகுடா நாடுகளில் அமெரிக்கா புரிந்த யுத்தம் அமெரிக்க பயங்கரவாதத்தின் வெளிப்பாடு. அவ்வாறே ஆசிய நாடுகளை அடக்கியாண்டு அவற்றைச் சூறையாடியமை ஐரோப்பிய பயங்கரவாதம் ஆகும். (**European Terrorism**) இந்தோனிய கிழக்குதீமோரை அமுக்கியதும் பயங்கரவாதமே. இவ்வாறு அரசாங்கங்களின் பயங்கரவாதச் செயல்களைப்பட்டியலிட தனி நூல் தேவை. இவ்வகையில் சிறிலங்கா அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிராகச் செய்யும் காரியங்கள் யாவும் அரச பயங்கரவாதமாகக் கருதப்பட்டுக் கண்டிக்கப்படுதல் வேண்டும். ஐ.நா. சபை போன்ற அமைப்புக்கள் இக்கண்டனத்தைச் செய்யவேண்டும். ''நாம் ஒரு சட்டபூர்வமான அரசாங்கம் மண்ணையும் மக்களையும் பாதுகாக்கவே யுத்தம் செய்கிறோம்'' எனச்சிறிலங்கா அரசு கூறுமாயின் அது பொருந்தாக் கூற்றாகும். ஏனெனில், தமிழ் மக்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் தம்மை ஆளும் அதிகாரத்தை தென்னிலங்கை அரசியல்வாதிகளிடம் ஒப்படைத்ததில்லை. தென்னிலங்கை தமிழ் மக்களைச் சட்டபூர்வமற்ற பலாத்காரத்தினாலே அடக்கி ஆளுகிறது. ஆக, எமக்கு சிறிலங்கா சட்டபூர்வ அரசல்ல என்று தமிழ்த்தலைவர்கள் 80களிலேயே கூறிவிட்டார்கள்.

ஜனாதிபதி, மந்திரிகள் மற்றும் இவர்களைச் சார்ந்து நிற்கும் அருவருடிகள், முதலாளிகள் ஆகியோரின் நலனுக்காகவே இந்த யுத்தம் தொடர்கிறது.

ஆதலில், ஒரு அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைகள் எப்போதுமே நியாயமானவையாகவோ, அன்றேல் சட்டபூர்வமானவையாகவோ இருப்பதில்லை என்பதினை சிறிலங்கா அரசின் இராணுவ செயற்பாடுகள் நிறுவுகின்றன.

ஆரம்பத்தில் குறிப்பிட்டவாறு தமிழ் மக்களை சிறுகச் சிறுக அழித்தொழித்து விடுவது அல்லது அவர்களை இன அடையாளமற்ற ஒரு சிறு தொகையினராக, ஒரு குறிப்பிட்ட இடத்தின் நிரந்தமாக, கூட்டமாக வசிக்காதவர்களாக மாற்ற வேண்டுமென்று இந்த அரசாங்கம் நடாத்துகின்ற யுத்தத்தை ஏதாவது கொள்கைகளையோ, கோட்பாடுகளையோ காரணம் காட்டி நியாயப்படுத்த முனைந்தால் அக்கொள்கையோ, கோட்பாடோ நிச்சயம் தவறானதாக இருக்கும். கோட்பாடுகளைத் திருத்தவேண்டுமேயன்றி, தவறுகளை நியாயப்படுத்த எந்த ஒரு அரசும் முயற்சிக்கக் கூடாது.

பயங்கரவாதத்தை அடக்க உதவுகிறோம் எனக்கூறிக்கொண்டு பல தீய சக்திகள் இந்த நாட்டுக்குள் காலடி எடுத்து வைத்துள்ளன. விரைவில் அவர்கள் தமது நிலைதளைப் பலப்படுத்திக் கொள்வார்கள் சிறிலங்கா ஒட்டகத்துக்கு இடம்கொடுத்த அராபிய நிலையிலிருக்கும் உலகளாவிய ரீதியில் பயங்கரவாதத்துக்கு விதைகளைத் தூவுகின்ற நாடு ஒன்றுதான் இன்று சிறிலங்காவின் தோளில் கைபோட்டுக் கொண்டு தனது புதிய ஆயுதங்களுக்கு பரீட்சார்த்தக் களமாக இத்தீவினைப்பயன்படுத்தி அதனோடு தொடர்பான நாசகார வேலைகளை ஆரம்பித்துள்ளது.

அடுத்து நமது நாட்டில் பத்திரிகைகள் எவ்வளவு தூரம் வளர்ச்சியடைந்துள்ளன என்பதனை அளவிடவும் இந்த யுத்தம் வழிசமைத்துள்ளது. சிறிலங்காவில் பெரிய முதலாளிகளினால் நடாத்தப்படும் சிங்கள, ஆங்கில செய்தித்தாள்கள் தென்னிலங்கையில் ஜனநாயகம், பாதுகாப்பு, மற்றும் சகல வசதிகளும் இருக்க வேண்டுமென ஒருபுறத்தில் கூக்குரல் இடுகின்றன. மறுபுறத்தில், தமிழர்களுக்கெதிரான அரசின் அடாவடித்தனமான யுத்தத்திற்கு ஆதரவும் தெரிவிக்கின்றன. அதாவது, தமிழர்கள் இரண்டாம்தர குடிமக்களாக இருக்க விரும்பினால் சரி, அன்றேல் அவர்கள் அழித்தொழிக்கப்பட வேண்டியவர்களே என்பது தான் இப்பத்திரிகைளின் நிலைப்பாடு என்ற முடிவுக்கு வர நாம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். தென்னிலங்கையில் குண்டு வெடித்தால் அது பயங்கரவாதம் - வடகிழக்கில் இராணுவம் ஷெல் அடித்தால் அது பாதுகாப்பு நடவடிக்கை. இப்படியான பத்திரிகா தர்மத்தைத் தான் பத்திரிகைகள் கைக்கொண்டுள்ளன.

முன்னர் இத்தீவில் கட்டுப்பாட்டில் இருந்த பல்வேறு நோய்கள் மீண்டும் தலையெடுத்துள்ளன. யுத்தம் காரணமாக ஏற்பட்டுள்ள நிதிப்பற்றாக்குறையும், சிவில் நிர்வாக சீர்குலைவும் நோய்த்தடுப்பு வேலைகளை பெரிதும் பாதித்துள்ளன. இன்றைய சூழ்நிலையில் நோய்கள் பரவுமானால் அவற்றைக் கட்டுப்படுத்துவது இயலாத செயலாகி விடும். இதனைப்பற்றி நாட்டில் நிர்வாகப் பொறுப்பில் உள்ளவர்கள் அக்கறை கொள்வதாகத் தெரியவில்லை.

''ஐ.தே.க. ஆட்சியில் புதைக்கப்பட்டவர்களைத் தோண்டி தனது ஆட்சியில் நீதியை பறைசாற்ற விரும்பிய சந்திரிகாவின் படையினர் செம்மணியில் மாபெரும் புதைகுழியில் யாழ். மக்களைப் புதைத்துள்ளனர். இதனை ஆராய சந்திரிகாவின் ஆட்சி சரிந்து விழும்வரை காத்திருக்கவேண்டும் போல் தெரிகிறது.

# பொ.ஐ.மு.ஆட்சி கவிழ்ந்த பின்னரா?

— ம. இராயப்பு —

நன்றி - நூலகத்திட்டம்



# சோமாலியாவாகும் வன்னி !



இது சோமாலியாக் குழந்தையல்ல, வன்னி அகதி முகாம் ஒன்றில் உள்ள ஒரு குழந்தை

கிளிநொச்சி மாவட்டத்தில் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளிடையே போஷாக்கின்மை பெரும்பாதிப்பை ஏற்படுத்தி உள்ளதாக கிளிநொச்சி மாவட்ட தொண்டர் நிறுவனங்களின் ஒன்றியம், கொழும்பில் உள்ள மனிதாபிமான சேவையாற்றும் தொண்டர் நிறுவனங்களின் ஒன்றியத் தவைருக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மக்களின் சுகாதாரம், கல்வி, உணவு, உட்பட மனித வாழ்க்கைக்கு அவசியமான அத்தியாவசியத் துறைகளில் உள்ள பாதிப்புகள், பொதுவான நிலைமைகள் குறித்து அந்த அறிக்கையில் புள்ளி விபரங்களுடன் தெரிவித்துள்ளது.

சுகாதாரத் துறையில் ஆளணிப் பற்றாக்குறை நிலவுவதாகவும், இதன் காரணமாக மலேரியா, வயிற்றோட்டம் போன்ற நோய்கள் பரவுவதைத் தடுப்பதற்கு உரிய நோய்த்தடுப்பு நடவடிக்கைகளை சீராக மேற்கொள்ள முடியாமல் இருப்பதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஐந்து வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை போசாக்கின்மை மிக மோசமாகப் பாதித்துள்ளதாகவும் அந்த அறிக்கை கூறுகின்றது. கடந்த டிசம்பர் மாதம் தொடக்கம் இவ்வருடம், ஆனி மாதம் வரையிலான 6 மாத காலப்பகுதியில், 5 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களின் வளர்ச்சிப் போக்கில் ஏற்பட்ட மாற்றங்களை மாதாந்தம் அவதானித்து, அவர்களுடைய உடல் நிறைகளைப் பதிவு செய்து பட்டியலிட்டதில், ஒரு வயதுக்குக் குறைவான 14ஆயிரத்து 267 குழந்தைகளில் 19.7 வீதமானவர்கள் (under 3rd degree malnutrition level) போஷாக்கின்மையால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பது புலனாகியுள்ளது. ஒன்று தொடக்கம் இரண்டு வயதுக்கு உட்பட்ட 56 ஆயிரத்து, 259 சிறுவர்களில் 52.7 வீதமானவர்கள் போஷாக்கின்மையால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இரண்டு தொடக்கம் 5 வயதுவரையுள்ள 38 ஆயிரத்து 580 சிறுவர்களில் 57.2 வீதமானவர்கள் போஷாக்கின்மையால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது. சிறுவர்கள் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளமைக்கான காரணங்கள் என்ன என்பது குறித்தும் இந்த ஆய்வின் போது ஆராயப்பட்டுள்ளது. அதன்படி,



- கடந்த 1983 ஆம் ஆண்டு முதல் வடபகுதியில் தொடர்ந்து கொண்டிருக்கின்ற யுத்த நிலைமைகள்.
- கடந்த 1992 ஆம் ஆண்டு முதல், 1996 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் இருந்து லட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்த நிலையில், வன்னிப்பகுதியில் வந்து தஞ்சமடைந்தமை.
- மக்கள் தொகையின் அதிகரிப்பிற்கு ஏற்ப வன்னிப்பகுதியில் அடிப்படை சுகாதார இருப்பிட வசதிகள் மேம்படுத்தப்படாமை.
- கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்ட மிக மோசமான மலேரியா மற்றும் வயிற்றோட்ட நோய்களின் தாக்கங்கள்.
- இடம் பெயர்ந்த மக்களிடையே பெருகியுள்ள வேலையில்லாத் திண்டாட்டம்.
- அரசாங்கத்தின் மோசமான நிவாரண வெட்டு நடவடிக்கை.
- தட்ப வெப்ப நிலைகளினாலும், தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கைகளினாலும் ஏற்பட்ட உணவு உற்பத்தி மீதான பாதிப்புகள்.
- கடந்த 1996 ஆம் ஆண்டு முதல் குழந்தைகள், பாலூட்டும் தாய்மார், கர்ப்பிணிப் பெண்கள், நோயாளிகள் போன்றோருக்கான திரிபோஷா உணவுப் பொதி பங்கீடு நிறுத்தப்பட்டமை போன்ற காரணங்கள் சிறுவர்களின் உடல் ஆரோக்கிய நிலைமைகளைப் பாதித்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளையில், கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் 25 ஆயிரம் மாணவர்கள் பிறப்புச் சான்றிதழ்கள் இல்லாமல் இருக்கின்றனர். இதனால், அவர்களின் உயர்கல்வி, மற்றும் தொழில் வாய்ப்பு ஆகியன பாதிக்கப்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட கல்விப் பணிப்பாளர் எஸ்.சுப்பிரமணியம் திருகோணமலை சென் ஜோசப் கல்லூரியில் கடந்த செவ்வாய்க்கிழமை யுனிசெவ் நிறுவனம் நடத்திய கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்துள்ளார்.

இந்த இரு மாவட்டங்களிலும் பிறப்புச் சான்றிதழ்கள் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் கல்வி பயிலும் இந்த மாணவர்களின் பிரச்சினையை ஒரு தேசிய பிரச்சினையாகக் கருதி அவர்களுக்குப் பிறப்புச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொடுப்பதற்குப் பதிவாளர் நாயகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த 1995 இல் இருந்து யாழ் மாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்து வன்னி மாவட்டங்களுக்கு சுமார் 50 ஆயிரம் மாணவர்கள் வந்தனர். அவர்களின் பிறப்புச் சான்றிதழ்கள், அவர்கள் யாழ் மாவட்டத்தில் படித்த பாடசாலைகளில் இருந்து காணாமல், அழிந்து போய்விட்டன. இப்பிறப்புச் சான்றிதழ்களின் மூலப் பிரதிகள், கொழும்பில் அல்லது யாழ் செயலகத்தில் இருக்கக் கூடும். அங்கு சென்று இவற்றைப் பெறமுடியாத நிலையில் இவர்கள் இருக்கின்றார்கள். இவர்களுக்கு உதவி புரிய நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகும் எனவும் அவர் வலியுறுத்தி உள்ளார்.


| மாவட்டம் | இடம்பெயர்ந்தோர் | உள்ளூரில் இடம் பெயர்வு | வெளிமாவட்டங்களிலிருந்து இடம்பெயர்வு | மொத்தம் |
|---|---|---|---|---|
| இராணுவக் கட்டுப்பாடற்ற இடங்கள் | | | | |
| கிளிநொச்சி | 28674 | 45145 | 104173 | 177992 |
| முல்லைத்தீவு | 53822 | 25949 | 155251 | 235022 |
| மன்னார் | 7590 | 21035 | 37430 | 66355 |
| வவுனியா | 3876 | 6329 | 5800 | 15705 |
| துணைத்தொகை | 93962 | 98458 | 302654 | 498074 |
| இராணுவக்கட்டுப்பாட்டிலுள்ள இடங்கள் | | | | |
| மன்னார் | 28940 | 15758 | 2652 | 47350 |
| வவுனியா | 62690 | 8361 | 35703 | 106754 |
| துணைத்தொகை | 91630 | 24119 | 3393 | 154104 |
| மொத்தத் தொகை | 195592 | 123677 | 341009 | 649178 |

—திரு

# அகதிகளின் தேசத்தைக் கண்டோம்..!

## கந்தளாய், வான்எல மற்றும் கிண்ணியாவில்...

தமிழில்:ரத்னா நன்றி:யுக்திய



வடக்கு - கிழக்கு யுத்தத்தில் சிக்கிக் கொண்ட எல்லைக் கிராமங்களின் விபரங்களைத் திரட்டும் பிரஜைகள் ஆணைக் குழுவினால் ஒக்.31ம் திகதி சனியன்று கந்தளாய் வான்எல்ல மற்றும்கிண்ணியா பிரதேசங்களில் சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். கந்தளாய் தேர்தல் தொகுதியைச் சேர்ந்த பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பலர் சாட்சியமளிக்க வருகை தந்திருந்தனர். பேராசிரியர் ஜயசேகர, எஸ்.ஜி.புஞ்சிஹேவா, அர்ஜுன பராக்ரம, நீர்வை பொன்னையன், சட்டத்தரணி பாயிஸ், விமல் பெர்ணான்டோ, விரிவுரையாளர் லீலா ஐசக் ஆகியோர் சாட்சியங்களை விசாரிக்க வருகைத் தந்திருந்தனர்.

### "மகன் இறந்து போனார். இதனால் கணவனும் இறந்து போனார்"

மரியம் பீபி அப்துல் மனார் -

பணிச்சகுளம், வான்எல்ல.

'நான் நான்கு பிள்ளைகளின் தாய். 1996ல் பணிச்சகுளத்தில் ஏற்பட்ட சண்டையில் எனது ஒரு மகன் இறந்து போனார். மகன் ஏழு வருடங்களாகவும், கணவன் எட்டு வருடங்களாகவும் எல்லைக் கிராம பாதுகாவலர்களாக தொழில் புரிந்தனர். மகனுக்கு மட்டும் ரூ.2500 நட்டஈடு கிடைத்தது. இறந்த கணவனுக்கு ஒரு சதம் கூட கிடைக்கவில்லை. கணவன் இறந்த கொஞ்ச காலத்திற்குப்பின் நான் இன்னுமொரு திருமணம் செய்து கொண்டேன். இதனால் கணவனுக்காக கொடுக்கும் நட்டஈட்டைச் கொடுக்க முடியாதாம். எனது மகனின் சம்பளத்தையாவது எனக்குப் பெற்றுத் தருமாறு கோருகிறேன்.'



### "முதலில் பிள்ளையைக் கடத்திக் கொண்டு சென்றார்கள். பின்னர் கணவனை கடத்திக் கொண்டு சென்றார்கள்"

--கிண்ணியா அல் நஜாதி பாடசலையில், ஆணைக்குழுவின் முன் சாட்சியமளித்த கச்சகுடித்தீவு அப்துல் முத்தலிப் ஜொஹொரம்மா

1991ல் எனது கணவனை பயங்கரவாதிகள் கடத்திச் சென்றனர். அதற்கு முன்னர் 1990ல் எனது பிள்ளையொன்றைக் கடத்திச் சென்றார்கள். நான் அதற்காக நட்டஈடு கோரினேன். அரசாங்கம் நட்டஈடாக ரூ.15,000 தந்தது. பிள்ளையின் பெறுமதியாக 15,000 ஐ கூறமுடியுமா? இதுவரை, இவர்கள் இருவர் தொடர்பாகவும் எந்தவித தகவலும் கிடைக்கவில்லை. அவர்களைக் கொன்றிருப்பார்கள். எனக்கு இன்னும் ஐந்து பிள்ளைகள் உள்ளனர். அவர்களைக் கூலி வேலை செய்தே காப்பாற்றுகிறேன். கூலி வேலைச் செய்யவும் பயமாக உள்ளது. எப்போது எங்களைக் கொல்லப் போகிறார்களோ தெரியாது. எங்களது கிராமத்தை 90ல் பயங்கரவாதிகள் தாக்கியபோதிலும், இதுவரை நட்டஈடோ, வீட்டைக் கட்டிக் கொள்வதற்கான உதவிகளோ கிடைக்கவில்லை. நாம் அனுபவிக்கும் துன்பங்களை கொழும்பில் உள்ளவர்களால் விளங்கிக் கொள்ள முடியாது.'

### "புனருத்தாரண கொடுப்பனவுகள் எங்கே?"

- சமரக்கோன் பண்டா - வான்எல்ல.

'எனக்கு நான்கு பிள்ளைகள் உள்ளனர். இருவர் பாடசாலைக்கு செல்கின்றனர். நான் எல்லைக் கிராம படையில் தொழில் புரிகின்றேன். பயங்கரவாதப் பிரச்சினைகள் காரணமாக பிரதேசத்தை விட்டுச் சென்று திரும்பி வந்தாலும் புனருத்தாரன கொடுப்பனவுகள் (மீண்டும் தங்குவதற்கான கொடுப்பனவுகள்) எமக்கு இன்னும் கிடைக்கவில்லை. 86/87 காலப்பகுதியில் திரும்பி வந்தவர்களுக்குக் கூட கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு விட்டன. பிரதேச செயலக அலுவலகத்தில் லஞ்சம் வழங்கித் தான் நட்டஈட்டுக் கொடுப்பனவை பெற்றுக்கொள்ள முடியும். பலரினால் அக்கொடுப்பனவை பெற்றுக்கொள்ள முடியாமைக்கு காரணம், காணி உறுதி இல்லாமையே. இந்த உறுதி பிரதேச செயலக அதிகாரிகளால் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டியது. இக்காரியாலயங்களில் வேலைகள் ஒழுங்காக நடைபெறுவதில்லை. அங்கு போதிய அதிகாரிகள் இல்லை. லஞ்சம் கொடுத்தால் தான் இருக்கும் அதிகாரிகள் வேலையில் அக்கறை எடுக்கின்றனர். காணி உறுதி இல்லாததால் எமது வீடுகளை மீளமைக்கவும் முடியாதுள்ளது. பிரதேசத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளின் நிலையும் இது தான். அதிகாரிகளது அக்கறையின்மையால் அபிவிருத்தித் திட்டங்கள் எதுவும் நடைபெறுவதில்லை.'

### "முஸ்லிம், தமிழ், சிங்கள மக்கள் அனைவருக்கும் இராணுவத்தால் தொந்தரவு"


--சேருவில விகாராதிபதி சரணகீர்த்தி தேரர்.

'நான் 1984லிலிருந்து இந்த பிரதேசத்தில் வாழ்ந்து வருகிறேன். பிரதேசத்தில் வாழும் ஒவ்வொரு இனத்தவருக்கும் எதிராக மேற்கொள்ளப்படும் அநீதிகளுக்கு எதிராக நான் செயற்பட்டு வருகிறேன். வான்எல்லை பிரதேசத்தில் முஸ்லிம், தமிழ் மக்களுக்கு சில சந்தர்ப்பங்களில் இராணுவத்தினரால் ஏற்படும் அசௌகரியங்களுக்கெதிராக நான் மக்கள் பக்கத்தைச் சார்ந்து வேலை செய்துள்ளேன். பயங்கரவாதப் பிரச்சினை காரணமாக 1985 தொடக்கம் மக்கள் தமது பிரதேசங்களை விட்டுச் செல்லத் தொடங்கினர். அன்றிலிருந்து யுத்த சூழ்நிலை காரணமாக இப்பிரதேச முஸ்லிம், சிங்கள, தமிழ் மக்கள் மோசமான தாக்குதல்களுக்குள்ளாகி வருகின்றனர். இந்த யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டது தமிழ் மக்களே என்பதை கந்தளாயில் வாழும் தேரர் என்ற வகையில் பயமின்றிக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தனிப்பட்டவர்களின் தேவைகளுக்காக இந்த யுத்தம் மேற்கொள்ளப்படுகின்றதேயொழிய எமது தேவைகளுக்காக மேற்கொள்ளப்படும் யுத்தமல்ல இது. உறுதியாக இந்த யுத்தத்தை மேற்கொள்ள வேண்டுமென கூறுபவர்களுக்கு, இது புத்திசாதுரியமான செயலல்ல என்றே நான் கூற விரும்புகிறேன். யுத்தத்திற்கு செலவாகும் பணம், உயிர் இவற்றைக் கொண்டு பாரிய அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள முடியும்.'

### "கிராம சேவகர்கள் தென்னோலைகளை விற்று சாப்பிடுகின்றனர்?"

-காதர் மொய்தீன் நூஹில் லெப்பை.



'1990ல்' புலிகள் எம்மைத் தாக்கியபின் எமக்கு எங்கு செல்வதென்றே புரியவில்லை. அகதி முகாம்களில் இருந்தாலும் உதவிகள், நலன்கள் பல கிடைக்கும். உறவினர் வீடுகளில் தங்கினால் இந்நலன்கள் கிடைக்காது. இது மிகவும் புதுமையான சட்டம். மீண்டும் எங்களை அப் பிரதேசங்களில் தங்க வைக்க முயற்சிக்கிறார்கள். 110 குடும்பங்களில் 60 குடும்பங்களை தங்க வைத்து விட்டனர். கிராமசேவகர் மக்களை பலாத்காரமாக குடியேற்ற முயற்சிக்கின்றார். இவர் வீடு கட்ட உதவும் தென்னோலைகளை விற்று விடுகின்றார். மக்கள் அகதி முகாம்களில் வசிப்பதை இவர்கள் விரும்புகின்றனர். அப்பொழுது அகதிகளுக்கு கிடைக்கும் நலன்களில் சிலதை பெற்றுக் கொள்ளலாம் அல்லவா? இது தொடர்பாக சிலர் பிரதேச செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவித்திருந்தனர். நான் நேரடியாக போய் கூறினேன். ஆனால், என்னை முல்லேரியாவில் இருந்து வந்த பைத்தியக்காரன் என கூறினார்கள். கிராமசேவகர் தான் பைத்தியக்காரன் என்பதைக் கூற விரும்புகிறேன். அதனால் தானே **அகதிகளுக்கான உதவித் தொகையை கொள்ளையடிக்கின்றார்.'**

### "கணவன் இல்லாததால் நட்டஈடு குறைந்துவிட்டது"

-ஜி.எம். சோமாவதி

'எனக்கு ஏழு பிள்ளைகள் உள்ளனர். நான்கு பேர் திருமணம் முடித்து விட்டனர். கிராம எல்லை பாதுகாப்பு படையில் வேலை செய்த மகன் அஜந்த, 1986ல் பொலிஸ் காவலரணை புலிகள் தாக்கியவேளை இறந்து போனார். இருவர் இன்னும் பாடசாலைக்குச் செல்கின்றனர். மகன் இறந்தபின் ரூ.25,000 நட்டஈடு கிடைத்தது. அதன்பின் சுமார் ஒரு வருடம் மட்டும் ரூ.3058 கிடைத்தது. எனினும், ஒரு வருடத்திற்கு பின் ரூ.1050 தான் கிடைக்கும். 3058 கொடுத்ததில் இருந்து அப்பணத்தை கழிப்பதால் எனக்கு ரூ. 525 மட்டும் கையில் கிடைக்கும். குடும்பத்தில் தாய் மட்டும் இருப்பதால் தான் இம்முறையாம். முழுப் பணம் கிடைக்க தகப்பனும் இருக்க வேண்டுமாம். எனது வயலில் ஒரு ஏக்கரை கூலிக்கு கொடுத்துள்ளேன். நானும் இரு பிள்ளைகளும் இதன் மூலம் கிடைக்கும் ரூ.525ல் வாழ்கிறோம். பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பவும், வாழவும் வேறு வழியில்லை. பிள்ளையின் முழுச்சம்பளத்தை கோரி எல்லைக் கிராம பாதுகாப்பு அலுவலகத்துக்கு எழுதினாலும் இன்னும் தீர்வில்லை.'


நன்றி - நூலகத்திட்டம்




# யுத்தச் சூழலில் பெண்கள்:

# பாலியல் நோய்களுக்காக மாணவிகள் வைத்தியசாலையில்!

-ரத்னா






யுத்தமயப்பட்ட சமூகத்தில் வாழும் பெண்களின் நிலைமைகள் எவ்வாறிருக்கும்?

இந்த வினாவுக்கான விடை மிகவும் சிக்கலானது. யுத்தமய சூழலில் வாழ்ந்துணரும் ஒவ்வொரு பெண்ணினாலுமே இதற்கான விடையைக் கூறிக் கொள்ள இயலும்.

"யுத்தத்தினால் முதலில் பாதிக்கப்படுவதும், இரண்டாவதாக பாதிக்கப்படுவதும் பெண்களே" என்ற ஒரு பிரபல கூற்று நிலவுகின்றமையை அனைவரும் அறிந்திருக்கக் கூடும். இலங்கையில் நடைபெறும் யுத்தத்தினால் ஏற்பட்டுள்ள யுத்தமய சூழல், இலங்கைப் பெண்களை பாதிக்கின்ற பாதித்துள்ள விடயம் வெவ்வேறு கோணங்களில பலராலும், பல நிறுவனங்களினாலும் அலசி ஆராயப்பட்டுள்ளன. எனினும், துரதிருஷ்டவசமாக இவ் ஆய்வுகள் ஒரு சில வரையறைகளுக்குள் மட்டுப்படுத்தப்பட்டு விடுகின்றன. இதற்குப் புறம்பாக, யுத்த சூழலிலிருந்து விலகி, யுத்தத்தின் மறைமுகத் தாக்குதலுக்குள்ளாகும் சூழலில் வாழும் பெண்களின் நிலைமைகள் பெரிதும் பலரதும் அவதானத்துக்குட்படுவதில்லை.

பொதுவாக, யுத்தச்சூழலிருந்து விலகி கொழும்பு போன்ற வேறு பிரதேசங்களுக்கு நகர்ந்திருக்கும் குடும்பங்களில் வாழும் பெண்கள், அதேபோல் எல்லைக் கிராமங்களில் வாழும் பெண்கள் என்போரை மேலதிக விளக்கத்துக்கு உதாரணத்துக்கு எடுத்துக் கொள்ளலாம்.

இவ்வாறான சூழலில் வாழும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்ன? அவர்கள் எவ்வாறான சிக்கல்கள் , அழுத்தங்கள் என்பனவற்றுக்கு முகம் கொடுக்கின்றனர்? இந்த சமூகமும் அரசாங்கமும் இவர்களிடம் எதிர்பார்ப்பது என்ன? போன்றன இங்கு முக்கியமாக மேலெழும்பும் கேள்விகள்.

இவ்வாறானதொரு உரையாடலுக்கு வழிவகுக்கக் கூடிய வகையில், கடந்த ஒக்டோபர் மாதம் 2ம், 3ம்திகதிகளில் மோர்ஜ் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட கருத்தரங்கு விளங்கியது. 'இலங்கை யுத்தம் பெண்களைப் பாதிக்கும் முறையும், சமாதான இயக்கத்தின் பொறுப்பும்' என்ற தலைப்பில் இக்கருத்தரங்கு இடம் பெற்றது.

எல்லைக் கிராமங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட பெண்கள், மோர்ஜ் இயக்கத்துடன் தொடர்புடைய பெண்கள் அமைப்பு பிரதிநிதிகள், கொழும்பைத் தவிர்ந்த வேறு பிரதேசங்களில் சமாதான செயற்பாட்டாளர்களாக தொழிற்படும் பெண்கள் தொடர்பூடகத்துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் பெண்கள் ஆகியோர் உள்ளிட்ட சுமார் 30 பெண்கள் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டனர்.

'இலங்கையின் தேசிய அரசும், அது ஆணாதிக்கத்தைப் பலப்படுத்தும் முறையும்' என்ற தலைப்பில் சுனிலா அபேசேகரவும், 'இலங்கை தொடர்பூடகங்களினால் யுத்தம் வெளிப்படுத்தப்படும் முறையும் யுத்தத்திற்கு ஆளாகும் பெண்களும், பிள்ளைகளும் மறைக்கப்படும் விதமும்' என்ற தலைப்பில் சுனந்த தேசப்ரியவும், மேலும் பல வெவ்வேறு தலைப்புகளில் குமுதினி சாமுவேல், சட்டத்தரணி நிமல்கா பெர்ணான்டோ ஆகியோரும் கருத்துரைத்தனர்.

இக்கருத்தரங்கில் பெரிதும் பேசப்பட்ட விடயங்களுள் ஒன்றாக, எல்லைக் கிராமங்களில் பெண்கள் அனுபவிக்கும் தொல்லைகள் எல்லைக் கிராமங்களிலிருந்து வருகை தந்த பெண்களால் சுட்டிக் காட்டப்பட்டது.

சுமார் ஐந்து வருடங்களாக எல்லைக் கிராம பாடசாலை ஒன்றில் பணிபுரிந்து வரும் சாந்தனி எனும் பெண் பல விடயங்களை குறித்து சுட்டிப் பேசினார். "எல்லைக் கிராமங்களில் வாழும் பெண்கள் இராணுவத்தினரால் பாலியல் சுரண்டலுக்குள்ளாகின்றனர். நான் படிப்பிக்கும் பாடசாலையில் உள்ள மாணவிகள் வைத்தியசாலைகளில் பாலியல் நோய்களுக்கென சிகிச்சை பெற காத்துக் கிடக்கின்றனர். அங்குள்ள இராணுவத்தினர் அப்பெண்களை தமது இச்சைக்குப் பயன்படுத்திக் கொண்டு பிற பிரதேசங்களுக்கு மாற்றலானதும் இவர்களை கைவிட்டுச் சென்றுவிடுகின்றனர். இதனால் அவர்கள் வேறுவழியின்றி விபச்சாரம் புரிகின்றனர்" என்றார். இது மிகத்தெளிவான யுத்தமயப்படுத்தப்பட்ட ஒரு சமூகத்தின் விளைவு. இதன் அடிப்படையில் பெண்கள் முகம் கொடுக்கும் பல பிரச்சினைகளை அடையாளம் காண இயலும்.

நாடெங்கிலும் தோற்றம்பெற்றிருக்கும் விபச்சார விடுதிகள் இதன் இன்னொரு அம்சம். அனுராதபுரம், இரத்மலானை போன்ற பிரதேசங்கள் விபச்சாரத்திற்கு பெயர்போன பிரதேசங்கள். இங்கு வழமையான வாடிக்கையாளர்கள் பொலிசாரும், இராணுவத்தினரும் தாம். பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிக்கும் செயற்திட்டமாக இது மாறிவிட்டது.

அத்துடன், இலங்கை போன்று யுத்தம் நடைபெறும் நாடொன்றில், பெண்களின் உளவியல் தன்மைகளும் இங்கு அலசி ஆராயப்பட வேண்டும் என்று கருத்தரங்கில் எடுத்துரைக்கப்பட்டது.

பொதுவாக, யுத்தம் நடைபெறும் பிரதேசங்களில் வாழும் பெண்கள் யுத்த அதிர்ச்சியினாலும், பீதியினாலும் உளவியல் பாதிப்புக்குள்ளாகுகின்ற வேளை, யுத்தத்தின் மறைமுக பாதிப்புக்குள்ளாகும் பெண்கள் நீண்டகால உளவியல் விளைவுகளுக்குள்ளாகுகின்றனர். இது தொடர்பாக, பெண்களின் உரிமைகட்காக போராடும் பெண்மணி ஒருவர் 'பெண் முதலில் உளவியல் ரீதியாகவும, பின்னர் உடலியல் ரீதியாகவும் சிதைக்கப்படுவதை இந்தச் சமூகம் ஒத்துக்கொள்வதில்லை'யென குறைபட்டுக் கொண்டார். இந்த நிலையை மனநல மருத்துவர்களிடமும், சஹன, சுமித்ரயோ போன்ற நிறுவனங்களிடமும் சிகிச்சைக்கு வரும் பெண்களிடம் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. தாம் எந்தச்சந்தர்ப்பத்திலும் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு விடுவோம், தமது புதல்வர்களை, புதல்விகளை, துணைவர்களை இழந்து விடுவோம் என்ற பீதி இந்த உளவியலுக்கு முதற்காரணமாய் அமைந்து விடுகின்றன.

இக் கருத்தரங்கில் உரையாற்றிய சுனிரா அபேசேகர இந்த உளவியல் பாதிப்புக்கு மூல காரணமான சுவாரசியமான சில தகவல்களைத் தெரிவித்தார்:

குறிப்பாக ஓர் இனம் அல்லது சமூகம் பெண்களிடம் மிக முக்கியமான அம்சங்களை உறுதியாக எதிர்பார்க்கின்றதெனலாம். 1. மறுஉற்பத்தி, 2. பால் அடையாளம், 3. கலாசாரத்தை பேணல், 4. இனத்திற்காக போராடுதல் என்பன இந்நான்கு அம்சங்கள். இவை ஆணாதிக்க அரசமைப்பினால், கட்டமைப்பினால் பெண்களுக்கு விதிக்கப்படுபவைகளாகின்ற அதேவேளை, யுத்தமய சூழலில் பெண்களுக்கு இவற்றை தெரிவு செய்யும் உரிமை கூட மறுக்கப்பட்டு வலிந்து இவை திணிக்கப்படுகின்றன. இதனால் அரைகுறை மன நோயாளர்களாக இருக்கும் பெண்கள் முற்று முழுதாக மனநோயாளர்களாகி விடுகின்றனர்.

உண்மையில், இத்திணிப்பு பெண்களை உடலில் ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் பாதிப்படையச் செய்கின்றது. உதாரணமாக, தமிழ்ப் பெண்கள் தமது சமூகத்தை வளர்ச்சியுறச் செய்ய மறுஉற்பத்தியில் ஈடுபட வேண்டும். தமது இன அடையாளத்தை பேணும் முகமாக பொட்டிட்டு, பூவிட்டு பொது இடங்களை பிரதிநிதித்துவப்படுத்த வேண்டியுள்ளது. கலாசாரத்தைப் பேணும் முகமாக மத வைபவங்களில் கலந்து கொள்ள வேண்டியுள்ளது. இறுதியில், தமது இனத்தின் இருப்புக்காக ஆயுதம் தாங்கி போராட வேண்டியுள்ளது. யுத்தமய சூழலில் இவற்றுக்கு இருக்கும் தடைகள் பெரிதும் பெண்களைப் பாதிக்கின்றன. இதற்கொப்பான நிலைமையையே சிங்கள, முஸ்லிம் பெண்களும் அனுபவிக்கின்றனர்.


ஒரு புறம் யுத்தத்தின் நேரடித் தாக்கத்தால் விளையும் பாலியல் வல்லுறவுகள், அகதி நிலைமைகள், நிர்க்கதி நிலைமை என்பவற்றோடு மறைமுகத் தாக்கமான பாலியல் சுரண்டல்கள், மன அழுத்தம், சந்தேகத்தின் பேரான கைதுகள் என்பனவையும் குறிப்பிடத்தக்கது.

இக்கருத்தரங்கின் பின்னர் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது, தொடர்பு சாதனங்கள் யுத்தம் தொடர்பாகவும், அதில் பாதிப்புக்குள்ளாகும் பெண்கள் தொடர்பாகவும் வெளிப்படுத்தும் செய்திகள், கட்டுரைகள் பலத்த கண்டனத்துக்குள்ளாகின. பொதுவாக சிங்கள தொடர்பூடகங்கள் யுத்தம் பற்றிய போலியான பிரதிமையை வெளிப்படுத்துகின்றது என்பது கண்கூடு. எனினும், யுத்தத்தினால் நேரடி, மறைமுக பாதிப்புக்குள்ளாகும் பெண்களை பற்றி எத்தனை தொடர்பூடகங்கள் பேசுகின்றன? பெண்கள் அமைப்புக்கள் ஓரிரண்டு அறிக்கைகளுடன் அவற்றின் கடமைகள் முடிந்து விடுகின்றன.

யுத்தமயமாகி விட்ட இச்சமூக சூழ்நிலையில் பெண்களின் நிலைமைகளை திருப்தியாக தரும் என்று கூறுவதற்கில்லை. எதிர் காலத்தில் பயங்கரமான சூழ்நிலைகளுக்கு பெண்கள் முகம் கொடுக்க நேரிடலாம். அதற்கு தீவிரமான, முற்போக்கான பெண்கள் சமாதான இயக்கம் ஒன்றின் தேவை மிக அத்தியவசியமானது என்ற உடன்பாட்டோடு கருத்தரங்கு நிறைவுற்றது.

நன்றி - நூலகத்திட்டம்





# ஒரு மின்னல் மட்டும்

முத்து. இராதாகிருஷ்ணன்

மெல்ல மழை தூறத் தொடங்கியிருந்தது.

சிவசுக்கு இருப்புக் கொள்ளவில்லை. இதென்னடா வம்பாக இருக்கிறதே என அடிக்கடி எரிச்சல் பட்டான்.

விமல் அக்கம் பக்கம் பார்த்தபடி மெதுவாகவே மோட்டார் சைக்கிளை செலுத்தினான். அவனும் உண்மையில் களைத்தே விட்டான். மோட்டார் சைக்கிள் ஹெட்லைட் வெளிச்சத்திற்கு எவ்வளவு நேரந்தான் இப்படி ஓடுவது. பாதையின் இருமருங்கிலுமிருந்த ஈச்சம் பற்றைகளும், புதர்களும், பேய்களைப் போல் ஆடியபடி அருகாக விரைந்தன. விட்டில்கள், பூச்சிகள் முகத்தில் வந்து மோதின.

மச்சான்... இதுதான் பாதையாக இருக்க வேண்டும்.... எனத் திடுதிப்பென விமல் கூறினான். இப்படி நாற்பது தடவை அவன் கூறிவிட்டதை எண்ணினாலும்.... இதுதான் அந்தப் பாதையாக இருக்க வேண்டுமென சிவா வேண்டிக் கொண்டான். ஆனாலும் அவன் இப்படி வேண்டிக் கொள்கிற விடயங்கள் எல்லாம் எதிர்மாறாகத்தான் நடைபெறுவது என்பதும் அவன் மனதில்' உறுத்தியது.

முன்னைய பாதைகளைப்போன்றே பாதையின் இருமருங்கிலுமிருந்த பற்றைகள் உயரம் குறையத் தொடங்கியது. பாதை தரவையின் மையத்தில் முடிவுற்றது. எங்கும் ஒரு பரந்த தரவை வெளியே தென்பட்டது. மெதுவாக மோட்டார் விமல் சைக்கிளை நிறுத்தினான்.... அவனது முகத்தில் வெறுப்பும் களைப்பும் தெரிந்தது. சிவா பின்னிருக்கையில் இருந்து இறங்கி வானத்தை அண்ணார்ந்து பார்த்தான். ஒன்றிரண்டு நட்சத்திரங்கள் வானில் மின்னின..... இடையிடையே மழைத் துறல்களும் விழுந்தன. எங்கும் பரந்த வெளி.. திசைகள் எதுவும் தெரியவில்லை. சலிப்புடன் "விமல் இப்ப என்ன செய்யிறது....." எனக் கேட்டபடி மணல் தரையில் குந்தினான் சிவா.

அவர்கள் இருவரும் பல்கலைக்கழகத்தில் இறுதி வருடம் படித்துக் கொண்டிருப்பவர்கள். ஒரு ஆய்வு தொடர்பாக கற்கோவளம் என்ற இடத்திற்குப் போய்விட்டு மீண்டும் ஹொஸ்டலுக்குப் போய்க் கொண்டிருந்தனர். வந்த வழியிலேயே சுலபமாகத் திரும்பியிருக்கலாம். ஆனால், விமல் தான் சொன்னான்.

"மச்சான் சிவா.... திரும்பவும் வல்லை வெளிக்கால போறதிலும் பார்க்க கிட்டடிப்பாதை ஒண்டிருக்கு. அதுக்கால போவம்.. உனக்குப் பாதை தெரியும் தானே அப்படி என்றால் சரி இப்ப என்ன வந்தது?" எனச் சிவா ஆமோதித்தான். கப்புது என்ற இடத்துக்கால ஒரு தரவைப்பாதை ஆவரங்காலுக்குச் செல்வது சிவாவுக்கும் தெரியும். ஏறத்தாள 5 மைல் துாரத்தைக் குறைக்கும். குறுக்குப் பாதை அது. ஆனாலும் சிவா ஒரு முறையும் அப்பாதையால் வந்ததில்லை.

இருவரும் ஒரு கடையில் பாதையை விசாரித்து கப்புது வரை சுலபமாக வந்து விட்டனர். கப்புதுவிலிருந்து அப்பாதை பற்றைகள் இருபுறமும் இருக்க ஆரம்பமானது. நேரமும் ஏறத்தாள ஆறு மணியிலிருந்தது.

அந்தச் சிறிய சந்தியில் மோட்டார் சைக்கிளை விமல் நிறுத்தினான். மண்ணெண்ணை வித்துக்கொண்டிருந்த ஒரு நடுத்தர வயது ஆள் கையிலிருந்த பீடிக்கட்டையை எறிந்துவிட்டு அவர்களை நோக்கி வந்தார். என்ன தம்பி.... எண்ணை வேணுமே... அவரது விசாரிப்புக்கு "இல்லை" எனத் தலையசைத்த விமல் "அண்ணை ஆவரங்காலுக்கு போக உதுக்கால ஒரு குறுக்குப் பாதை இருக்காம் தெரியுமோ... எனக் கேட்டான். இருவரையும் நிமிர்ந்து பார்த்துவிட்டு அவர் சொன்னார். "தம்பிமார் குறுக்குப் பாதையிருக்குத்தான். ஆனால், அதில போய் மினக்கெடுறதைவிட நெல்லியடி போய் வல்லையால போறதுதான் நல்லது. ஏனென்றால், பாதை ஒரே மணல்த் தரை தரைவைப்பாதை. சில இடங்களில் மணல்" புதையும் எனக் கூறினார். மற்றது இருட்டுக்கு முதல் கடந்திட வேணும். இல்லாட்டி பாதையை தவறவிட்டு விடுவியள். "எவ்வளவு துாரம் வரும்" என சிவா விசாரிக்க என்ன ஒரு மூன்று கட்டை வந்துதில்லை. உப்பிடி நேராய்ப் போனா சரி என்றார் அந்தக் கடைக்காரர்.

அப்ப போவம் என மோட்டார் சைக்கிளை விமல் ஸ்ராட் செய்தான். தம்பி இருட்டிறதுக்கு முந்தி தரவையைக் கடந்திடுங்கோ. இல்லாட்டி பாதையை தவறவிட்டுவிடுவியள் என்றபடி மண்ணெண்ணைப் போத்தல்களை கடையில் அடுக்கத் தொடங்கினார் அந்தக் கடைக்காரர். கடைபூட்ட அவருக்கு நேரம் வந்துவிட்டது. ஆறு மணிக்குப் பிறகு அங்க பெரிதாக சனங்கள் வெளிக்கிடுவது குறைவு.

மோட்டார் சைக்கிள் வேகமெடுத்தது. பாதையின் இருமருங்கிலும் இருந்த புதரும், கிடுகு வேலிகளும் விர்விர்ரென கடந்தன. சிவா கலைந்து காற்றில் பறந்து கொண்டிருந்த தலைமுடியைக் கோதிக் கொண்டான். பாதை கிறவல்ப் பாதையாக இருந்தது. மழைநீரினால் ஆங்காங்கே அரிக்கப்பட்டு பாதையில் பாறைகளும், சிறிய கற்களும் காணப்பட்டன. கரைகளில் அடர்த்தியான மணல் மண் காணப்பட்டது. இவையெல்லாம் உண்மையில் வெள்ளம் ஓடுகின்ற வாய்க்கால்களாகவே இருந்திருக்க வேண்டும் என விமல் நினைத்துக் கொண்டான்.

பாதை ஏற்றமும் இறக்கமும் கொண்டதாக காணப்பட்டது. ஒரு இடத்தில் மணல் அதிகமாகக் காணப்பட்டது. மோட்டார் சைக்கிள் அந்த மணலில் சிக்கி நகரப் பிரயத்தனப்பட்டது. விமல் கால்களை எத்தி எத்தி மணலில் இருந்து விடுபட முயன்றான். சிவா இறங்கிவிட்டான். கியர் மாற்றி ஒரு மாதிரி மோட்டார் சைக்கிள் மணலிலிருந்து விடுபட்டு முன்னேறியது. இப்படி இரண்டு மூன்று முறை இறங்கி உருட்டிய பின் ஏறினர். நேரம் மிக விரைவாகச் சென்றுகொண்டிருந்தது. முன்னிருட்டும், மழையிருட்டும் சேர்ந்து நன்றாக இருட்டிவிட்டது போல் தோன்றியது. நிச்சயமாக கடையில் விசாரித்த இடத்திலிருந்து ஒரு மைல் துாரம் வரை சென்றிருக்க மாட்டோம் என்பது விமலுக்கு புரிந்தது. இப்போது பாதை ஓரளவு நல்ல நிலையிலிருந்தது. மணல் இறுக்கமான கழித்தன்மையானதாக இருந்தது. எனவே ரயர்கள் புதையாமல் இருந்தன. சற்று வேகத்தைக் கூட்டினான்.

மேற்குத் திசைச் சூரியன் மறைந்து சிவப்பாக இருந்தது. அந்த வண்ண விசிறல் எல்லாத் திசைகளிலும் பிரதிபலித்தது. அவற்றுக்கிடையே மழை முகில்களும் ஆங்காங்கு காணப்பட்டன. கண்ணுக்கெட்டிய துாரம் வரையும் புதர்களும் வெற்று வெளியுமே புலப்பட்டது. ஹெட்லைட் வெளிச்சத்தில் பாதை மஞ்சள் நிறமாகக் காணப்பட்டது. மோட்டார் சைக்கிளின் வேகத்துக்கு பாதை ஓடிவருவது ஒரு அமானுஷ்யமான உணர்வை சிவாவுக்கு தந்தது. மெல்ல அருகில் உரசிக்கொண்டிருந்த ஈச்சம் பற்றைகளும், புதர்களும் உயரம் குறைந்த புதர்களாக மாறத் தெடங்கியிருந்தது. பாதை மஞ்சள் நிறமாகத் தெரிந்தது. பாதையில் ஹெட்லைட் வெளிச்சம் படும் துாரம் வரையே பாதை இருந்தது. அதற்கப்பால் எங்கும் இருள் சூழ்ந்தது. பத்தடி அகலமான அந்தப்பாதை திடீர் என பல்லாயிரம் அகலமாக எல்லையற்றதாக விரிவடைந்துள்ளதை இப்போதுதான் விமல் அவதானித்தான். புதர்களைக் காணவில்லை எங்கும் பரந்த தரவைவெளி.

மோட்டார் சைக்கிள் ஹெட்லைட் வெளிச்சம் போகும் இடமெல்லாம் மஞ்சளாக மணல்த் தரை தெரிந்தது. விமல் நிதானத்துடன் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு நிமிர்ந்த போது கொஞ்சமிருந்த சிவப்பு விசிறலும் காணமற்போய்விட்டது. எங்கும் காரிருள் சூழ்ந்து பரவியது. இப்போது பாதை முடிந்து தரவைக்குள் நிற்பதை சிவாவும் உணர்ந்தான். நேராகச் சென்னால் தரவை முடிய மறுபாதை இருக்கும் தானே என அவன் எண்ணினான்.

மீண்டும் வண்டி ஓடத்தொடங்கியது. இலக்கற்று ஓடியது. நேர்த்திசை என எண்ணியவாறு பத்து நிமிடம் ஓடிபின்னர் மீண்டும் நிறுத்தப்பட்டது. அங்கு நிலம் மிகச்சேறாகக் காணப்பட்டது. உவர்த் தன்மை கொண்ட உவர் நீர் ஆங்காங்கே தேங்கிக் கிடந்தன. பாதை எதுவும் தென்படவில்லை. மோட்டார் சைக்கிளை திருப்பிய' விமல் ஹெட்லைட் வெளிச்சத்தில் கூர்ந்து பார்த்தபடி மோட்டார் சைக்கிளை உருட்டினான். பின்தொடர்ந்த சிவா திடீர் என நின்றான். அங்கு ஒரு லொறியின் ரயர் போன அடையாளம் மண்ணில் தென்பட்டது. அந்த ரயர் அடையாளத்தை வைத்துக்கொண்டு இருவரும் தொடர்ந்தனர்... அப்பாதை சடுதியாக திரும்பியது. சிறிய புதர்களுக்கூடாக தெளிவாக இரண்டு ரயர் போன பாதைகள் மட்டும் வெண்மையாகக் காட்சி தந்தன. ஒரு மாதிரி பாதை கிடைத்து விட்டதென விமல் நம்பினான். புதர்கள் சற்று உயரம் அதிகமான பற்றைகளாக மாறத் தொடங்கின. பாதை நடுவே சென்றது. சிவாவும் ஒரு மாதிரி நிம்மதிப்பெருமூச்சு விட்டான்.

எப்படியும் இரவு எட்டு மணிக்கு மேல் ஆகிவிட்டிருக்கும் என எண்ணினான். விமலின் வாயில் இருந்து விசிலும் மெல்லக் கிளம்பியது. எல்லாம் கொஞ்ச நேரந்தான், அந்தப்பாழடைந்த கிணற்றைக்காணும் வரைதான். சடுதியாக மோட்டார் சைக்கிளை விமல் நிறுத்தினான். பாதையின் எதிரிலே பாழடைந்த, சுவர் இடிந்த கிணறு ஒன்று காணப்பட்டது. இந்தப்பாதை அந்தக்கிணற்றடிக்கு செல்லவே பயன்பட்டிருந்தது என்பது இருவருக்கும் விளங்கியது. ஹெட்லைட் வெளிச்சத்தில் உடைந்த கிணற்றுக்கட்டு தென்பட்டது. உள்ளே தண்ணீர் இருக்கின்றதோ தெரியாது.

விமல் சலிப்புடன் மோட்டார் சைக்கிளைத் திருப்பினான். தண்ணீர்த் தாகம் உயிரை எடுத்தது. மீண்டும் அந்தப்பாதை வழியாகவே மோட்டார் சைக்கிள் திரும்பியது. மீண்டும் வெண் மணற்றரவைக்குள் வந்து சேர்ந்தனர். "விமல் இப்ப என்ன செய்யிறது" சலிப்புடன் எழுந்த சிவாவின் கேள்வியில் அவன் இருந்த பக்கம் திரும்பினான்.

ஒருவர் முகம் ஒருவருக்கு தெரியாத கும்மிருட்டு. ஆனாலும், ஆட்கள் இருப்பது நிழல்போல் புலப்பட்டது. இடையிடையே வெட்டிய மின்னல்கள்தான் அவர்களைப் புலப்படுத்தியது. இப்ப என்ன செய்யிறது செய்வதற்கு ஏதுமில்லை என்பதை தெரிந்துகொண்டே விமலை மூன்றாம் முறையாக சிவா வினவினான். விமல் ஒன்றும் பேசவில்லை. ஆங்காங்கே ஒளிவிட்ட சில நட்சத்திரங்களை கணக்கிட்டவாறு இருந்தான்.

மத்தியானம் ஒரு கடையில் சாப்பிட்டது.. பிறகு பின்னேரம் ஒரு தேத்தண்ணி கூட குடிக்கவில்லை. வயிறு புகையத் தொடங்கி விட்டது.

சிவா மீண்டும் சலிப்படன் என்னடாப்பா இப்படியே இருக்கிறதா என வினவினான். அவனுக்கு நன்றாகப் பசிக்கத் தொடங்கிவிட்டது. இனி அக்கம் பக்கமெல்லாம் பற்றைகளும் இருளும் மட்டுமே.. கண்கள் இருளை பழகிவிட்டாலும் கூர்ந்து பார்க்க தலைப்பட்டதால் கண்கள் உழைவது போலவும் இருந்தது.... நேரம் எவ்வளவாக இருக்கும் என எண்ணியவன் மோட்டார் சைக்கிள் சிக்னல் லைட் வெளிச்சத்தை போட்டு மணியைப் பார்த்தான். பத்து மணியாகிக்கொண்டிருந்தது.... ஏறத்தாழ இந்தப்பாதையைத் தவற விட்டதால் நான்கு மணிநேரமாக இந்த தரைவைக்குள் சுற்றியிருப்பது மனதுக்குள் உறைத்தது. அங்கே எத்தனையோ வேலைகள் உள்ளன. எதுவும் செய்யமுடியாது. இனி விடிந்தால்தான் இந்த தரைவைப் பகுதியை விட்டு வெளியேறலாம் என்பது எல்லாம் சேர்ந்து தலையை இடிக்கத் தொடங்கியிருந்தது. அந்த எண்ணைக் கடைக்காரன் சொன்னபோது கேட்டிருந்தால் இப்ப கொஸ்டலில் நிம்மதியா இருந்திருக்கலாம். இது நடுவழியில் இப்படி நிற்கவேண்டி வந்து விட்டதே என எண்ணிய விமல் பெருமூச்சொன்றை விட்டான்.

இடையிடையே மழைத்துறல்கள் மீண்டும் விழ ஆரம்பித்தன. கண்ணைப் பறிப்பது போல் மின்னல் மின்னியது. மின்னல் வெளிச்சத்தில் அவர்களைச் சுற்றி பலர் சூழ்ந்திருப்பது போன்ற ஒரு பிரமையினை ஈச்சம் பற்றைகள், புதர்கள் என்பவை ஏற்படுத்தின. தொலைவில் இருந்து உருண்டு அருகில் வருவது போல் முழக்கம் முழங்கியது. ஒவ்வொரு மின்னல் வெட்டியதும் சிவா மனதை இறுக்கி கடவுளை வேண்டினான். சின்னவயதில் இருந்தே அவனுக்கு இடி மின்னல் என்றால் சரியான பயம். வீட்டுக்கு தலைப்பிள்ளை. ஆம்பிளைப்பிள்ளை இடிமின்னேக்கே வாசலில் நிற்கக் கூடாது என அவனது இறத்துபோன அம்மம்மா முந்தி அடிக்கடி கூறுவது மனதில் உறைந்து கிடந்தது. ஆனாலும், பயத்தை வெளிக் காட்டாது "விமல் இப்படியே இருக்காமல் இன்னும் ஒருக்கா ஒரு


நன்றி - நூலகத்திட்டம்



பக்கம் போய்ப்பார்ப்பம்" எனக் கூறியபடி எழுந்தான். விமலுக்கும் அந்த முடிவு சரியாகப் பட்டது. இப்படி மின்னலும் மழையும் பெரிதாக வந்துவிட்டால் இங்க கிடந்து நனைய வேண்டியது தான் என்ற நினைப்பே உடலை நடுங்கப்பண்ணி விட்டது. இப்படி எத்தனை தடவை இருப்பது? எழும்பி மோட்டார் சைக்கிளை ஸ்ராட்பண்ணி ஓடுவதுமாக ஒரு இடத்துக்கேயே திசையும் தெரியாமல் சுற்றி சுற்றி வந்தாலும் மீண்டும் மீண்டும் அதையே செய்ய முயன்றனர். ஏனெனில் ஒரு நப்பாசை. இந்த முறை நிச்சயமாக ஒரு வழி கிடைக்கும் என்றவாறு சிவா ஸ்டாட் பண்ணினான். அவனுக்கு இந்த மின்னலுக்கால தப்பிப்போய்விட வேண்டும் என்பது ஆழ் மனதில் உறுத்திக் கொண்டிருந்தது. வண்டி மீண்டும் ஓடத் தொடங்கியது. இலக்கற்ற ஓட்டம் எங்கும். எந்த ஒரு வெளிச்சப் பொட்டும் எங்கும் தெரியவில்லை... விமலுக்கு மோட்டார் சைக்கிளில் இருந்து எண்ணெய் தீர்ந்து விடும் என்ற உணர்வு எழத் தொடங்கியது. ஆனால், பாதை கிடைக்கவில்லை. சிவா கோணடித்து சத்தத்தை உண்டாக்கினான். விட்டுவிட்டு கோண் அடித்தான். இடையிடையே சிக்னல் லைட்டைப் போட்டான். ஆனால், சனங்கள் குடியிருக்காத தரவை நிலப்பரப்புக்களில் எங்கிருந்து உதவி கிடைக்கப் போகிறது. ஆனால், இயங்காது இருக்க முடியாது என்பது மனிதனின் விதியல்லவா. அவர்கள் மீண்டும் மீண்டும் அத்தரவை முழுதும் ஓடினர். அந்த சிக்கலுக்கால வெளியேற வழிகிடைக்காமல் மீண்டும் வண்டி நிறுத்தப்பட்டது. விமல் மண்ணில் பொத்தென விழுந்து படுத்து விட்டான். இனி நான் விடிஞ்சபிறகு தான் எழும்புறது. மனதில் எழுந்த சினமும் பசியும் களைப்பும் எல்லாமாகச் சேர்த்து அவர்களை பிசைந்து விட்டது.

சிவா மோட்டார் சைக்கிளை சற்றுத்தள்ளி நிப்பாட்டி விட்டு, விமலுக்கு அருகில் வந்து இருந்தான். மின்னல் மின்னேக்க இரும்புப் பொருள்களுக்கு பக்கத்தில் இருக்கக் கூடாது என்ற உணர்வு. மனதில் விழுங்கிக் கொண்டான்.

சம்மணமிட்டிருந்த சிவா கைகளை நாடிக்கு கொடுத்து கண்களை மூடிக்கொண்டான். அப்படியும் மூடிய கண்களுள்ளால் வெளிச்சமாக இடையிடையே மின்னல் தெரிந்தது. வேகமான குளிர் காற்று புதர்களிலும், தலைமுடிகளிலும் பட்டு விசித்திரமான சப்தத்தை எழுப்பியது. இன்னும் பல வினோத சத்தங்கள் கேட்கத்



தொடங்கின. தவளை கத்துவது போல் இருந்தது. இப்படி இருட்டுக்குள் பாம்பு ஏதாவது இருந்து கடித்தால்... இந்த நினைப்பே உடம்பை சில்லிட பண்ணிவிட்டது. உடம்பு குப்பென வியர்த்தது. சட்டென எழுந்து கொண்டவன் மோட்டார் சைக்கிள் சிக்னல் லைட்டை போட்டுவிட்டான். அது ஓரளவு வெளிச்சத்தைத் தரும்.

மெல்ல மழைத்தூறல் அதிகரிக்கத் தொடங்கிவிட்டது. மின்னல் மிக வெளிச்சமாக வெட்டிமின்ன மிக அருகில் இடியோசை உருண்டு சென்றது. தன்னையறியாமல் விமலின் கையினை சிவா பிடித்துக் கொண்டான். இந்தப் பயணத்தை ஏன் மேற்கொண்டோம் என்று இருவரும் எண்ணிக் கொண்டார்கள். 'என்னடப்பா பயப்படுகிறாயா....' என விமல் பயமில்லாதவன் போல் கேட்டு தனது பயத்தை மறைத்துக் கொண்டான். மழை சடசடக்கத் தொடங்கிவிட்டது... அந்த மழையின் சடசடக்கும் சத்தத்தை மீறி அந்தச் சத்தம் விமலின் காதில் கேட்டது.

உம்மாமா.... அது... ஒரு மாடு கத்தும் சத்தம். சட்டென ஓடிச்சென்று விமல் மோட்டார் சைக்கிளை ஸ்டாட் பண்ணி ஹெட்லைட் வெளிச்சத்தை நாற்புறமும் படர விட்டான். வடக்காக அங்கு சற்று தள்ளி இரு சுடரான கண்கள் வெளிச்சத்தில் மின்னின. ஒரு மாடு நின்றுகொண்டிருந்தது. அது மீண்டும் இரண்டாம் முறையாகவும் கத்தியதும் விமல் அருகாகச் சென்றான். புதர் கட்டையொன்றில் அந்த மாடு கட்டப்பட்டிருந்தது. சிவாவும் பின்னாலேயே ஓடிச் சென்றான். பெரிதாக சடசடத்த மழை இருவரையும் நனைத்து விட்டு குறைந்து கொண்டது. லேசான தூறலே இப்போது விழுந்தது.

மச்சான் மாடு கட்டியிருக்கென்றால் கிட்டத்தில் சனம் எங்கேயோ இருக்கு.... நாங்கள் கூப்பிட்டுப் பார்ப்போம் என விமல் கூறினான். சிவாவும் அதனை ஆமோதித்து மோட்டார் சைக்கிள் கோணை அழுத்தி ஒலி எழுப்பினான். கோண் சத்தத்தால் மாடு திமிறி ஓடியது.... விமல் "அண்ணோய்... அண்ணோய்...." என விட்டுவிட்டு நாற்புறமும் குரல் கொடுக்கத் தொடங்கினான். சிவாவும் தன் பங்கிற்கு....

"ஐயா ஆரும் இருக்கிறீர்களா ஐயா...." எனக் கூப்பிடலானான். நேரம் பதினொன்றரையைத் தாண்டி விட்டது. ஒரு பத்து பதினைந்து நிமிடம் நாலாபக்கமும் இருவரும் கூப்பிட்டபடியே இருந்தனர். இடையிடையே மோட்டார் சைக்கிள் கோணின் ஒலியையும் எழுப்பினார்கள். மழை மேகம் கலைந்து வானம் நட்சத்திரங்களால் நிறையத் தொடங்கிவிட்டன... "அண்ணோய் என கூப்பிட்ட விமல்தான் அந்த ஒலியைக் கேட்டான்.. கூய்... என அது ஒலித்தது. அதனைத் தொடர்ந்து இருநூறு மீற்றர் தொலைவில் அந்த ஒளிப்பொட்டைக் கவனித்தான்.

சிவாவிற்கு சட்டென உற்சாகம் பறறிக்கொண்டது. அண்ணோய் என மீண்டும் கத்தினான். 'ஓய் ஆராக்கள் உது' என்ற அதட்டல் சத்தத்துடன் அந்த ஒளிப் பொட்டு ஆடியசைந்து வரலாயிற்று. சிவாவும் விமலும் மோட்டார் சைக்கிளை விட்டு விட்டு அந்த ஒளிப்பொட்டை நோக்கி நடக்கலாயினர். அது ஒரு அரிக்கன் லாந்தர் விளக்கு. மழை தூறல்களுக்காக தலையில் கவிழ்க்கப்பட்ட ஒரு கோணிச்சாக்குடன் ஒரு ஆள் மெல்ல நடந்து வந்து கொண்டிருந்தான். மீண்டும் ஆராக்கள் என்ன செய்யிறியள் என குரல் எழுந்தது.


அது நாங்கள் பாதையை தவற விட்டிட்டம் அது தான் என விமல் தயங்கிக் கூறினான். கிட்ட வந்த மனிதன் விளக்கை நன்றாகத் தூக்கி இருவரினதும் முகங்களைப் பார்த்தான். இப்ப நேரம் என்ன தெரியுமே பன்னிரண்டு ஆகப் போகுது. பாதை தெரியாதனீங்கள் இதுக்கால ஏன் வந்தியள். சரி சரி வாங்கோ. மாலுக்க போவம் என கூறியபடி அந்த மனிதன் திரும்ப, விமல் மோட்டார் சைக்கிளை உருட்டியபடி பின் தொடர்ந்தான். சிவசு அருகாக வந்தான். ஒருவரும் கதைக்கவில்லை. இவ்வளவு நேரம் இருந்த சிக்கல் ஒன்றுக்கு ஒரு முடிச்சு கிடைச்ச மாதிரி இருந்தது. புதர்களுக்கால் கொஞ்சத்தூரம் போக அந்த பள்ளமான இடம் புலப்பட்டது. அங்க ஒரு இருட்டுச் சாக்கை தூக்கி உள்ளுக்க அந்த ஆள் நுழைந்தான். அது ஒரு சின்னக் கொட்டில். சாக்கால அடைச்சு மேல தகரம் போடப்பட்டிருந்தது. உள்ளுக்க விளக்கு எரிஞ்சால் வெளியில் தெரியாத மாதிரி இருந்தது. வாங்கோ உள்ளுக்க... இன்னுமொரு தடித்த குரல் கேட்டது.

விமல் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு தலையைக் குனிந்து மாலுக்க போனான். சிவா தலைக்கு மேல் கையை உயர்த்தி ஒரு சொடக்கு சொடக்கிவிட்டுக் கொண்டிருந்தான். அது தகரங்கள் பரல்கள் மண் சட்டிபானைகள் நிறைந்த ஒரு கொட்டில் ஒரே ஒரு கயிற்றுக் கட்டில் இருந்தது. அதில் தலையில் முண்டாசுப்போல கட்டினபடி ஒரு கிழவன் இருந்தான். வாயில் கோடாச் சுருட்டுப் புகைந்து கொண்டிருந்தது.

நரச்சுப்போன மயிரால் நெஞ்சுப் பகுதி நிறைஞ்சு போய்க் கிடந்தது.

வா மோன நீயும் வா.... இப்படி வந்து இருங்கோ... என கிழவன் வரவேற்றது. சாக்கை எடுத்து வைத்த ஆள் கிழவனின் மகனோ தெரியாது. அவன் கீழே குந்தி கைகளை தேய்த்துக் கொண்டான். சிவா அந்தச் சூழலில் எழுந்த மணத்தை நுகர்ந்தபடி கயிற்றுக் கட்டிலின் விளிம்பில் இருந்தான். விமலும் பக்கத்தில் வந்து இருந்தான். என்னபப்பு பாதையைத் தவற விட்டியளோ... உப்படி நெடுக ஆரன் வந்து நிண்டு கத்துகத்தெண்டு கத்துவினம். நாங்கள் என்ன செய்யிறது. கிடந்திட்டு விடியப் போவினம்... மழை வந்ததால் தான் நான் பெடியனை விட்டனான். பெடியன் என்று சொல்லப்பட்ட ஆள் நிமிர்ந்து இருவரையும் பார்த்தான்.

ஓமப்பு நாங்கள் களைச்சுப் போனம். இப்ப என்னெண்டு போறதெண்டு விளங்கேல்ல... மாலை ஆறுமணியில இருந்து தரைவைக்க தான் சுத்திக் கொண்டு நிண்டனாங்கள் என விமல் கூறினான். ஓமோம். ஆவரங்கால் பக்கம் பாதையைக் காட்டிவிட்டால் நாங்கள் ஒரு மாதிரி போவம்... என சிவா தொடர்ந்தான்... மோன..



நீங்கள் ரெண்டு பேரும் என்ன செய்யிறியள். கிழவன் தலையிலிருந்த துண்டை எடுத்து உதறியபடி கேட்டான். கிழவனின் வாயிலிருந்த சுருட்டு மணத்துடன் ஏதோ ஒரு சாராய மணமும் எழுந்ததை இருவரும் உணர்ந்து கொண்டனர். நாங்கள் கம்பஸ்ல படிச்சுக் கொண்டிருக்கிறம்.... என சிவா கூறிக் கொண்டே அந்த மணம் பற்றி யோசித்துக் கொண்டான். ஓ... அது கசிப்பாகத்தான் இருக்க வேணும்.... அங்க இருந்த பானைகள் வெற்றுப் பாத்திரங்கள் பிளாஸ்ரிக் பரல்கள் எல்லாமே அதை இப்போது புலப்படுத்தின.

எழுந்து அருகில் வந்த கிழவன் "மோன பயப்படாத நான் பொடியன கூட அனுப்புறன்.... அவன் ஆவரங்காலுக்கு உங்களை கொண்டு போய் விடுவான். சரியே என்றான். இருவருக்கும் ஒரு மாதிரி பிரச்சினை தீர்ந்த உணர்வு ஏற்பட்டது. என்னப்பா கட்டாயம் இரவு போகவேண்டுமே... இஞ்ச கிடந்திட்டு விடியப் போங்கோவன். கிழவனின் குரல் கரகரத்தாலும், அதட்டல் போலவும் இருப்பதை விமல் அவதானித்தான். இல்லையப்பு எங்களுக்கு றோட்டுக்குப் போயிட்டால் பிறகு பிரச்சினை இல்லை... நாங்கள் போயிடுவம்... என சிவா கூறினான். அங்க கொஸ்டலிலையும் எல்லாரும் பார்த்துக்கொண்டு யோசிச்சுக் கொண்டு இருக்கப் போயினம் அதுதான்... விமல் முடிக்க முன்னே....

சரி சரி.... தம்பி டேய் செல்வராசு உவயளை கொண்டு போய் மேற்கால ரோட்டில விட்டுப் போட்டு விடியலுக்க வா... என சாக்குடன் வந்த ஆளைப் பார்த்துக் கிழவன் கூறினான்.

அப்ப.. என்னப்பு நாங்கள் வரப்போறம்.,. மெத்த பெரிய உபகாரம் என விமல் நன்றி சொல்லியபடி எழுந்தான் அந்த செல்வராசுவும் கையில் ஒரு பையுடன் ஒரு லொடலொடா பழைய சைக்கிளை எடுத்தான். அது பாட்டறிய கீழே கிடந்தது. சிவா தான் அப்பு கொஞ்சம் தண்ணி இருக்கா.. என கேட்டு விட்டான். வாசல் வரையும் வந்த கிழவன் ஒரு அடி முன்னே வந்து ஐயோ.... என்ற பிள்ளை தண்ணி கேக்குது.. இங்க ஒரு சொட்டு தண்ணியும் இல்லையப்பு... கொஞ்சம் பொறு ஒரு சாமான் கிடக்கு. ஆளுக்கு கொஞ்சம் குடிச்சிட்டு வெளிக்கிடுங்கோ என்றவாறு உள்நோக்கி திரும்பிவிட்டான்.

கசிப்பு காச்சிற கொட்டிலுக்க வந்து தண்ணி கேட்டா கிடைக்குமே என தன்னைத் தானே சிவா நொந்துகொண்டான். கிழவன் கிளாஸ் ஒன்றிலே அரைவாசிக்கு கிட்ட சாராயத்தை ஊத்திக்கொண்டு வாசலுக்கு வந்தான்.

இல்லயப்பு... நாங்கள் இது ஒன்றும் பாவிக்கிறேல்ல... தண்ணி ஏதும் இருந்தால் தாருங்கோ என்றுதான் கேட்டனாங்கள். இல்லாட்டியும் பரவாயில்லை....."

ஐயோ ராசா இது ஒண்டும் செய்யாது... என்ர பிள்ளையள் மாதிரி. மழைக்க நனைஞ்சு குளிருக்க விறைச்சு போயிட்டியள்... ஒரு வாய் குடியுங்கோ எனக் கூறியபடி கிழவன் அருகில் வந்து விமலின் நாடியை தடவி கொஞ்சம் குடியெணை என்றது.

இல்லையப்பு எங்களுக்கு வேண்டாம் என விமல் கிழவனின் கையைத் தடுத்தான். என்ர ராசா கொஞ்சம் குடியப்பு என கிழவன் கெஞ்சத் தொடங்கிவிட்டான். அப்பு வேண்டாம்.. இது என்னடா விசர்த்தனமாக் கிடக்கு. விடுங்கோ கரைச்சல் படுத்தாதிங்கோ... என சற்று இறுக்கமாக சிவா கூறிவிட்டான்.

சட்டென நின்ற கிழவனின் முகம் இறுகியது. அந்த லாந்தர் வெளிச்சத்தில் தெரிந்தது. கிழவன் கிளாசை சாராயத்துடன் சுழற்றி வெளியில் எறிந்தது. ஏதோ உளறல் போல கிழவனின் வாயிலிருந்து தூஷணவார்த்தைகள் பொலபொலத்தன... ஒரு மயிரும் பாதை காட்டேலாது... டேய் செல்வராசு போய்ப் படடா... என்றபடி கயிற்றுக் கட்டிலில் தொப்பென கிழவன் இருந்தான். சிவாவும் விமலும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். இது என்னடா.. புதுப்பிரச்சினையாக் கிடக்கு என எண்ணிக்கொண்ட விமல் மெல்ல சிவாவிடம் கூறினான். "மச்சான் உது சரிவராது இதில இருந்திட்டு விடியட்டும் போவம்... என்ன சொல்லுகிறாய்" சிவா சங்கடமாக இருந்தான். தொண்டை வறண்டு வாயிலிருந்து சத்தம் எழ நாதியற்றுப் போயிருந்தது. பேசாமல் ஒவ்வொரு முடல் குடித்துத் தொலைத்திருக்கலாம். அது என்ன கசப்போ சாராயமோ ஒரு முடல் என்னத்தை செய்யப்போது என அவனது எண்ணம் வெளிப்பட்டது.

செல்வராசு சைக்கிளுக்கருகிலிருந்து இருமி இருமி கொட்டிக் கொண்டிருந்தான். ஓ.. இதுகளைக் குடிச்சா இப்படி இருமாம வேற என்ன செய்யிறது.. என விமல் எண்ணிக் கொண்டான். கிழவன் கோடாச் சுருட்டை மீண்டும் மூட்டிக் கொண்டான். ஒருவரை ஒருவர் பார்க்காமல் மௌனமாக சில பொழுது போனது. சிவாவின் கடிகாரத்தில் நேரம் ஒரு மணியைத் தொட்டுக்கொண்டிருந்தது.

அந்த மௌனமான பொழுதை உடைத்தது. கிழவனின் கரகரத்த குரல் தான். செல்வராசு உவயளை கொண்டு போய் விட்டுட்டு நீபோ.. நான் படுக்கப்போறன் என்ற கிழவன் திரும்பிப் பார்க்காமல் கயிற்றுக் கட்டிலில் சரிந்து கொண்டது. தம்பியள் வாருங்கோ... என்றபடி சைக்கிளை நிமிர்த்தி உருட்டத் தொடங்கினான் செல்வராசு.

சிவா கிழவனின் அருகில் போய் அப்பு கோவிக்காதேங்கோ... நாங்கள் போயிட்டு வாறம்... என்றவன் சட்டென அந்தப் போத்தலை எடுத்து வாயில் கவிழ்த்து ஒரு முடலை விழுங்கினான். அந்த வேளை அந்த கிழவனின் முகத்தில் எழுந்த மகிழ்ச்சியும், மலர்ச்சியும், கண்களில் தெரிந்த ஒளியும்... வாயில் போன சாராயத்தின் எரிவையும் கசப்பையும் இல்லாமல் செய்து விட்டது. கிழவன் நன்றிப்பெருக்கோடு நடுங்கும் கைகளால் சிவாவின் கையைப் பிடித்துக் கொண்டான். மெல்ல கையை விடுவித்துக் கொண்ட சிவா செல்வராசுவும், விமலும் நின்ற இடம் நோக்கி நடக்கத் தொடங்கினான். பரந்த வானமெங்கும் சிதறியிருந்த நட்சத்திரங்களைப் பார்த்தபடி செல்வராசுவின் பின் இருவரும் சென்றனர்... பாதை... மிக அருகிலேயே இருந்தது.....

□

நன்றி - நூலகத்திட்டம்



# சாதனைகளின் எல்லைகளை மீறி...

(இறுதிப் பகுதி)

ஒன்பது நூற்றாண்டுகளுக்கு முன் திருவெண்காடு என்னும் ஒரு சோழநாட்டு கிராமத்தில் தன் பட்டறையில் துருத்தி ஊதிக்கொண்டு வெண்கலம் காய்ச்சி, ரிஷபவாகன தேவர் என்னும் இச்சிற்பத்தை வார்த்தவனும், தமிழ்ப்பெயர் தாங்கிய ஒரு ரோடான் தான் என்பதில் ஏதும் சந்தேகம் இருக்கத் தேவையில்லை. அவன் பெயர் நமக்குத் தெரியாது. தரப்படவில்லை. ஆனாலும், அவனும் அவனதேயும் ஆன கலைத்திறன், இந்த சிற்பத்தில் பதிந்துள்ளது. அப்பதிவு அவனை, இத்திருவெண்காடு சிற்பத் தொகுப்பின் மற்ற சிற்பங்களிலிருந்தும் தனித்து அவன் பெயரைச் சுட்டும் பதிவுமாகும்.

அமெரிக்காவில் நடந்த இந்திய விழாவிற்கு எடுத்துச்



செல்லப்பட்ட சிற்பங்கள் இந்தியாவுக்குத் திரும்பிய போது, அவை டெல்லியின் தேசிய கண்காட்சியகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்ட போது அச்சிற்பங்களில் இத்திருவெண்காடு ரிஷபவாகன தேவர் சிற்பத்தையும் பார்த்த ஞாபகம் எனக்கு இருக்கிறது.

இவ்வெண்கலச் சிற்பங்கள் அனைத்தும் 11ம் நூற்றாண்டின் முதல் இருபது வருடங்களில் வார்க்கப்பட்டவை என்பது கல்வெட்டுக்களில் இருந்து தெரிய வருகிறது. இச்சிற்பங்களை வார்ப்பித்து, கோயிலுக்குக் கொடையாக அரச குடும்பத்தினர் அளித்த வருடம் இன்னதென்பது தெரியவில்லை. வார்த்து முடிக்கப்பட்ட ஒரு வருடகாலத்திற்குள் இவை கோயிலுக்கு தரப்பட்டிருக்க வேண்டும். ''சோழ வெண்கலச் சிற்பங்கள்'' என்ற பெயர் தாங்கி உலகம் முழுதும் அவற்றின் உன்னத கலைச்சிறப்பிற்கு புகழ் பெற்றுள்ள, தனிக்குணங்களை மற்ற திருவெண்காடு சிற்பங்களிலும் காண்கிறோம் தான்.

இப்புத்தகத்தின் முகப்பில் அலங்கரிக்கும் சிற்பத்தையே எடுத்துக் கொள்வோம். இச்சிற்பம் யாரைக் குறிக்கிறது என்று இப்புத்தகத்தில் பெயர் ஏதும் சொல்லப் படவில்லை. ஆனால், அச்சிற்பம் பரவை நாச்சியார் தேவாரக் கவிஞர் சுந்தரமூர்த்தி நாயனாரின் மனைவிகளுள் ஒருவர். பாவை நாச்சியாரின் முழுமுகப்புத் தோற்றம் புத்தகத்தின் உள்பக்கங்கள் ஒன்றில் இருக்கிறது. புத்தகத்தின் அட்டையில் அலங்கரிப்பது பரவை நாச்சியாரின் மார்பளவிலான பக்கவாட்டுத் தோற்றம் அது வெண்கலத்தின் கடினமான மேற்பரப்பு அல்ல. அது பெண்சருமத்தின் பட்டு மென்மை கொண்டது. பெண்மையின் கவர்ச்சி அத்தனையும் திரண்டு பொங்கிப்பூத்துள்ளதைக் காணலாம்/ பெண் சருமத்தின் மிருதுவான பரப்பை அதன் பட்டு மென்மையை தொட்டுணரலாம். இதை வார்த்த சிற்பி, வெறும் தொழில்திறன் வாய்த்தவன் இல்லை. ரெனுவாரின் குளிக்கும் பெண் (Bathing Blonde) யை, வண்ணத்திரையில் இல்லை, வெண்கலச்சிலையாக.

இன்னுமொரு சிற்பக் கூட்டம் - கல்யாண சுந்தரர் லக்ஷ்மி அருகில் நிற்க சிவன் பார்வதியின் கையைப் பிடித்து நிற்கும் மணக்கோலம் தன் அரவணைப்பின் பாதுகாப்பு, தரும் தோரணையில், லக்ஷ்மி தன் இடதுகையை பார்வதியின் பின்புறமாகக் கொண்டு சென்று அவள் இடையைத் தொட்டு பார்வையை சிவனின் அருகிற்கு அழைத்துச் செல்கிறாள். மூவரும் தனித்தனி உருவங்கள். இருப்பினும், மூவரும் ஒரு கூட்டமாக பிணைந்து நிற்கிறார்கள். இம்மூன்று உருவங்களும் தனித்தனியாக வார்க்கப்பட்டு பின் ஒரு கூட்டமாக ஒன்றிணைக்கப் பட்டார்களா அல்லது எல்லோருமே ஒரு பெரும் வார்ப்பாக படைக்கப்பட்டனரா? வார்ப்பு முறை எப்படியாக இருப்பினும் சிற்பிக்கு இது ஒரு பெரும் சவால் நிறைந்த காரியமாகவே இருந்திருக்க வேண்டும். இவ்வளவு நூற்றாண்டுகளுக்குப்பின் வந்துள்ள நாம், அப்படைப்பின் நிகழ்வுக்கு நேர் சாட்சியாக இல்லாது போய்விட்ட காரணத்தால், சவால்கள் நிறைந்த இந்த உத்தி சாதனையைக் கண்டு பிரமித்து நிற்பதைத்தவிர வேறு செய்யக் கூடியது ஏதும் இல்லை.

இம்மேதைகள் சொல்லப்பட்ட விதிகளுக்கும் கட்டளையிடப்பட்டதேவைகளுக்கும் ஏற்ப பொருட்கள் படைத்துதரும் வெண்கலக் கொல்லர்கள் இல்லை. சுதந்திர சிற்பிகள் கலைஞர்கள்.

இத்தருணத்தில் சமீபத்தில் டெல்லியில் நிகழ்ந்த ஹென்றிமூர் என்னும் இந்நூற்றாண்டின் தலைசிறந்த பிரிட்டிஷ் சிற்பியின் தன் ஆயுள்கால, பின்னோக்கிய சிற்பக் (Retrospective Show) காட்சியை நினைவுக்குக் கொண்டு வராமல் இருக்க முடியவில்லை. கடந்த சில பத்து வருஷங்களில் ஹென்றிமூர்தான் மிகச்சிறந்த புகழ்வாய்ந்த சிற்பியாக தெரியவந்துள்ளார் என்பது உண்மையே. தான் எடுத்துக் கொண்டுள்ள சிற்ப சாதனங்களில் அவர் எத்தகைய சிறந்த படைப்புக்களை சாதித்துள்ளார் என்பதை விட, ஐரோப்பிய கலைமரபு பொதுவாக கலைஞருக்குத் தரும் சுதந்திரத்தில் அவர் தன்னுடையதேயான தரிசனத்தை பார்வையை தன் படைப்புக்களில் தரமுடிந்திருக்கிறது என்பது விசேடமானது. இத்தகைய சுதந்திரமோ, தனது தனித்துவப் பார்வையும் தரிசனமுமோ இந்திய கலைமரபு தன் கலைஞர்களுக்குத் தந்ததில்லை. இத்தகைய சுதந்திரம் சோழ வெண்கலை சிற்பிகளுக்கு இருந்ததில்லை. புராதன கொலம்பிய சாய்ந்து அமர்ந்த நிலையில் உள்ள சிற்பங் களிலும் மெக்ஸிக நாட்டு டோல் டெக் குலமரபுச் சிற்பங்களிலும் ஹென்றி மூருக்கு இருந்த கவர்ச்சியும் ஈர்ப்பும் அதிகம். இதன்விளைவாக தாய்த்தெய்வவழிபாடு, அவரது ஆழ்மனதில் உறைந்து கிடந்ததும், அது அவ்வப்போது பிரக்ஞை நிலையில் வெளிப்படுவதும், ஒரு குழந்தைக்காக ஹென்றிமூர் வெகு வருஷங்களாக ஏங்கித் தவம் கிடந்ததும், பின் நெடு வருடங்களாக காக்க வைத்துப் பிறந்ததும், இயற்கை தரும் வடிவங்கள், உருவான கற்கள் எலும்புத் துண்டுகள் கற்பாறைகள் இவற்றிலிருந்து அவர் பெற்ற ஆதர்சமும் காணும் வடிவங்களில் எல்லாம் ஓர் தாய் உருவத்தையே தேடும் அடிமனத் தூண்டுதல்களும் - எல்லாம் தான் அவர் சிற்பங்களுக்கு வடிவம் தந்தன. இவையெல்லாம் அவரது சிற்ப சாதனை வரலாற்றின் அவ்வப்போதைய நிலைகளில், கட்டங்களில் அவரது வடிவத்தையும் தீர்மானித்தன. இத்தகைய தனித்துவ தரிசன யாத்திரைக்கான சுதந்திரம், அவரது மரபில் இருந்தது. அவர் எடுத்துக் கொண்டார். இத்தகைய பார்வையும் அவரது 50 வருடகால சிற்ப ஈடுபாடு படைத்துள்ள ஏராளமான படைப்புக்களும் அவற்றின் எண்ணற்ற வகைகளும் தொகையும் அவரை இக்காலகட்டத்தில் மிகப்பெரும் சிற்பியாக உயர்த்தியுள்ளன. இதையெல்லாம் மறுக்கமுடியாது. உண்மை. ஒப்புக்கொள்ள வேண்டும்.

ஆனால், ''சாய்ந்து அமர்ந்துள்ள தாயும் குழந்தையும்'' (Draped Reclining Mother and Child) போன்ற அநேக சாய்ந்து அமர்ந்த நிலையிலான வெண்கலச் சிற்பங்கள் ஏதுவும் குறிப்பாக ''சாய்ந்து அமர்ந்துள்ள உருவம் II - 1960 (5) அங்குல உயரம் 102 அங்குல நீளம், - (இரண்டு தனித்தனி துண்டுகளாக செய்து சேர்த்துள்ளது) படைக்க ஹென்றிமூர் வெண்கலத்தை படைப்புச் சாதனமாக தேர்ந்தெடுத்துள்ள நியாயம் என்ன என்பது புரிவதில்லை.

இவை அத்தனையும் கற்சிப்பங்களாகக் கூட செதுக்கப்பட்டிருக்கலாம். ஹென்றிமூர் தன் சாதனைத் தேர்வின் காரணங்கள், பிரமாண்ட உருவங்கள், மேற்பரப்பின் கரடுமுரடான குணம், அதன் சரசரப்பு எனச்சொல்லும்போது கல்தான் அவரது படைப்பு சாதனமாக இருந்திருக்க வேண்டும். அவரது நோக்கங்களைப் பொறுத்த வரை ''சாதனத்தின் இயற்கையான, இயல்பான குணங்களை மாற்றாது அப்படியே தக்க வைத்துக் கொள்வதில் தான்'' தனக்கு நம்பிக்கை இருப்பதாக ஹென்றிமூரே சொல்லியிருக்கிறார். திரும்பவும் சொல்ல வேண்டும். அவரது நம்பிக்கை இதுவேயானால், வடிவத்தில் பிரமாண்டத்தை தன்னுள் இயல்பாகக் கொண்டிருப்பது கல்தான். அவரது படைப்புகளுக்கு சாதனமாகியிருக்க வேண்டும். வெண்கலம் அல்ல. தன்னுடைய சிற்பப் படைப்புக்கள் திறந்த நிலவெளிகளிலும், மலை உச்சிகளிலும் பரந்த ஆகாயத்தைத் தன் பின்புலமாகக் கொண்டும் வைக்கப்பட வேண்டும். தவிர பொருட்காட்சி சாலைகளின் நீண்ட நடைவழிகளிலும் பரந்த கூடங்களிலும் அல்ல என்பது அவரது தீர்மானமான விருப்பம். ஒரு பெரியகலைஞனின் இத்தகைய விருப்பங்கள் மரியாதைக்குரியவை. போற்றப்பட வேண்டியவை. ஆனாலும் அவரது பிரம்மாண்டமான வெண்கலச் சிற்பங்களை உருவாக்க காய்ச்சி ஊற்றிய வெண்கலக் குழம்பு அத்தனையும் வீண் தானே என்று தான் எனக்குத் தோன்றுகிறது.

ஹென்றிமூரின் சிற்பங்களில் வெண்கலச் சிற்பங்களில் நான் கண்ட இன்னுமொரு விசித்திரமான அம்சத்தைப் பற்றியும் சொல்ல வேண்டும். ஒரு படைப்பின் ஆரம்ப ஆயத்தமாக அவர் காகிதத்தில் வரைந்து கொண்ட வரை (கோட்டுச் சித்திரங்களில் பார்வைக் கோணத்தையும், உள்பரந்து விடும் நிழல்களையும் காட்ட வரைந்த கோடுகளையும், நிழல் பூச்சுக்களும், படைப்பின் முடிவான வெண்கலச் சிற்பங்களிலும் அதே அச்சாகக் காணப்படுவதைச் சொல்ல வேண்டும். இதை ஏன் இப்படிச் செய்கிறார் ஹென்றிமூர்? காகிதத்தில் வரைந்து கொண்டுள்ள வரை கோட்டுச் சித்திரத்தில் காணும் கோடுகளும் நிழல் பூச்சுகளும் வரை கோடுபடத்தில் ஒரு குறிப்பிட்ட கோணத்திலிருந்து மாற்றப்பட முடியாத கோனத்திலிருந்து பார்வை பெறும் சித்திரத்திற்கு முப்பரிமாண தோற்றத்தைக் கொடுப்பதற்காகவே தரப்படுகின்றன. ஆனால், ஹென்றிமூரின் முடிவு பெற்ற வெண்கலச் சிற்பங்களோ தன்னியல்பிலேயே மூன்று பரிமாணங்கள் கொண்டவை. அவற்றிற்கு மாற்ற முடியாத, தீர்மானமான பார்வைக் கோணம் ஏதும் கிடையாது. முன்னாலேயே குறிப்பிட்ட படி ஹென்றிமூரின் விருப்பம். அவர் படைப்புக்கள் திறந்த வெளியில் வைக்கப்பட வேண்டும். திறந்தவெளியின் பின்புலத்தின் ஓர் அங்கமாகவே அவரது படைப்புக்கள் பார்க்கப்பட வேண்டும். மேலும் அவரது விருப்பம் பார்வையாளர்கள் மற்றைய படைப்புக்களைப்போல தூரநின்று அல்ல தனது படைப்புகளின் கிட்ட கோணங்களிலிருந்தும் பாக்க வேண்டும் என்பதெல்லாம் ஆகும். அது மட்டுமல்ல, ''சாய்ந்த உருவம் II'' என்ற சிற்பத்தை எடுத்துக் கொண்டால், அது இரண்டு துண்டுகளாகப் படைக்கப்பட்டிருப்பதிலிருந்து பார்வையாளர்கள் அதன் இடை புகுந்துச் செல்ல வேண்டும் என்று விரும்பியதாகத் தெரிகிறது. திறந்த வெளியில் சூரியனின் ஒளிபாயும் திசையையும் கோனத்தையும் பொறுத்து திறந்த வெளி சிற்பங்கள் தம்முள் கொள்ளும் நிழலும், ஒளியும் மாறுபடும். அப்படி இருக்க ஹென்றிமூர் தன் பார்வையாளர்களின் பார்வைக் கோனத்தின் சுதந்திரத்தில் ஏன் தடையாக நிற்கும் தோரணையில் தன் சிற்பங்களின் நிழல் பூச்சுக்களைக் குறித்தும் கோடுகளைத் தன் முடிவுற்ற சிற்பங்களில் தக்க வைத்துக்கொள்கிறார்?

இவையெல்லாம் என் மனதில் ஓடும் போது, ஒருகேள்வி எழுகிறது. ஒரு பெரிய கலைஞன் என்று யாரைச் சொல்வது? தான் எடுத்துக் கொண்ட சாதனத்தின் எல்லைகளை தன் படைப்பில் மீறுகிறவனா? அல்லது ஹென்றிமூர் போல தான் எடுத்துக் கொண்ட சாதனத்தின் முழுச் சாத்தியங்களைக் கூட பயன்படுத்திக் கொள்ளாதவனா?

இந்த சந்தர்ப்பத்தில் ஹொய்சால சிற்பிகளை எடுத்துக்கொள்ளலாமே. ஹாலேபீடிலும், வேலூரிலும் உள்ள கோவில் சுவர் சிற்பங்களைப் பார்த்தால் எவ்வளவு நுணுக்கமான நெருக்கம் நிறைந்த வேலைப்பாடு நேர்த்தி மிகுந்த சிற்பங்களை அவர்கள் செதுக்கியிருக்கிறார்கள். இவ்வளவு நுணுக்கமும், நெருக்கமும் தந்தத்தில் தான் சாத்தியம் என்று நினைக்கத் தோன்றும். ஆனால், ஹொய்வால சிற்பிகள் இவற்றைச் சாதித்துள்ளது. கற்களில் அவர்களை நான் மாபெரும் கலைஞர்களாகக் காண்கிறேன். - தந்தத்திலான சாத்தியம் என நினைக்கும் வேலைப்பாட்டை கற்களில் சாதித்துக் காட்டியதற்கு ஸ்ரீவெகம், மதுரை கோயில் பிரகாரவெளிகளில் நாம் காணும் சிற்பங்கள் மிகுந்த சிக்கலான மனிதக் கூட்டங்களை சிற்பத்தில் உருவாக்கியவை. அவர்களது கைகளும், கால்களும் தாங்கியிருக்கும் ஆயுதங்களும், அமர்ந்திருக்கும் வாகனங்களும் எவ்வளவோ சிக்கலான பிணைப்புக்களில், தோரணைகளில் சலனபாணிகளில் உடலைவிட்டு தூணை விட்டு வெளியே நீள்பவை. அவை செதுக்கப்பட்ட கற்கள் பல துண்டுகளாகப் படைத்து பின் சேர்க்கப்பட்டவை அல்ல. ஒரே ஒரு ஒற்றைப் பெரும் பாறையில் செதுக்கப்பட்டவை. பார்ப்பதற்கு அவை தனித்தனி உருவங்கள் எனவும், பின்னரே அவற்றை ஒரு குழுவாக சுவர் அல்லது தூண் மாடத்தில் சேர்த்து வைக்கப்பட்டுள்ளன போலவும் தோன்றும் . அல்ல. அவை ஒற்றைப் பாறையில் செய்யப்பட்டுள்ள வேலைப்பாடுகள். இவ்வாறு தன் கலைச் சாதனத்தின் குறுகிய சாத்திய எல்லைகளை மிகப்பெரிய அளவில் சிற்பிகள் மீறியுள்ளார்கள். இச்சாதனைகளின் எல்லைகளை தம் மேதமையால் வெகுவாக விஸ்தரித்துள்ளார்கள். கோனாக் சிற்பங்களைப் பார்த்தால் கற்சாதனத்தின் சுரசுரப்பான கடின மேற்பரப்பை நாம் பார்க்கிறோம். இத்தகைய மிருதுவும் நளினமும் மென்மையும் தோற்றம் தரும் பெண் உடலை எங்கு பார்த்திருக்கிறோம். இத்தகைய மிருதுவும், நளினமும், அழகிய வளைவுகளும் கற்களில் சாத்தியம் என்று எதிர்பார்த்திருக்க முடியுமா? எப்படிச் சாத்தியமாயிற்று? ரிஷபவாகன தேவர். கலியாண சுந்தரர் திருக்கலியாண சிற்பக்கூட்டம். பின் பரவை நாச்சியார் இவற்றையெல்லாம் வார்த்த சிற்பிகள்? 1010க்களில் 1020களில்? 900 வருடங்களுக்கு முன் ஊர்பேர் தெரியாத அநாமதேயங்கள்! தன் கலையின் உன்னதத்தில் தம்மைக் கரைத்துக் கொண்ட அநாமதேயங்கள்.

வெண்கலம்? பிரம்மாண்டம்? பாரம்? கரடுமுரடான மேற்பரப்பு? ப்ரதோஷ் தாஸ்குப்தா வைத்தவிர வேறு யாரும் இக்கேள்விகளை எழுப்பவில்லை. ஏன்? என்ன ஆயிற்று. டெல்லி கலை விமர்சகர்களுக்கு? ஏன்? சாதனங்களின் எல்லைகளை மீறி உன்னத



படைப்புக்களைத் தந்த கலைஞர்களைக் கொண்ட 20 நூற்றாண்டுகள் மரபின் வாரிசுகள் அல்லவா நாம்? இல்லையேல் கடந்து விட்ட காலனியாதிகத்தின் எச்ச சொச்சங்கள் இன்னமும் நம்மைப் பீடித்துள்ளனவா? ஒரு வேளை?

வெங்கட் சாமிநாதன் ■

நன்றி - நூலகத்திட்டம்



## என் சிறு பெண்ணும் அச்சம் தரும் உலகும் நானும்

சிறிய மலராய் விரிந்து மலரும்
என் மகளுக்கு
எப்படிக் காட்டுவேன்
இந்த உலகை.

மாசு மறுவற்ற பச்சைக் குழந்தை
காற்றை எல்லாம் தென்றலென்றெண்ணி
கற்பனையில் சஞ்சரித்து
ஒலியெல்லாம் சங்கீதமென
வாழ்வை இனிதாகவே காணத்தெரிந்த
கன்றுக்குட்டி
என் சிறு பெண்.

வாழ்வின் முழுமைக்கு
பெண் குழந்தை வேண்டுமென்று
பேரவாக் கொண்டிருந்த என் தாய்மை
பிறந்த நாள் முதலாய்
இளஞ்சிவப்பு வர்ணத்தில்
சட்டை தைத்து
பொட்டு வைத்து காதுகுத்தி
பெண்ணாய் அவளை நினைத்த
என் தாய்மை...

பெண்ணென்று பிறந்ததற்காய்
பெருமைப்பட வேண்டுமென்று
கனவுகளில் நினைத்திருந்த
என் தாய்மை...
சிறகொடிக்கப்பட்ட ஒரு
ஒற்றைத் தும்பியாய்
திகைத்துப் போய் மிரண்டு கிடக்கிறது...

வக்கிரம் நிறைந்த விலங்குணர்வின்
குரூரம் நிறைந்த கயமையின் முன்னால்
சிதறிப் போயிற்று சில்லம் பல்லமாய்
சிதறிப் போயிற்று.

என் மகளுக்கு
எப்படிக் காட்டுவேன்
இந்த உலகை...

மூன்று வயதிலும்
பால் முலையருந்தும் பவளவாய்க் குருத்துகள்
கொஞ்சிக் குலவி
நிலாக் காட்டச் சிரிக்கும்
சின்ன வயதிலும்
ஆண் குறிகளால் துளைக்கப் படுவதை
எப்படிக் காட்டுவேன்

அள்ளி அணைக்கின்ற அப்பாவோ
ஆசையுடன் கொஞ்சுகின்ற மாமாவோ ஆயினும்
அடிவயிற்றில் துளையிடும்
ஆண்குறியர்களாகிப் போய்விடக் கூடிய
இந்த உலகை
எப்படிக் காட்டுவேன்

சூழவுள்ள உலகம் முழுவதும்
விறைத்தும் போன
ஆண்குறிகளாய்
அச்சம் தருவதை
எப்படித் தவிர்ப்பேன்

காற்றெல்லாம் தென்றலென்றும்
ஒலியெல்லாம் கீதமென்றும் எண்ணியபடி
சிறகுகளை அகல விரித்து
சிறகடிக்க முடியாது என் பெண்ணே!
வெந்து புண்ணாய்
வலியெடுக்கும் இதயத்துடன்
வாழ்தலும் முடியாது
எழு!
உள்ளே அனலாய்
எரிந்து கொண்டிருக்கும்
பூமியின் வடிவாய்
விரிந்தெழு
பொட்டும் பிறவும்
அலங்கரிக்கும்
மேனியழகு உன் அழகல்ல
வெறியும்
திமிரும்
'அவர்களுக்காய் மலராட்டும்!
அதிகாரமும்
உடைந்து சிதற எழுந்து நில்
உன்னை மீறிய எந்தக் குறியும்
உனது உடலைத் தீண்டாதவாறு
அக்கினிக்குஞ்சாய்
உயிர்த்தெழு!

இந்த உலகின்
பெண்மை வடிவம்
இதுவென் றெழுது!

ஔவை

## கொஞ்சம் கனவுகளும் நானும் என் குழந்தையும்

என் செல்லக் கண்ணே,
என் அம்மா
தன் பொழுதுகளெல்லாம்
சமையலறையிலேயே கரைந்ததாகச்
சொன்னாள்.
என் பொழுதுகளோ
நிவாரண வரிசையில் நிற்பதிலும்
விறகு தேடுவதிலும்
விளக்கெண்ணய்க்காய் ஏங்குவதிலுமே
கரைகின்றன.
விலைவாசியோ
கபீர் விமானம் பறக்கும்
உச்ச உயரத்துடன் போட்டியிட்டு
கைக்கெட்டாமல் போய்விட்டது.
பரலோகத்தை ஆளும் பரமபிதா
வந்தாலும்
பக்டீரியாக்கள் நெளியும்
பச்சைத் தண்ணீர்தான் கொடுப்பேன்.
சுடவைக்க என்னிடம் சுள்ளியில்லை.
என் செல்வமே,
நிலவும் உறங்கும் ஒரு இரவில்
உன்னை
பிள்ளைப் பூரான் ஒன்றிடம்
கொள்ளை கொடுப்பேனோ என்ற தவிப்பில்
நான் தூங்கி நாள் பலவாயிற்று.
இடையிடையில் அயர்ச்சியில்
கண்கள் செருகுகையில்
உனக்கு நான்
எட்டுக் கறியும் சோறும் ஊட்டுவதாய்
கனவுகள் வருகின்றன.
நல்ல வேளை
கனவுகளுக்கு விலையில்லை.
அலரிமாளிகை அதற்கு மட்டும்
தடையிடவில்லை.

மோகனா

## 'செம்மணி'




பெண்களை யுத்தங்களின் கருவியாகப் பயன்படுத்துகிற நிலைமை வரலாற்று நெடுகிலும் இருந்து கொண்டே வந்திருக்கிறது. அண்மையில், மிக மோசமான பதிவுகளைக் கொண்ட நாடு பொஸ்னியா. இத்தொடரில் நமது நாடும் விதிவிலக்கல்ல. அண்மைக் காலமாக 'பெயர்பெற்று' அரங்கத்துக்கு வந்துகொண்டிருக்கிறது. கிருஷாந்தி, கோணேஸ்வரி என்று ஒரு நீண்ட பட்டியல் இருக்கிறது. இவர்கள் பலியானது பாலியல் வல்லுறவால். இதற்குப்பலியான இன்னொரு பிரபலமான உதாரணம் ரீட்டா மனோகரன். இவரின் இழப்பிற்குப் பின்னால் இருப்பது காமம் மட்டுமே. கோணேஸ்வரி, கிருஷாந்தி போன்றோர்களுக்குப் பின்னால் இருப்பது இனவாதம், யுத்தம், காமம், ஆதிக்கம் போன்ற பல கூறுகள். இனங்களுக்கிடையே முரண்பாடுகள் நிலவுகிற நாடுகளில் பெண்கள் பலியாகி வருவது அதிகமென அது தொடர்பான அறிக்கைகள் கூறுகின்றன.

நமது வரலாற்றில் கிருஷாந்தி ஒரு வரலாற்றுச் சுவடாகியிருக்கிறாள். அரச படைகளின் முகத்தில் காரி உமிழ்ந்திருக்கிறாள். சில உண்மைகள் வெளிச்சத்துக்கு வர பின்புலமாயிருந்திருக்கிறாள். இவரை வல்லுறவு புரிந்தனர் என்று குற்றஞ் சாட்டப்பட்ட நான்கு இராணுவ வீரர்களில் ஒருவர் தப்பியோ, தவறியோ வெளியிட்ட உண்மைகளில் ஒன்றுதான் செம்மணி புதைகுழி விவகாரம். நூற்றுக்கணக்கான காணாமல்போனோர் புதையுண்டிருக்கிற 'மர்மயானம்'. இந்த சந்திக்கு வந்த சங்கதி சலசலப்பான விடயமாயினும், தற்போது பேச்சு மூச்சற்று திசை திருப்பப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால், வரலாற்றை, அதன் துயரை பதியவேண்டியவர்கள் பதித்து வைத்திருக்கிறார்கள்.

ஆம், 'செம்மணி' விவகாரம் பல கவிஞர்களை உசுப்பிவிட்டிருக்கிறது. செம்மணி பற்றிய 24 கவிஞர்களின் கவிதைகள் அதேபெயரிலேயே (செம்மணி) வெளிச்சம் வெளியீடாக வெளிவந்திருக்கிறது. வெளிச்சம், விடுதலைப் புலிகளது கலை பண்பாட்டுக்கழக நடுவப்பணியகமாகும். இப்பெயரில் சஞ்சிகையொன்றும் வெளியிடப்படுகிறது.

"வதையுண்டு சிதையுண்டு செம்மணித் தரவையில் புதையுண்டுபோன நம் உறவுகளுக்கு இது படையல்" என்று சமர்ப்பணம் செய்யப்பட்டிருக்கும் இக் கவிதை நூலிலிருந்து 'எஸ்போஸின்' - முள்வெளி என்ற கவிதை கீழே:

சாக்குருவியின் துயரப்பாடலால் உறிஞ்சப்பட்ட
மிகப் பழைய மனிதனின் மரணம்
ஈரப்பாடை பற்றிய எல்லோரின் கனவுகளிலும்
ஈரித்துறைந்தது.
தீயின் வெம்மையடங்கி சாம்பல் பூத்த
அவனுடைய மரணம்
ஆன்ம வெளிகுதறும் அப்பாடலில் பின்னப்பட்ட போது
பூக்களினதும்
ஊதுபத்தி, மஞ்சள் நீரினதும் வாசனை
வெளியின் மடிப்புகளில் ஊர்ந்தது.
அந்த மிகப்பழைய மனிதனின் கனவுகள்
- மண் பற்றியதும், விடிவு பற்றியதும், ஆதிமொழி பற்றியதும் -
வரண்டழிந்த ஒரு காலத்தில்
சாக்குருவியின் துயரப்பாடலில் விழுந்த மரணத்திற்காக
அவனது குழந்தைகள் அழுதார்கள்:
இதயத்தின் சோகத்தை உருக்கி
மனசெங்கும் பரவினர்.
மரணம் துயரப்பாடலில் அமிழ்ந்தமிழ்ந்து ஜனித்தது.
பூக்கள் வாசனையுமிழ்ந்தன:
ஊதுபத்தி, மஞ்சள்நீர், ஓமத்தீ.
ஒவ்வொரு மரணத்திலும் ஆழ்ந்த சோகத்தின் திரையில்
ஒரு தீக்கங்கின் ஒளி அல்லது சுவாலைகள்
தொடர்ந்துகொண்டே இருந்தன.
சாக்குருவி தின்றழித்த மரணத் திகதி
சுவர்களில் தொங்கிக் கொண்டிருந்தது.
சாக்குருவி நிஷ்டையிலிருந்த ஒரு பொழுதில்:
அதன் துயரப்பாடலுக்காகவும்
பிண ஒளி சூழ்ந்த அதன் அடையாளத்திற்காகவும்
அவனுடைய குழந்தைகள்
சுருண்டொடுங்கிய ஒரு பொழுதில்
தொன்மை வேர் பெயர்த்து வெளிதாண்டிப் பெயர்ந்த
ஆதிக் குழந்தைகள் சிலவற்றை அவனுடைய நகரம்
இழந்தது.
யுகங்களை மிதித்துத் துரத்திய மரணத்தின் பாடல்கள்
ஆதிக் குழந்தைகளின் எஞ்சிய கனவுகளில்
வியாபித்தொளிர்ந்தன.
சாக்குருவியின் துயரப்பாடல் வெளியை விழுங்கிற்று.
கள்ளிச் செடிகளின் முளைகள் காற்றில் படர்ந்து
வெளியில் பரவி உறைந்தன:
மரணம் விழுங்கிய வெளியில் எலும்புகள் முளைத்தன.

சர்மா

நன்றி - நூலகத்திட்டம்






புதிய பூக்கள்
சிறுவர் இலக்கியம்
ஆசிரியர்:
வ. இராசையா
வெளியீடு:
அரவிந்தம் வெளியீட்டகம்
கொழும்பு
விலை 80/-

1992லும் (சண்டியன் ஓநாய்), 1995லும் (சந்தனக் கிண்ணம்) சிறுவர் இலக்கியத்திற்கான அரசின் இலக்கிய விருது பெற்ற வ. இராசையாவின் இன்னுமொரு சிறுவர் படைப்பே 'புதிய பூக்கள்'. 'சந்தரா'வின் உள் ஓவியங்களுடன் 56 பக்கங்களில் சிறுவர் கவிதைகளையும் தாங்கி வந்திருக்கும் இந்நூல், ஆரம்ப வகுப்புப் பிள்ளைகள் தமிழோடு, அறிவையும், உபதேசங்களையும் பெற வழியமைக்கும். அத்துடன் மூவருட இடைவெளியில் அரச விருது பெற்றிருக்கும் இவர், 98லும் இந்நூல் மூலம் அதைப் பெறலாம்.

-பாப்பா பாரதி.

---




குமுறல்கள்
(சிறுகதைத் தொகுதி)
கனகசபை தேவகடாட்சம்
வெளியீடு:
பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான
கல்வி மேம்பாட்டு நிதியம்
மூதூர்.
விலை 104/-

" 'தினமுரசு' பத்திரிகை வாயிலாக சிறுகதையில் தடம் பதித்த இவர்" என்ற நவசோதிராசா அறிமுகம் செய்யும் கனகசபை தேவ கடாட்சத்தின் இரண்டாவது தொகுதி 'குமுறல்கள்'. (முதலாவது காலக்கீறல்கள்) தினமுரசிலும், நவமணியிலும் வந்தவற்றின் தொகுப்பு.

பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி மேம்பாட்டு நிதிக்காக என்று ஈழத்துச் சிறுகதைகள் இலக்கியக் கனதியற்று அரங்குக்கு வந்துள்ளது என்னவோ போலுள்ளது. நிதியை, நல்ல இலக்கியத் தரமான படைப்பாளிகளை இனங்கண்டு- நூலாசிரியரின் வார்த்தைகளில் சொல்வதானால் தங்கள் திறமைகளை வெளிக்கொணர முடியாத சூழலின் கைதிகளான இலக்கியவாதிகளின் - அவர்களது படைப்புகளை பதிப்பித்து வெளியிட்டும் சேகரிக்க முயலலாம். அதன்மூலம் சிறுகதை இலக்கியத்தை மேம்படுத்துகிற இன்னொரு பணியைக் கூடச் செய்திருக்கலாம்

-மதன்




'தர்மங்களாகும் தவறுகள்'
அ.ஸ.அப்துஸ்ஸமது
வெளியிடு:
இஸ்லாமிய நூல் வெளியீட்டுப்
பணியகம்
சாய்ந்தமருது, கல்முனை.
விலை: 100/-

அறியப்பட்ட எழுத்தாளரான அ.ஸவின் 18 நூல்களுள் நாவல் என்ற பிரிவில் மூன்றாவதாய் வெளிவந்திருக்கும் நூல் இது. செ.யோகநாதனின் கபடத்தனத்தால் 97ம் ஆண்டு சாஹித்திய விருதை தவறவிட்ட இந்நாவல், மானுட உறவின் பரிணாமத்தை/ பரிமாணங்களை சித்திரிக்கிறதாய் எழுதப்பட்டுள்ளது. வீரகேசரியின் வாயாடிப் பகுதிப் பாத்திரங்களை (பண்டா, கந்தர் அம்மான், சலீம்) ஞாபகமூட்டும் பாத்திரங்களின் (ராமநாதன், பெர்ணான்டோ, காதர்) உரையாடலோடு கதை ஆரம்பமாகிறது. இனங்களுக்கிடையே நல்லுறவைக் கனவு காணும் இந்நாட்டவர் போல் எழுத்தாளரான அ.ஸவும் கற்பனையை மிதக்க விட்டிருக்கிறார்.

-நில்ஷா


---



பெண்

சூரியா பெண்கள் அபிவிருத்தி
நிலையத்தின் சஞ்சிகை
27A, லேடி மனிங் ட்ரைவ்,
மட்டக்களப்பு.

# செழியன்: "வாழ்வதற்கான ஏக்கம் ..."




'வரலாறு என்பது வெற்றி பெற்றவர்களின் வரலாறே' என்பார்கள். தமிழ் மக்களின் அரசியல் வரலாறும் இவ்வாறு தான் எழுதப்பட்டுக் கொண்டிருக்கிறது. அரசியல் போராட்டத்தில் ஆதிக்கம் செலுத்தும் சக்திகள் சொல்வது தான் நியாயம், அவர்கள் பேசுவது தான் தத்துவம், அவர்கள் செய்வது தான் சரி என்ற ஒரு நிலைமை எல்லா நாட்டிற்கும் பொதுவான ஒன்று தான். அது இங்கேயும் நடைமுறையில் மெய்பிக்கப்பட்டதற்கு நாமெல்லாம் சாட்சிகளாக இருந்தோம்.

தேசிய விடுதலைப் போராட்டம் 1983 ஜூலைக் கலவரத்தின் பின் ஆயுதமேந்திய போராட்ட வழியிலேயே முன்னெடுக்கப்பட முடியும் என்ற முடிவு பொதுவாக அனைத்து மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு விடயமாக மாறிவிட்டிருந்தது. பல்லாயிரக் கணக்கில் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்திற்குப் பயிற்சி பெறுவதற்காக இந்தியா நோக்கி ஓடினார்கள். ஓடியவர்களில் பலர் ஆயுதங்களை ஏந்தியபடி திரும்பி வடக்கு கிழக்கு மண்ணில் பெருமிதத்துடன் நடமாடினார்கள். அவர்கள் தமது இளமை வாழ்வை நாட்டின் விடுதலைக்காகத் தியாகம் செய்யத் துணிந்த தியாகிகள் என்பதால் ஏற்பட்ட ஒரு மதிப்பையும் அவர்கள் கைகளிலேந்தியிருந்த ஆயுதமும் புதிய படைகளும் ஏற்படுத்திய ஒரு வகை அச்சத்தையும் கொண்டவர்களாக மக்கள் நடமாடினார்கள். அவர்கள் சொல்வது வேதவாக்காக மாறியது. அவர்கள் செய்வதெல்லாம் சரியாகியது. மக்கள் மத்தியில் அவர்கள் நடந்து கொண்ட எல்லா நடவடிக்கைகளும் இந்த மதிப்பின் பெயராலும் அச்சத்தின் பெயராலும் நியாயப்படுத்தப்பட்டன. அவர்கள் சற்று அத்துமீறி நடப்பதாக நினைத்து கேள்வி கேட்டவர்கள் அடித்து நொருக்கப்பட்டார்கள். அவர்கள் நீதி கேட்பவர்களாக, தண்டனை வழங்குபவர்களாக எல்லாம் மாறினார்கள். வீதியோர மினகம்பங்கள் தண்டனை வழங்கும் நிலையங்களாக மாறின. மக்கள் அச்சத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒரு சிலர் அவர்களால் தண்டனை வழங்கப்பட்டவர்கள் நிச்சயம் குற்றவாளிகளாகத் தான் இருக்க முடியும் என்றார்கள்.

எப்படியோ, இந்த தண்டனை வழங்கும் புதிய எஜமானர்களிடையே விரைவில் யுத்தம் வெடித்தது. தெருவெல்லாம் பிணக்காடாக மாறியது. எல்லா இயக்கங்களும் ஒன்றில் அழிக்கப்பட்டன. அல்லது நாட்டைவிட்டு விரட்டப்பட்டன. விடுதலைப்புலிகளின் வரலாறு தேசத்தின் விடுதலைப் போராட்ட வரலாறாக எழுதப்படத் தொடங்கியது.

ஆனால், இந்த வரலாறு உண்மையில் ஒரு பக்கம் தான் என்பதை எந்த வரலாறும் எழுதப் போவதில்லை. விடுதலைப் புலிகளால் விரட்டப்பட்ட இயக்கங்களில் பல சிதைந்து போயின. இன்னும் சில எதிரியுடன் கை கோர்த்துக் கொண்டன. இது புலிகளின் அரசியல் வரலாற்றுக்கு பலமூட்டுவதாய் அமைந்து போயிற்று.

இறுதியில் தமிழ் மக்களின் அரசியல் வரலாறே புலிகளின் அரசியல் வரலாறாகி விடும் நிலையே இன்றுள்ளது. தமிழ் மக்களின் அரசியல் வரலாறு புலிகளின் வரலாறாக இருப்பதில் எந்தத் தப்பும் இல்லை. அது நியாயமானதாகவும் இருந்திருக்கும். புலிகள் மட்டும் தமிழ் மக்களின் அரசியல் போராட்டத்திற்கு ஜனநாயக வழியில், (பாராளுமன்ற ஜனநாயகம் அல்ல) அரசியல் ரீதியில் மற்றைய இயக்கங்களை மக்கள் ஒதுக்கி விடும் விதத்தில் தலைமை ஏற்றிருந்தால் இவையெல்லாம் சரியாக இருந்திருக்கும். அப்போது மக்களது வரலாறும் அவர்களது வரலாறோடு இணைந்ததாக இருந்திருக்கும். ஆனால், அவர்கள் வரலாற்றுக்கு சமாந்தரமாக அராஜகப் போக்கில் அதிகாரத்தைப் பிடுங்கிய இன்னொரு வரலாறும் கூடவே வளர்ந்து வருகிறது.

ஆனால், இந்த வரலாற்றை எழுத யாரும் இல்லை. எழுதப்பட்டவைகள் கூட புத்தகமாக வந்ததில்லை. இதை எழுதுவதற்குரிய ஆத்மபலத்துடன் எஞ்சிப்போயிருப்பவர்கள் ஒரு சிலர் மட்டுமே.

அவர்களில் ஒருவர் செழியன். ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவராக இருந்தவர். 1986அல் ஈ.பி.ஆர்.-எல்.எப். இயக்கம் புலிகளால் தடைசெய்யப்பட்ட போது புலிகளால் தேடப்பட்டவர். தான் தலைமறைவாகி ஒவ்வொரு நிமிடமும் தன் உயிரைக் காப்பதற்காக ஒடித்திரிந்த போது எழுதிய நாட்குறிப்புக்களை அடிப்படையாக வைத்து ஒரு நூல் எழுதியிருக்கிறார். அவர், தனது எந்த இடத்திலும் புலிகள் என்ற வார்த்தையைப் பாவிக்கவில்லை. ஆனால், அவரது நாட்குறிப்புகள் அதைச் சொல்கின்றன. 'அவர்கள்' எப்படி நடந்து கொண்டார்கள், எவ்வளவு வெறியோடு அவர்கள் தங்களைத் தேடினார்கள் என்பதை அவரது குறிப்புக்கள் தெளிவுபடுத்துகின்றன.

ஒரு நாவலில் நடப்பதைவிட உண்மைச் சம்பவங்கள் நம்ப முடியாதவையாகவும், விறுவிறுப்பூட்டுபவையாகவும் இருக்கக்கூடும் என்பதற்கு இந்த நாட்குறிப்புகள் ஒரு நல்ல உதாரணம். 'ஒரு மனிதனின் நாட்குறிப்பிலிருந்து' என்ற செழியனின் இந்தப் படைப்பு அவர் தமது சமர்ப்பணத்தில் நாவல் என்று குறிப்பிட்டதுபோலவே நவீன வரலாற்று நாவலை நோக்கிய சகல அம்சங்களையும் கொண்ட ஒரு படைப்பு என்று சொல்லலாம். அதில் பாத்திரங்கள் வருகின்றன, வரலாறு வருகிறது, இவற்றை பின்னிப் பிணைக்கின்ற ஒரு தேசத்து மக்களது வாழ்வின் உணர்வுகள் வருகின்றன. அது நமது நாட்டின் அரசியல் வரலாற்றின் இருண்ட பக்கங்கள் குறித்த ஒரு சிறு ஓவியமாக படைக்கப்பட்டிருக்கிறது.


இது நாவலை நோக்கி மட்டுமல்ல, இன்னும் விரிவான ஒரு அரசியல் வரலாற்றை நோக்கி விரிந்திருக்கவும் கூடிய ஒரு படைப்பு. அதற்கான அடிப்படை ஆழங்களை அது தொட்டுச் சென்றிருக்கிறது.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்திலிருந்து ஒரு 'புதியதோர் உலகம்'வந்ததென்றால், ஈ.பி.-ஆர்.எல்.எப்பிலிருந்து ஒரு 'மனிதனின் நாட்குறிப்பு' வந்திருக்கிறது. அதில் புதிய உலகைக்காண விழைந்த ஜனநாயக விரும்பிகளின் நம்பிக்கை தெரிந்தது என்றால் இதில் மனிதத்துவத்தைத் தேடி ஓடும் சந்ததியின் ஏக்கக்குரல் வெளிப்பட்டிருக்கிறது.

செழியன் ஒரு குறிப்பிடத்தக்க கவிஞர் மட்டுமல்ல, நல்ல உரைநடையாளர் என்பதையும் இதன் மூலம் காட்டியுள்ளார். தாயகம் (கனடா) இதழில் தொடராக எழுதப்பட்ட இக் குறிப்புகளை கையடக்க நூலுருவில் வெளியிட்டிருப்பவர்கள் ரொறன்ரோவிலுள்ள 'கனேடியன் நியூ புக் பப்பிளிகேசன்' நிறுவனத்தினர்.

நன்றி - நூலகத்திட்டம்





வெறுமனே எந்தவொரு தலைவரதும் உயர்சாதியை வைத்து விளக்க முற்படுவது கொச்சைத்தனம். இது பற்றி அண்மையில் காலமான கோ. கேசவன் தனது கட்டுரைகளில் சிறப்பாக விளக்கியிருக்கிறார்.

நிறப்பிரிகை விமர்சகர் மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியின் 'பார்ப்பனியத்தை' அருந்ததி றோய் 'அம்பலப்படுத்திய' காரணத்தை அருந்ததி ஸிரிய கிறிஸ்துவ பின்னணியில்

# சீன அச்சுறுத்தல்....

9—

சீன அரசாங்கம் இதன் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளது. இதற்காக உழைத்தும் வருகிறது. சீனா அதன் அயல்நாடுகளுடன் செய்துகொண்ட உடன்பாடுகள் இதன் பிரதிபலிப்புக்களாகும்.

ஒரு பிரகடனப்படுத்தப்பட்ட அணுஆயுத அரசு என்ற வகையில் சீனா அணுஆயுத பரிகரணத்துக்காக அர்ப்பணிப்புடன் உழைத்து வருகிறது. ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 51வது கலந்துரையாடல் (1996) சீனாவானது அணுஆயுத பரிகரணம் தொடர்பாக ஐந்து பிரேரணைகளை முன்வைத்தது.

1. பிரதான அணுஆயுத நாடுகள் அணுஆயுத பரிகரணத்தில் தீவிரமான அக்கறைக்காட்ட வேண்டும்.
2. சகல அணுஆயுத நாடுகளும் முதலாவதாக தாக்குதலைத் தவிர்த்தல் (Not to be the first to use) கொள்கையினைக் கடைபிடித்தல் வேண்டும். அத்துடன் அணுஆயுத அச்சுறுத்தலை எக்காரணம் கொண்டும் அணுஆயுதமற்ற நாடுகளுக்கோ பிராந்தியத்துக்கோ ஏற்படுத்தக் கூடாது.
3. தத்தமது நாடுகளது எல்லைகளுக்கு அப்பால் நாடுகள் அணுஆயுதத்தை விஸ்தரித்து இருப்பின் அதனை தத்தமது எல்லைகளுக்குள் வாபஸ்பெற வேண்டும். அத்துடன் அணுஆயுத பரிகரண பிராந்தியத்தை (Nuclear - Weapon - Free Zones) பிரகடனப்படுத்தல் அவசியம்.
4. சகல நாடுகளும் விண்வெளியில் ஆயுத நடவடிக்கைகளினை (Outer space weapons) தடுத்தல் வேண்டும்.
5. சகல நாடுகளும் அணு ஆயுதங்களை முழுமையாகக்கட்டுப் படுத்தும் விவகாரத்தில் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவேண்டும்.

அணுஆயுத பரிகரண விவகாரத்தினை நடைமுறையில் ஸ்தூலமாக்க சீனா 1992 மார்ச் மாதம் அணுஆயுத பரிகரண உடன்பாட்டில் (Non - Proliteation Treaty) கைச்சாத்திட்டது. அத்துடன் விரிவான அணுஆயுத தடை உடன்பாட்டினை (Comprehensive Test ban Treaty) 1996 செப்டெம்பர் 24ஆம் திகதி ஏற்றுக்கொண்டது. அணுஆயுத பரிகரண விடயத்தினை மேலும் விரிவாக்க பிரகடனப்படுத்தப்பட்ட அணுஆயுத நாடுகளுடன் (ரஷ்யா, அமெரிக்கா, பிரான்சு, பிரித்தானியா) "முதலாவதாக பிரயோகிப்புத் தவிர்ப்பு" விடயமாக பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறது. இவ்வாறான பேச்சுவார்த்தை மூலம் உருவாகும் உடன்பாடு பிராந்திய மற்றும் சர்வதேச பந்தோபஸ்து மற்றும் அமைதிக்கு உதவும் என்பது குறிப்பிடத்தக்கது. சீனாவின் இம்முயற்சிக்கு இதுவரை ரஷ்யா மட்டுமே சாதகமான பதிலை வழங்கியுள்ளதும் முக்கியமான விவகாரமாகும்.

அணுஆயுத விடயத்தில் மட்டுமின்றி இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்கள் விடயத்திலும் (Chemical and Bilogical Weapon) சீனா கட்டுப்பாடுகளை விரும்புகிறது. இதற்கமைவாக இது தொடர்பான உடன்பாட்டில் (CWC) 1993 ஜனவரியில் கைச்சாத்திட்டது. இரசாயண ஆயுதப் பாவிப்பினால், சீனா கடுமையான பாதிப்பை அதன் அண்மைய வரலாற்றில் அது எதிர்கொண்டதனால், சீனா இவ் ஆயுத கட்டுப்பாட்டு விடயத்தில் அக்கறையாக உள்ளது.

மிகவும் சக்திவாய்ந்த அதேவேளை நுண்ணிய ஆயுத ஏற்றுமதிகள் பிராந்திய மற்றும் சர்வதேச அமைதிக்கு அச்சுறுத்தலாகவே உள்ளது. சீனா அணுஆயுத ஏற்றுமதி விடயத்தில் மூன்று கொள்கைகளை கடைபிடித்து வருகிறது.

1. அணுஆயுதங்கள் சமாதான நோக்கத்துக்கு மட்டுமே பயன்படல்,
2. அணுஆயுத ஏற்றுமதி சர்வதேச அணுஆயுத சக்தி முகவரால் (Interational Atomic Energy Agency) பாதுகாப்பு ஏற்பாடுகளை அனுசரித்தல்.
3. அணுஆயுதங்கள் மூன்றாம் நாட்டுக்கு சீனாவின் அனுமதியின்றி ஏற்றுமதி செய்தல் கூடாது.

அணுஆயுத ஏற்றுமதி விடயத்தில் சீனா கடுமையான வாக்குறுதிகளை IAEAக்கு வழங்கியுள்ளது. எவ்விதமான ஏற்றுமதி, இறக்குமதி தகவல்களினை சீனா இந்நிறுவனத்துக்கு வழங்கியே வருகிறது. இரசாயன தொழிநுட்ப ஏற்றுமதி தொடர்பாகவும், சீனா இதே மாதிரியான வாக்குறுதியினை மேற்படி நிறுவனத்துக்கு வழங்கியுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மேற்படி நிலைமைகளுக்கு அப்பால் மரபு ரீதியான ஆயுத ஏற்றுமதி (Convetional arms) விடயத்திலும் சீனா ஐக்கிய நாட்டு பதிவுகளுடாகவே நடவடிக்கைகளினை மேற்கொள்கிறது. 1993 - 97 காலப்பகுதிக்கிடையிலான சீனாவின் மரபுரீதியான ஆயுத ஏற்றுமதிகள் ஒப்பீட்டளவில் ஏனைய நாடுகளுடன் ஆராய்ந்தால், அதன் பங்களிப்பு அளவில் சிறியதாகும். மரபுரீதியான ஆயுத விநியோக விடயத்தில் அது கீழ்வரும் கொள்கைகளைக் கடைபிடித்து வருகிறது.

1. ஏற்றுமதி செய்யப்படும் ஆயுதங்கள் பெற்றுக்கொள்ளும் நாட்டின் சட்டப்பூர்வ பாதுகாப்புக்கு உதவ வேண்டும்.
2. அவ்வாறான ஆயுதங்கள் பிராந்திய மற்றும் சர்வ்தேச அமைதி, பாதுகாப்பு மற்றும் ஸ்தீரத்தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடாது.
3. அவ்வாறான ஆயுதங்கள் பெற்றுக்கொள்ளும் நாட்டு உள்விவகாரத்துக்கு உதவக் கூடாது.

மிசயில் (Missile) ஆயுத உடன்பாட்டினை (இதனை ஆங்கிலத்தில் Missile Technology Control Regime (MTCR) இதுவரை சீனா ஏற்றுக்கொள்ளாவிடினும் அதன் ஏற்பாடுகளை வரவேற்றுள்ளது. அத்துடன் இவ்வாறான ஆயுதங்களை ஏற்றுமதி செய்வதில் இருந்து ஒதுங்கும் என்றும் வாக்குறுதி வழங்கியுள்ளது.

சீனா பொருளாதார ரீதியாக வளருகிறது என்பது உண்மை தான். ஆயின், அதன் பிரச்சினைகள் முழுமையாக இன்னும் நீங்கவில்லை. அரச அறிவித்தலின்படி 70 மில்லியன் மக்கள் வறுமைகோட்டின் கீழ் இன்னும் வாழ்கிறார்கள். கடந்த 20 ஆண்டுகளுக்குக்குள் 250 மில்லியனாக இருந்த இத்தொகை 20 மில்லியனாக மாறினாலும், அதன் சவால்கள் தனியவில்லை. எவ்வாறாயினும் சீனா அடுத்த நூற்றாண்டின் அமெரிக்காவுக்கு சவால் விடக்கூடிய பலமான நாடாக அது மாறினாலும் பிற நாடுகளை ஆக்கிரமித்து சூறையாடக் கூடிய நாடாக மாறும் என்பது சாத்தியமற்ற விடயம். சீனா தனக்கென ஒரு கொள்கையைக் கொண்ட நாடு. அது மரபு ரீதியான மார்க்சிய அணுகுமுறைகளை அனுபவிக்காவிடினும், சீன சூழலுக்கேற்ப கம்யூனிச சமூக அமைப்பின் அடிப்படையில் ஏற்ற நாடு. இந்நிலையில் அண்மைய "சீன அச்சுறுத்தல்" என்ற புது கண்டுபிடிப்பு அவ்வவ் நாடுகளது தேசிய பெருமிதத்தையும், அதன் மூலமாக தத்தமது அதிகாரத்தை காத்துக்கொள்ளவே உதவுமேயன்றி, சீனாவுடனான ராஜதந்திர உறவுக்கு உதவாது என்பது மட்டும் உண்மையாகும். சீனாவின் இன்றைய தேவையை சரியாக அடையாளம் காணும் அவதானிகள் இதனை நன்கு அறிவர்.

# பூணூல் விளக்கம் தேவை!

அருந்ததி றோயின் நூல் வந்து, புக்கர் பரிசுபெற்று, இந்தியாவில் விரிவாக விமர்சிக்கப்பட்டு பல மாதங்களின் பின் சரிநிகரில் ஒரு விமர்சனம் மறுபிரசுரமாகியுள்ளது. அது நிறப்பிரிகையில் வந்தமை சரிநிகருக்கு அதன் தெரிவுக்கான போதிய நியாயமாக இருக்கலாம். ஆயினும், அந்த நூல் பற்றிய சில பிரச்சினையான அம்சங்கள் முன்பு எழுப்பப்பட்டிருந்தும், சரிநிகர் அவை பற்றிக் கண்டுகொள்ளவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

அருந்ததி றோய், கேரளத்தின் மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியைக் கடுமையாக விமர்சிக்கும் நோக்கில் இந்த நூலை எழுதினார் என்பது ஒரு கருத்து. அதில் உண்மை உள்ளது. ஆயினும், அந்த விமர்சனத்தை நியாயப்படுத்தும் நோக்கில் ஈ.எம்.எஸ். நம்பூத்ரிபாட் மீது வீண் களங்கம் சுமத்தும் விதமாக எழுதினார் என்ற குற்றச்சாட்டை அவர் மறுத்தாலும், அதன் பின்னர் நம்பூதிரிபாடின் குடும்பத்தவர் ஒருவர் முன்வைதத சில ஆதாரங்களை அருந்ததி றோயால் மறுக்க இயலவில்லை.

தலித்தியம், பெரியாரியம் என்ற பேர்களில் வருகிற சில விமர்சனங்களில், ஒருவரது சட்டைக்குக் கீழே பூணூல் உண்டா இல்லையா என்பதிலேயே கூடிய கவனம் காட்டப்படுகிறது. ஈ.எம்.எஸ்ஸுடைய அரசியலுடன் எனது கருத்து முரண்பாடுகள் எவ்வளவு கடுமையானதாயினும் அவரது தனிப்பட்ட வாழ்வும், அரசியல் வாழ்வும் பல வகைகளிலும் முன்னுதாரணமானவையும் போற்றத்தக்கவையுமாகும்.

இந்தியாவின் கம்யூனிஸ்ட் கட்சிகளில் சாதியம் பற்றிய நிலைப்பாடு குறைபாடுடையதாக இருக்கிறது என்றால், அதற்கான காரணத்தை பிறந்து வளர்ந்தவர் என்ற அடிப்படையில் எளிதாக விளக்க முற்பட்டுள்ளார். அருந்ததியின் தகப்பனார் வங்காளி, தாய் மலையாளி. அவர் வளர்ந்தது வசதியான சூழலில். இப்போது நம் 'வாசிப்பு' சிறிது மாறிவிடாதா? அதை விட முக்கியமாக, இந்தியாவின் அணு ஆயுதப் பரிசோதனைக்குப் பிறகு அருந்ததி றோய்க்கும், மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியின் சிலருக்கும், குறிப்பாக 'இந்து' பத்திரிகைக் குடும்பத்தவரும் 'ஃப்ரொண்ட் லைன்' ஆசிரியரும் மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சிக்கு நெருக்கமான பிரமுகருமான என் ராமுக்கும் ஏற்பட்டுள்ள நல்லுறவு பற்றிப் பூணூல் அடிப்படையிலான விளக்கம் சுவாரசியமாக இருக்கும்.

சி.சிவசேகரம், கொழும்பு

# பதிலைத் தேடி சில கேள்விகள்!

'சரிநிகர்' இதழ் 156ல் எம். பௌசர் எழுதிய 'ஏன் இந்த 25 வருட மௌனம்?' கட்டுரையில் மு. தளையசிங்கம் அவர்கள் பற்றிக் குறிப்பிடுகையில், '1960களில் இவரால் எழுதப்பட்ட 'ஒரு தனி வீடு' நாவல், ஈழத்து தமிழர் அரசியலில் மிகத் தீர்க்கதரிசனமான படைப்பாகும். தமிழ்த் தேசியவாத அரசியலின் சிந்தனைத்தள முன்னோடியாக நிலை நிறுத்தப்பட வேண்டியவர் மு. தளையசிங்கம். அன்றைய ஒரு தனி வீடு இன்று ஒரு தனி நாடாக நிகழ்காலத்தில் எழுந்து நிற்கிறது' எனக் குறிப்பிடுகிறார்.

இக்கருத்துக்கள், கட்டுரையில் குறிப்பிடப்பட்ட கருத்தரங்கிலும் முன்வைக்கப்பட்டிருக்கக் கூடுமெனினும், 'சரிநிகர்' மூலமே இவற்றை அறிய நேர்ந்தது. இவை சில கேள்விகளை எழுப்புகின்றன. இவை பற்றி கட்டுரையாளரோ, மு.பொன்னம்பலம் அவர்களோ அன்றி வேறெவருமோ தெளிவு படுத்துவார்களெனில் நன்றியுடையவனாவேன்.

1. 1960ல் எழுதப்பட்ட இந்நாவல், பிரசுரம் காண ஏறத்தாழ கால்நூற்றாண்டு (1984) கழிந்தது ஏன்?
2. அதி முக்கிய திசையமைவைச் சுட்டும், தீர்க்கதரிசனம் வாய்ந்த படைப்பு: காலத்தின் தேவை, கட்டாயம் என மு.த. கருதியிருப்பின் அது ஏன் அவர் உயிருடனிருந்தவரை பிரசுரம் பெறவில்லை?
3. மு.த.வே இந்நாவலின் சிந்தனைத் தளத்தைப் பின்னர் கைவிட்ட பின்பும், காலத்தின் தேவை பொருத்தப்பாடு கருதி, மு.பொ. அதனைப் பிரசுரிக்க முனைந்தாரா?
4. 1960ல் மு.தவால் எழுதப்பட்ட அதேவடிவில், அதே முழுமையுடன் நூல் வெளியாயிற்றா?
5. மு.த.வின் சிந்தனைத் தளம் ஒரு தனி நாட்டையே சுட்டிநின்றதெனில், அவர் '60லிருந்து தமது மறைவு (73) வரை இதே கருத்து நிலையைப் பேணினாரா?
6. அப்படி, தொடர்ந்த, நிலையான ஒரு கருத்து நிலை அவருக்கு இருந்திருப்பின் அதற்கான சான்றுகள் எவை?
7. எழுத்தையும், வாழ்வையும் பிரித்து நோக்காத மு.த. அவர்கள் இக்கருத்து நிலையை முன்னெடுக்க முயன்றிருப்பாரே?
8. இவையேதும் இல்லையெனில், அவரது கருத்து நிலை அதுவே என்று கூறுவதெங்கனம்?
9. மு.த. இன்றிருந்திருப்பின் அவரது கருத்துநிலை எவ்வாறிருந்திருக்கும்?
10. மு.த. முன்வைத்த 'பிரபஞ்ச யதார்த்த' வாதத்திற்கும், தமிழ்த் தேசியவாதத்திற்குமான தொடர்புகள், ஊடாட்டங்கள் எவை?

சாநதன்

மானிப்பாய்

# யோகநாதன் திருப்பி அனுப்புவாரா பரிசை?

ஒக் 14, 1998 'சரிநிகர்' இதழில் 1997 சாகித்திய பரிசில் பெற்ற நாவல்' பற்றி வெளிவந்த கட்டுரையைப் படித்தேன். அது பற்றிய அருமையான தகவல்களை அகழ்ந்தெடுத்து போட்டிருந்தீர்கள். அவ்வாறு தகவல் சேகரிப்பு உங்களுக்கு இயலும்.

அதன்மூலம் சாகித்திய நூல் பரிசீலனைக்குழுவின் பாராமுகம் பற்றியும், செ.யோகநாதனின் தகிடுதத்தங்கள் பற்றியும் அருமையாக எழுதி இருந்தீர்கள். என் மனமார்ந்த நன்றிகள்.

நான் இது பற்றி கலாசார அமைச்சுக்கு எழுதியுள்ளேன். அதன் பிரதி ஒன்று இத்துடன் வருகிறது. அவர்கள் எடுக்கும் நடவடிக்கையையும் பார்ப்போம்.

'அயோக்கியத்தனத்துக்கு சாகித்திய பரிசு' என்ற உங்கள் தலைப்பைபார்த்தவுடனே செ. யோகநாதன் தனக்கு கிடைத்த பரிசில் தொகையை திருப்பி அனுப்பி விடவேண்டும். செய்வாரா?

உங்களை வெகுவாகப் பாராட்டுகிறேன். நன்றி கூறுகின்றேன். உங்கள் சாமர்த்தியம் என்றும் போற்றத்தலுக்குரியது.

அப்துஸ்ஸமது,
அக்கரைப்பற்று

நன்றி - நூலகத்திட்டம்

Registered as a newspaper in Sri Lanka


# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

'சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"

-பாரதி

இல.04, ஜயரத்ன வழி, திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05.

தொலைபேசி : 593615, 584380 தொலைமடல் : 594229


## வரவு செலவுத் திட்டமும் தமிழ்க் கட்சிகளும்!

1999ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டமும் அறிவிக்கப்பட்டு விட்டது.

பொதுஜன ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்தபின் அறிவித்துள்ள நாலாவது வரவு செலவுத் திட்டம் இது.

கடந்த நான்கு ஆண்டு காலமாக இந்த அரசாங்கம் செய்த சாதனைகளைப் பட்டியலிட்டு ஆறு மணிநேரம் சளைக்காமல் பேசி அதைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார் பிரதி நிதி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்.

எதிர்பார்த்தபடியே யுத்தத்திற்குப் பெருமளவு பணத்தை ஒதுக்கியும், பாதுகாப்பு வரியை அதிகரித்தும் வெளியிடப்பட்ட இந்த வரவு செலவுத் திட்டம் அடுத்த ஆண்டிலும் தீவிரமான யுத்தம் தொடரும் என்பதைச் சொல்லாமல் சொல்லி விட்டிருக்கிறது.

தமிழ் பாராளுமன்றக் கட்சிகளுக்கே பொறுத்துக் கொள்ள முடியாதளவுக்கு அரசாங்கத்தின் யுத்தம் மீதான தீவிரம் அதிகரித்திருப்பதை இந்த வரவு செலவுத்திட்டம் கோடி காட்டி நிற்கிறது.

அன்னிய முதலீட்டாளர்களுக்கு வரிச்சலுகையும் இறக்குமதித் தீர்வைக் குறைப்புகளும் மிகவும் கவர்ச்சிகரமாக அறிக்கப்பட்டுள்ளன.

ஆனால் யுத்தமும் அதன் காரணமான மனித உயிர்களின் சிதைவுகளும் பற்றி இந்த வரவு செலவுத்திட்டம் எதுவும் தெரிவிக்கவில்லை.

கடந்த வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகை போதாது என்பதற்காக பாதுகாப்புச் செலவுக்காக பெருமளவு தொகை பிற செலவீனங்களில் இருந்து வெட்டிக் குறைக்கப்பட்டது. அந்த வெட்டிக் குறைப்புக்களில் மிகவும் பாரதூரமானதும் பலரைப்பட்டினிச் சாவுக்கு உள்ளாக்கும் ஆபத்தைக் கொண்டதுமான வன்னிப் பகுதிக்கான நிவாரணப் பொருட்களை மூன்றில் ஒரு பங்காகக் குறைத்தது ஒரு முக்கியமான அம்சமாகும்.

போர்த்தளபாடங்களுக்கும் அரசாங்கத்தின் பிற முக்கிய செலவீனங்கட்கும் பணம் போதாமையினாலேயே இந்த நிவாரண அளவு மூன்றில் ஒன்றாகக் குறைக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. ஆயினும் குறைக்கப்பட்ட அளவு எதிர் வரும் ஆண்டிலாவது திரும்ப வழங்கப்படுவதற்கான எந்த அறிகுறிகளையும் அது காட்டவில்லை. பதிலாக மேலும் அதிகரிக்கும் விதத்தில் இவை தொடரும் என்ற அச்சத்தையே இந்த வரவு செலவுத்திட்டமும் தெரிவிக்கிறது.

அரசாங்கத்தின் இந்த நிவாரணவெட்டுக் காரணமாக முல்லைமாவட்டத்தில் வாழும் 40,203 குடும்பங்களில் 13330 குடும்பங்களுக்கே நிவாரணம் வழங்கப்படக் கூடியதாகவுள்ளது. அரசாங்கம் பட்டினியால் இறக்கும் மக்களுக்கு புலியைக் காரணம் காட்டி தட்டிக் கழிக்கப்பார்க்கிறது. புலிகள் மக்களுக்கு அனுப்பும் பொருட்களில் பெருமளவை தாமே எடுத்துச் செல்வதால் இத்தகைய பட்டினிச் சாவுகளுக்கு அவர்களே பொறுப்பு என்று தெரிவிக்கிறது அது.

தமது நிவாரணத்தை வெட்டியமை, தாம் பட்டினிச் சாவை எதிர்கொள்ளும் நிலைமையை உருவாக்கியமை என்பவற்றை எதிர்த்தும், தமக்கு வேண்டிய உணவுப் பொருட்களை வழங்குமாறு கோரியும் வன்னியில் பொதுமக்கள் நடாத்திய பல ஆர்ப்பாட்டங்களும் புலிகளின் தூண்டுதலால் நடாத்தப்படுபவை என்ற முத்திரை குத்தலுடன் கணக்கெடுக்கப்படாமல் போயுள்ளன.

இந்த நிலைமையை சீர் செய்யுமாறு அரசாங்க அதிபர்கள் அரசாங்கத்திடம் விட்ட கோரிக்கைகளும் கணக்கிலெடுக்கப்படாத நிலையே நிலவுகிறது.

அரசாங்க அதிபர்கள் தமக்கு வழங்கப்படும் மூன்றிலொரு பங்கு உணவுப் பொருட்களை அங்குள்ள அனைவருக்குமே அது தேவையாக இருக்கும் போது எப்படிப் பகிர்வது என்று தமக்கு அறிவுறுத்துமாறும் கேட்டிருந்தார்கள் . ஆனால் எதுவும் நடக்கவில்லை.

ஆக, அரசாங்கம் ஒரு முனையில் ஆயுதங்களாலும் மறுமுனையில் உணவுத் தடையாலும் இரு முனைத்தாக்குதல்களை அங்குள்ள மக்கள் மீது தொடுத்துள்ளது.

இந்த அரசாங்கத்தின் ஆட்சியில் அடுத்த வருடமும் இதற்கு தீர்வு கிடைக்கப் போவதில்லை என்பதை இப்போதைய வரவு செலவுத் திட்டம் தெளிவாக உணர்த்தி விட்டது.

இந்த நிலையில் அரசாங்கம் தமிழ் மக்கள் மீது தொடுத்துள்ள யுத்தத்தை உடனடியாக நிறுத்த வேண்டும் என்பதை வலியுறுத்துவதைத் தவிர நிலைமை யைச் சரி செய்ய வேறெந்த வழியும் இல்லை.

தமிழ் அரசியல் கட்சிகள் யுத்தத்திற்கும், புதிய வரவு செலவுத்திட்டத்திற்கும் எதிராக வாக்களிக்கப் போவதாக அறிவித்துள்ளது ஒரு வரவேற்கப்பட வேண்டிய, இந்த யுத்தத்தை நிறுத்துமாறு அழுத்தம் தருகின்ற ஒரு விடயமாகும்.

இந்த முடிவில் அவர்கள் உறுதியாக நின்று எதிர்த்தால் மட்டுமே யுத்த சன்னதம் கொண்டுள்ள சந்திரிகா அரசாங்கத்தின் யுத்த வெறியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும்.

ஆனால், இதை அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ஒன்று சேர்ந்து செய்வது மட்டுமல்லால் அனைத்துக் கட்சிகளையும் இந்த நோக்கத்திற்காக அணி திரட்ட வேண்டும்.

பாராளுமன்றத்தில் அவசரகாலச் சட்டத்திற்கு எதிராக வாக்களிப்பது மட்டுமே பிரச்சினையை குறைத்துவிடப் போதுமானதல்ல.

தேவை சற்று அதிகப்படியான, உருப்படியான செயல்.

அதை இவர்கள் உறுதியுடன் செய்வார்களா?

## யாழ். 10 நாட்களுக்குள் 26 பேர் கைது !

யாழ்ப்பாணத்தில் காணாமல் போதல்களும், படையினரால் கைது செய்யப்படுதலும் அண்மைக் காலத்தில் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. நவ.முதலாம் திகதியிலிருந்து நவ.பத்தாம் திகதி வரை 26 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 23 பேர் காங்கேசந்துறைத் தடுப்பு முகாமிலும் மூன்று பேர் ஞானம்ஸ் ஹோட்டலிலுள்ள 512ம் படையணியின் முகாமிலும் வைக்கப்பட்டுள்ளனர்.

செல்வராஜ் லவன்ராஜ் (12) யாழ்.மத்திய கல்லூரியில் ஏழாம் ஆண்டு கல்வி கற்கும் மாணவன். யாழ்ப்பாணம் ஒட்டுமடத்தைச் சேர்ந்தவர். இவரை நவ.4ம் திகதியிலிருந்து காணவில்லை எனப் புகார் செய்யப்பட்டுள்ளது.

இராசையா தவராசா(32) இருபாலை, கோப்பாயைச் சேர்ந்தவர். நவ.5ம் திகதி கடைக்குப் போனவர் திரும்பி வரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

பூபாலசிங்கம் உதயகுமார் (23) காளிகோவிலடி, கொக்குவிலைச் சேர்ந்தவர். இறைச்சிக் கடைத் தொழிலாளி. ஐந்து வயதுக் குழந்தை ஒன்றின் தந்தை. இவரது வீட்டிற்கு இவரைத் தேடி வந்த படையினர் இவர் இல்லாததால் குடும்ப அட்டை, இவரது படம், அடையாள அட்டை என்பவற்றைப் பெற்றுச் சென்றனர். இதன் பின்னரே இவர் காணாமல் போயிருக்கிறார்.

மாணிக்கம் நாகேஸ்வரன்(26) சுப்பர்மடம், பருத்தித்துறையைச் சேர்ந்தவர். நவ.3ம் திகதி இவரைத் தேடிப் படையினர் இவரது வீட்டிற்குச் சென்றிருக்கிறார்கள். இவர் அச்சமயம் வீட்டில் இல்லாததால் மறுநாள் வீட்டார் இவரைப் பருத்தித்துறை முகாமில் ஒப்படைத்தனர். அதற்குப் பிறகு இவரைப் பற்றிய தகவல் எதனையும் உறவினரால் பெறமுடியவில்லை.

கரணவாயைச் சேர்ந்த ஆறுமுகம் சந்திரமோகன் (25) நவ.5ம் திகதி படையினரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

ஐயாத்துரை பாஸ்கரன்( 20) குடத்தனை, வடமராட்சியைச் சேர்ந்தவர். இவரும் நவ.5இல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார். யாழ்.கல்வியங்காட்டில் மேலும் இரு இளைஞர்கள் படையினரால் கைது செய்யப்பட்டு தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கல்வியங்காடு,புதிய செம்மணி வீதியைச் சேர்ந்த இராசையா சிவகுமாரன் (16) என்ற இளைஞர் நவ.3ம் திகதி இரவு பத்தரை மணியளவில் அவரது இல்லத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

கல்வியங்காடு விளையாட்டரங்க வீதியைச் சேர்ந்த கனகலிங்கம் அஜந்தன் (19) ) என்ற இளைஞர் நவ. 5ம் திகதி இரவு 7.15 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர்களின் கைது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி எஸ்.சிறீதரன் படையினருடன் தொடர்பு கொண்ட போது சந்தேகத்தின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும், விசாரணைக்குப் பின்னர் இவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

## யாழ். ராணுவ முகாமுக்குள் நடந்தது கொலை ?

படையினரின் தடுப்புக்காவலில் இருந்த போது மரணமான நாயன்மார்க்கட்டைச் சேர்ந்த ராஜரட்ணம் உதயகுமார் என்பவரின் மரணம் தற்கொலையென நவ.01ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு திடீர் மரண விசாரணை அதிகாரி எட்வர்ட் அஹங்கம தீர்ப்பளித்தார்.

யாழ்ப்பாணம் நல்லூர் வீதியிலுள்ள இராணுவச் சோதனைச்சாவடி ஒன்றில் வைத்து ஒக்.23ம் திகதி சந்தேகத்தின் பேரில் உதயகுமார் கைது செய்யப்பட்டிருந்தார்.

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலைக்கு சென்று விட்டுத் திரும்பி வீடு நோக்கி வந்த போதே சோதனைச் சாவடியில் வைத்து இவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தினரின் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட இவரை அதே மாதம் 27ம் திகதி விடுதலை செய்யப் போவதாக இராணுவத் தரப்பிலிருந்து அவர் மனைவிக்கு தகவல் கொடுக்கப்பட்டது. மேலும் குறிப்பிட்ட தினத்தில் கிராமசேவையாளருடன் வர வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

27ம் திகதி இராணுவத்தினரிடம் சென்ற போது யாழ்ப்பாணம் மருத்துவ மனைக்குச் சென்று உதயகுமாரைப் பார்க்குமாறு கூறப்பட்டிருந்தது. அங்கு சென்று பார்த்த போது உதயகுமார் இறந்து காணப்பட்டார்.

27ம் திகதி காலையில் விடுதலை செய்யப்படவிருந்த உதயகுமார் அதிகாலை 2மணிக்கும் 2.45 க்கும் இடைப்பட்ட நேரத்தில் கழுத்தில் சுருக்கிட்டுக் கொண்டு இறந்துள்ளார் என்று கூறப்பட்டது. யாழ்ப்பாண வைத்தியசாலையில் வைத்து சடலம் 28 ம் திகதி அடையாளம் காட்டப்பட்ட போது வைத்திய அதிகாரி கே. கேசவன் சடலத்தின் கால்களில் விலங்கிட்டு வைத்திருந்த அடையாளங்கள் காணப்பட்டதாகக் குறிப்பிட்டிருந்தார்.

இந்த மரணத்தில் சந்தேகம் இருப்பதாக அறிவிக்கப்பட்ட பின்னர் பிரேத பரிசோதனை நடத்த சட்ட வைத்திய அதிகாரி மறுத்ததனால் சடலம் விமானம் மூலம் கொழும்பிற்கு கொண்டு வரப்பட்டு ஞாயிற்றுக்கிழமை கொழும்பு சட்டவைத்திய அதிகாரி அல்விஸ் மூலம் பிரேத பரிசோதனை நடத்தப்பட்டது.

உடலின் பின்புறம் உட்காயங்கள் இருப்பதாகவும் கழுத்தில் சுருக்கிடப்பட்டதனால் மூச்சுத்திணறி மரணம் சம்பவித்துள்ளதெனவும் முதல் நாள் இரவு இறந்தவர் ஆகாரம் உட்கொள்ளவில்லையென்றும் அவரின் பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனையின் பின் இறந்தவரின் சகோதரர் முறையான சிவகுருதாசன் என்பவரிடம் வாக்கு மூலம் பெறப்பட்டது.

இதன் பின் மரண விசாரணை நடத்திய திடீர் மரண விசாரணை அதிகாரி எட்வேர்ட் அஹங்கம தற்கொலை மரணமென தீர்ப்பளித்தார்.

இறந்தவரின் சடலம் மிகவும் பழுதடைந்த நிலையில் காணப்படுவதாலும் யாழ்ப்பாணம் கொண்டு செல்ல முடியாத நிலைமையிருப்பதாலும் இறுதிக் கிரியைகள் நவ.2ம் திகதி திங்கட்கிழமை கொழும்பில் இடம்பெற்றது

இதேவேளை இச்சம்பவத்தைக் கண்டித்து மனித உரிமைகளுக்கான மன்றம் அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

ராஜரட்ணம் உதயகுமார் நல்லூரில் உள்ள சோதனைச் சாவடியில் இராணுவத்தினரால் 23 ஆம் திகதி கைது செய்யப்பட்டார். வெறும் சந்தேகத்தின் மீது கைதான இவரை அவர்கள் தடுத்து வைத்திருந்தனர் இவ்வாறு தடுத்து வைக்கப்படுவோரை அவரது உறவினர்களோ நண்பர்களோ சென்று பார்க்க அனுமதி வழங்கப்படுவதில்லை. யாழ்ப்பாணத்தில் இன்றுள்ள நடைமுறை இதுதான். அனுராதபுர நீதிமன்றத்தில் அவர் ஆஜராக்கப்பட்டால் மட்டுமே அங்கு சென்று சந்திக்க முடியும்.

இவரின் மரணம் தொடர்பாக பிரேத பரிசோதனை நடத்த யாழ்ப்பாணத்திலுள்ள சட்ட வைத்திய அதிகாரி மறுத்து விட்டதாக சொல்லப்படுகின்றது. எனவே தான் சடலம் பிரேத பரிசோதனைக்காக கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டிருந்தது. அதன்படி பிரேத பரிசோதனையும் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் நடந்திருக்கிறது.

சுருக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டதாகவே கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நாங்கள் இதில் ஏதோ தகிடுதத்தம் நடந்திருப்பதாக சந்தேகப்படுகிறோம். இந்தத் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதே எமது நிலைப்பாடாகும்.

எனவே இந்த மரண விசாரணை, பிரேத பரிசோதனை தொடர்பான நடைமுறையை மீள்பரிசீலனை செய்து மறு விசாரணைக்கு உத்தரவிட்டு நீதி கிடைக்க வழிசெய்ய வேண்டுமென்று நாங்கள் கேட்டுக் கொள்கிறோம் என அது தன் அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

கைது செய்யப்பட்டவர் இராணுவ முகாமில் வைத்து கொல்லப்பட்ட இரண்டாவது சம்பவம் இது.

வெளியிடுபவர் : ச. பாலகிருஷ்ணன். இல. 18/02. அலோ சாலை. கொழும்பு 03. அச்சுப் பதிப்பு : பிறின்ற இன். இல. 07. கேகடிய இடம். சிறிமல் உயன. இரத்மலானை. 10.11.1998